2944

T.N.L.A. Debates

Official Report

Vol 27 No 1

9th May 1986

D I
211,31 N86
N86-27.1
136489

வெளியீடு 16 12-1986]

[Issued 16-12-1986

906/87
2944

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 9, 1986 - தொகுதி 27 எண் 1

Friday, 9th May 1986 - Volume 27 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600009

விலை ரூ. 3-00]

[Price Rs. 3-00

D
V211,31 N86
N86·27·1
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136489
சென்னை-600 008.

உள்ளடக்கம்

1986, மே 9, வெள்ளிக்கிழமை

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் i—iii

Personnel of the Government of Tamil Nadu v—vi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் vii—viii

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்) ix—xvi

1. வினாக்கள்—விடைகள்:
உடுக்குறியிட்ட வினாக்கள் 1—35

2. தகவல் கோரல் :
(அ) கவிஞர் இரவீந்திரநாத் தாகூருக்குப் புகழஞ்சலி. 35—37
(ஆ) திரு. காமராசர் நினைவாலயம் பராமரிப்பு குறித்து. 37—38
(இ) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்படும் என்கிற கருத்து குறித்து. 38—39
(ஈ) பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு குறித்து. 39
(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். 39—40
(ஊ) மாநிலங்கள் அவையில் நடந்த விவாதம் குறித்து. 40
(எ) திருச்சி நகரில் நிலவும் பதட்ட நிலை 40—41
(ஏ) கோட்டூர்புரத்தில் கட்டப்பட்டுள்ள குடி தண்ணீர் தொட்டி குறித்து. 41—42
(ஐ) பல மாவட்டங்களில் நிலவிவரும் வறட்சி நிலைமை குறித்து. 42—50
(ஒ) அரசு அனுமதியின்றி நடைபெறும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறித்து. 50

3. அறிவிப்புகள் :
(அ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல். 50—51
(ஆ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல். 51—52

பக்கங்கள்

(இ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல். 52—53

4. கவன ஈர்ப்புகள் :

(அ) இராயபுரம் தொகுதியிலுள்ள மாநகராட்சிக் குடியிருப்புகளின் வாடகை உயர்வு. 54—57

(ஆ) விருதுநகர்-அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையில் உள்ள மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டுள்ளது குறித்து. 57—59

5. அரசினர் சட்டமுன்வடிவு :

நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1986 59—140

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 141—144

2944

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்)—இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத் திந்தியப் பணியாளர்கள், காவல். இலஞ்ச ஒழிப்பு, கால்நடை பராமரிப்பு. பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், பொது நிர்வாகம், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி, மற்றும் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொழிலாளர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல்பொருள் இயல் மற்றும் பயண இசைவுச் சீட்டு.

5. மாண்புமிகு திரு. க. இராசாராம்: [(தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் சர்க்கரைப் பாகு கழிவு.

10. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

11. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

12. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவுஅமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

13. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (ஆயத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்)—மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

14. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சமுதாய வளர்ச்சி, சத்துணவு.

15. மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

16. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :(வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

17. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

18. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

19. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

20. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.



21. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூகநலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர் திருத்த நிர்வாகம்.

22. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த்துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

23. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (பொதுப் பணித் துறை அமைச்சர்)—பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

24. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU SUNDER LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

1. The HON. Dr. M. G. RAMACHANDRAN (CHIEF MINISTER): Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

2. The HON. D. V. R. NEDUNCHEZHIAN (MINISTER FOR FINANCE): Finance, Revenue, General Administration, Legislature, Elections, Statistics, Youth Service Corps, Ex-Servicemen and Labour.

3. The HON. THIRU S. RAMACHANDRAN (MINISTER FOR ELECTRICITY): Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The HON. THIRU R. M. VEERAPPAN (MINISTER FOR INFORMATION AND RELIGIOUS ENDOWMENTS): Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Public, District Revenue Officers, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits. Planning, Archaeology and Passports.

5. The HON. THIRU K. RAJARAM (MINISTER FOR INDUSTRIES): Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

6. The HON. THIRU P. U. SHANMUGAM (MINISTER FOR LOCAL ADMINISTRATION): Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

7. The HON. THIRU C. ARANGANAYAGAM (MINISTER FOR EDUCATION): Education, Official Language, Tamil Development and Culture.

8. The HON. Dr. K. KALIMUTHU (MINISTER FOR AGRICULTURE): Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainge Board.

9. The HON. THIRU C. PONNAIYAN (MINISTER FOR LAW): Law, Courts, Prisons, Deputy Collectors Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Chits and Molasses.

10. The HON. DR. H. V. HANDE (MINISTER FOR HEALTH): Health and Environmental Pollution Control.

11. The HON. THIRU S. MUTHUSAMY (MINISTER FOR TRANSPORT): Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

12. The HON. THIRU S. THIRUNAVUKKARASU (MINISTER FOR FOOD): Food, Price Control and Census.

13. The HON. THIRU V. V. SWAMINATHAN (MINISTER FOR EXCISE AND HANDLOOMS): Prohibition excluding grant of Liquor Permits, Excise, Handlooms and Textiles.

14. The HON. THIRU R. SOUNDARARAJAN (MINISTER FOR NUTRITIOUS MEALS): Nutritious Meals.

15. The HON. THIRU T. VEERASAMY (MINISTER FOR COMMERCIAL TAXES): Commercial Taxes.

16. The HON. THIRU N. NALLUSAMY (MINISTER FOR HOUSING): Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

17. The HON. THIRU ANOOR P. G. JAGADEESAN (MINISTER FOR RURAL INDUSTRIES); Rural Industries including Village, Cottage and Small Industries.

18. The HON. THIRU T. RAMASAMY (MINISTER FOR REHABILITATION AND EMPLOYMENT): Employment and Training, Indians Overseas, Refugees, and Evacuees.

19. The HON. THIRU A. ARUNACHALAM (MINISTER FOR ADI DRAVIDAR WELFARE): Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

20. The HON. THIRU M. R. GOVENDAN (MINISTER FOR BACKWARD CLASSES): Backward Classes and Fisheries.

21. The HON. TMT. GOMATHI SRINIVASAN (MINISTER FOR SOCIAL WELFARE); Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

22. The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY (MINISTER FOR KHADI): Khadi, Bhoodan and Gramdhan.

23. The HON. THIRU Y. S. M. YUSUF (MINISTER FOR PUBLIC WORKS): Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

24. The HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN (MINISTER FOR CO-OPERATION): Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. சைதை சா. துரைசாமி
திரு. ஆர். வேங்கடரமணன்
திரு. பொன் முத்துராமலிங்கம்

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. வெ. சீதாராமன், பி.காம், பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்கள்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.
திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. ப. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ.ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல்.
திரு. மாகு. ஜோசப், பி. ஏ.

### எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கேசவராம், பி.ஏ.

திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. கோ. வெங்கட்டராமன்

தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம்.ஏ. (தமிழ்).

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 2 | அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 3 | அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 4 | அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 5 | அரிக்குமார், திரு. இரா. | பேரணமல்லூர் |
| 6 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 7 | அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 8 | அன்பழகன், திரு. க. | பார்க் டவுன் |
| 9 | அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 10 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 11 | அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 12 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 13 | ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | ஆண்டிமடம் |
| 14 | ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 15 | ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 16 | ஆறுமுகம், திரு. எச். ஜீ. | பென்னாகரம் |
| 17 | ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஓட்டபிடாரம் (செ.வ.) |
| 18 | ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 19 | ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 20 | ஆறுமுகம், திரு. மு. | சேலம்–2 |
| 21 | ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜீ. | பூந்தமல்லி |
| 22 | ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 23 | இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |
| 24 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25 | இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26 | இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 27 | இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28 | இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல் |
| 29 | இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம் |
| 30 | இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 31 | இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ.வ.) |
| 32 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33 | இராசாராமன்), திரு. எஸ். | பாபநாசம் |
| 34 | இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 | இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 | இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 40 | இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணா நகர் |
| 41 | இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44 | இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 | இளங்கோவன், திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47 | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 | எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57 | காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59 | கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60 | கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 61 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 62 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 63 | குப்புசாமி, திரு. வே. | செய்யாறு |
| 64 | குமர குருபர ராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம் |
| 65 | குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 66 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 67 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68 | கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69 | கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71 | சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73 | சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74 | சண்முகம், திரு. ப. உ. | மேல் மலையனூர் |
| 75 | சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |
| 76 | சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77 | சந்திரசேகர், திரு. மு. | முகையூர் |
| 78 | சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை |
| 79 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 80 | சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83 | சிந்தன், திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84 | சிவக்குமார், திரு. ஆர். | சமயநல்லூர் (செ.வ.) |
| 85 | சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 86 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 87 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89 | சிவராஜ், திரு. சு. | ரிஷிவந்தியம் |
| 90 | சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91 | சின்னச்சாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92 | சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 93 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94 சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95 சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96 சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 97 சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 98 சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 99 சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 100 சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 101 சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102 செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 104 செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர் மலை |
| 105 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106 செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 107 செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109 சேகர், திரு. கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 110 சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 111 சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 112 சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 113 சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114 சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115 ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116 டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117 தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118 தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119 தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120 தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ. வ.) |
| 121 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 122 தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ) |
| 123 தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.) |
| 124 தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ) |
| 125 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ) |
| 126 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 127 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 128 திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.) |
| 129 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130 திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131 தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132 தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133 துரை அன்பரசன், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134 துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135 துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136 துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137 துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138 தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140 நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141 நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142 நரசிம்மன், திரு. ப. மு. | பள்ளிப்பட்டு |
| 143 நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144 நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி–2 |
| 145 நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 146 நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147 நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150 பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம் |
| 151 பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152 பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153 பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154 பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155 பாண்டியன், திரு. பீ. எச். | சேரன்மாதேவி |
| 156 பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157 பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158 பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159 பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 160 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 162 | பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ) |
| 164 | பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165 | பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 166 | பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167 | பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168 | பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169 | பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170 | வெற்றிடம் | .... |
| 171 | பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172 | பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173 | புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174 | புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175 | பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 177 | பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178 | பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179 | பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு) |
| 180 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ) |
| 181 | பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 182 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 183 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 184 | மணவாளன், திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 185 | மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186 | மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி–1 |
| 187 | மனோகரன், திரு. கி, | புரசைவாக்கம் |
| 188 | மனோகரன், திரு. தி நா. கோ. அ. | திருநாவலூர் |
| 189 | மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 190 | மாதவன், திரு. செ. | திருப்பத்தூர் |
| 191 | மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 192 | மாரிமுத்து, [illegible] | குளத்தூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 193 | மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 194 | மீனாட்சி சுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 195 | முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 196 | முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 197 | முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 198 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 199 | முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 200 | முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202 | முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 205 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 207 | ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 | ராமஜெயம், திரு. ம. நா. | வானூர் (செ வ.) |
| 209 | ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210 | ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |
| 211 | ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212 | ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213 | லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ.வ.) |
| 214 | வடிவேல், திரு. கு. | கரூர் |
| 215 | வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர் |
| 216 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 217 | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |
| 218 | வீராணம்பலம், திரு க. வெ. | மேலூர் |
| 219 | வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 220 | வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222 | வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 223 | வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |
| 224 | வெங்கடாசலம், திரு. டி. எம். | பரகூர் |
| 225 | வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 226 | வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர் |
| 227 | வேணுகோபால், திரு. கே. வி. | தல்லி |
| 228 | வேலு, திரு. கூடலூர் இ. வி. | தண்டராம்பட்டு |
| 229 | ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 230 | ஜான் வின்செண்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 231 | ஜெகதீசன், திரு. சு. | அரவக் குறிச்சி |
| 232 | ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.) |
| 233 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | பிரான்சிஸ், திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் | அமைச்சர் |
| 2 | மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர் |
| 3 | மாண்புமிகு திரு. யா. லெ. மு. யூசுப் | அமைச்சர் |
| 4 | திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 9, வெள்ளிக்கிழமை.

சித்திரை 26, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு, 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல் ''

சொல்லும்போது கேட்டவரைத் தன்வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்.

### 1. வினாக்கள் —விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடந்தை காரனேவுன் மருத்துவமனை.

686—(*வினா எண் 5692) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை நகராட்சியால் நிர்வகிக்கப்படும் ''காரனேஷன் மெட்டர்னிடி ஹாஸ்பிடல்'' என்ற மகப்பேறு மருத்துவமனையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பெண் டாக்டர்கள் எவருமே இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சியைச் சேர்ந்த காரனேஷன் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த பெண் மருத்துவ அலுவலர் டாக்டர் ராஜம் 1983-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் முதல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். தாய்சேய் நல விடுதி மருத்துவ அலுவலர் டாக்டர் சாவி மகானி அந்தப் பதவிக்கான பொறுப்புக்களைக் கவனித்து வந்தார். 1986-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 22-ஆம் நாளன்று புதிய மருத்துவ அலுவலர் டாக்டர் ஹெபிஷா பீ அந்தப் பதவியின் பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியால் நடத்தப்படும் இப்படிப்பட்ட 'மெட்டர்னிட்டி ஹாஸ்பிடல்களை' அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் கொள்கைகள் பற்றி கேட்கக் கூடாது என்ற மரபு இருக்கிறது. எனவே அதைப்பற்றி நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

## கோவை நகரில் சிமெண்ட் சிலாப்புகள் பதித்தல்

687—(*வினா எண் 8254) திரு. மு. இராமநாதன் மற்றும் திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்திலுள்ள எல்லா வார்டுகளிலும் சந்துகளுக்கு சிமெண்ட் சிலாப் போடுவது உட்பட பழுது பார்க்கும் பணிகள் அனைத்தும் செயலிழந்து நகரம் சுகாதாரக் கேடாக இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) இந்தப் பணிகளை நிறைவேற்றிட மாநகராட்சியிடம் நிதி இல்லை என்பது உண்மையா ?

(இ) தெருக்களைப் பழுதுபார்க்கக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கோவை மாநகரத்தில் அனைத்துப் பகுதிகளும் பார்வையிடப்பட்டு, தேவைப்படும சந்துகளில் சிலாப் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் ஸ்தல ஆய்வுகள் மற்றும் பொதுமக்கள் முறையீட்டின் பேரிலும் அவசியமான இடங்களில் சுகாதார நலன் கருதி சிமெண்ட் சிலாப் அமைக்கப்பட்டு, கோவை மாநகராட்சி சுகாதாரத்துடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மாநகராட்சியிடம் இப்பணிகளுக்கு உரிய நிதி வசதி உள்ளது.

(இ) தேவைப்படும்போது மாநகராட்சியின் கோரிக்கைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறாக எண்ணிக் கொள்ளக் கூடாது. எல்லாச் சந்துகளும் பார்வையிடப்பட்டு சிமெண்ட் சிலாப் போடப்பட்டு இருக்கிறது என்று ஒருவேளை அதிகாரிகள் கொடுத்த குறிப்பை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் படிக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதே மாநகராட்சி அதிகாரிகளோடு நேரடியாக பார்வையிட்டு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், 6 மாதங்களுக்கு ஒரு முறையும் இன்ஸ்பெக்ஷன் செய்து, பழுதுபட்டு இருக்கின்ற சந்துகளில் சிமென்ட் சிலாப் போடுவதற்கு உத்தரவிடப்பட்டும், அங்கே நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் அந்தப் பணிகள் 10 ஆண்டுக் காலமாக செய்யப்படாமல், சிமென்ட் சிலாப் போடப்படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு தங்கள் மூலமாக நான் சொல்லி கொள்ள விரும்புவது, அருள்கூர்ந்து மெயின்டெனன்ஸ் என்ற முறையில், அதுவும் குறிப்பாக நகராட்சியாக இருந்து மாநகராட்சியாகப் புதிதாக மலர்ந்து இருக்கிற கோவை மாநகராட்சிக்கு இந்த அடிப்படைக் காரியங்களை, சுகாதாரக் கேடுகளை நீக்குகின்ற முறையில், செய்வதற்கு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் எடுப்பார்களா, உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் கொடுப்பதை வைத்துக்கொண்டுதான் பதில் சொல்ல முடியுமே தவிர வேறு எதையும் வைத்துச் சொல்ல முடியாது. எந்த வேலையுமே நடைபெறவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். என்னிடத்திலே அதற்கான பட்டியல் இருக்கிறது. 1985–86 ஆம் ஆண்டில், 20 இடங்களில் ரூ. 3,45,900 செலவு செய்யப்பட்டு இருக்கிறது. 1986–87-க்குச் சுமார் 20 இடங்களில் ரூ. 5,80,500 செலவு செய்வதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே 20 இடங்களில் போடப்பட்டு இருக்கிறது. வேண்டுமென்றால் பட்டியலைப் படிக்கிறேன். ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடக்கவில்லை என்று புகார் கொடுத்தால், அதைப்பற்றி உள்ளபடியே விசாரித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியோடு புதிதாக சேர்க்கப்பட்டு இருக்கிற தொகுதியான பேரூர் பகுதியில் பல்வேறு அடிப்படை வசதிகள் செய்யப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே அமைச்சர் அவர்கள் அதில் தனிக்கவனம் செலுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு இடத்தைப் பற்றிச் சொல்வார்களானால், அதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி அதிகாரிகளை 3 முறை இன்ஸ்பெக்ஷன் என்ற முறையில் குறிப்பாக கோவை மேற்குத் தொகுதிக்கு அழைத்துச் சென்று இருக்கிறேன். $1\frac{1}{2}$ கோடி ரூபாய்ச் செலவில்

முதல் பட்ஜெட் தயாரித்து, இந்தமாதிரி ரோடுகளில் சாக்கடைகளுக்கு ரிவெட்மென்ட் கட்டுவது, சிமென்ட் சிலாப் போடுவது ஆகிய மெயின்டெனன்ஸ் காரியங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறதே தவிர அந்தக் காரியங்கள் செய்யப்படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்களிடத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, புதிதாக மாநகராட்சியாக வந்துவிட்ட காரணத்தால் இணைக்கப்பட்டப் பகுதிகளுக்கும் செலவு அதிகமாக ஆகிறது. அதிகாரிகளை விசாரித்தால் அமைச்சர் அவர்களிடத்திலே சொல்வதைப்போல் என்னிடத்திலே சொல்ல மாட்டார்கள. நிதி ஆதாரம் குறைவாக இருக்கிற காரணத்தாலே மெயின்டனன்ஸ் வேலைகளைச் செய்ய முடியவில்லை என்கிறார்கள். தனியாக, நிதி ஆதாரங்களுக்கு வழிசெய்து இதுபோன்ற புதிய கார்ப்பரேஷன்களுக்கு, இந்த மெயின்டனன்ஸ் ஏற்பாடுகளுக்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு உண்மையைச் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகள் அவர்களோடு சென்று எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்து 1½ கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரித்தார்கள் என்று சொல்கிறார்கள். அந்த அதிகாரிகள் இந்த விவரங்களை அவர்களிடத்திலே சொல்லியிருப்பதைப் போன்று, என்னிடத்திலே அந்த விவரங்கள் கொடுக்கப்படவில்லை. ஆகவே அதிகாரிகள் அவர்களுடன் அதிக நெருக்கமாக இருப்பது இதிலிருந்து புரிகிறது. 20 இடங்களுக்கு ஏற்கனவே 3 லட்சத்து 45 ஆயிரப் ரூபாய் சென்ற ஆண்டு செலவு செய்ததாக பட்டியல் கொடுத்து இருக்கிறார்கள். அந்த வேலைகள் நடந்திருக்கின்றனவா என்றுதான் பார்க்கவேண்டும். அந்தவேலைகள் நடக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கலாம். எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன என்று நான் சொல்லவில்லை. நடக்க வேண்டியவை செய்யப்பட வேண்டியவை இன்னும் இருக்கின்றன. இந்த ஆண்டுப் 20 பட்டியல்கள் போடப்பட்டிருக்கின்றன. நகராட்சி நிதி இருக்கிறது என்று குறிப்பு கொடுத்து இருக்கிறார்கள். நிதி ஆதாரங்கள் போதவில்லை என்று சொன்னால் அரசு இதுபற்றி பரிசீலிக்கும்.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தைச் சொல்லும்படி கேட்டார்கள். குறிப்பாக வேலாண்டிப்பாளையப் பகுதியில் உள்ள ஜவஹர் நகரில் இது போன்ற ஸ்லாப் போடுகின்ற வேலைகள் தொடங்கப்படவே இல்லை. அதுபோல் 'South Housing unit' மற்றும் 'North Housing unit'-லும் சுகாதாரக் கேடுகள் ஏராளமாக இருக்கின்றன. பலமுறை நாங்கள் புகார் செய்தும் அது தீர்க்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பது குறித்து அரசு கவனம் செலுத்தும்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 2 வருஷத்திலே 3 லட்சம் ரூபாய் இந்த ஸ்லாப் போடுவதற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். (குறுக்கீடு) சரி. 1 வருஷத்திற்கு 3 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்லாப்-க்கு என்ன 'காஸ்ட்' ஆகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எவ்வளவு தூரத்திற்கு அந்த ஸ்லாப் போடப்பட்டிருக்க முடியும் என்பது பற்றியும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நான் சொல்ல விரும்புவது, கோவை மாநகராட்சியிலே உள்ள அதிகாரிகளை நான் குறை சொல்லவில்லை. எஸ். ஓ., கமிஷனர், இன்ஜினியர்கள் உட்பட நான் குறை சொல்லவில்லை. இவர்களை வார்டுகளுக்கு அழைத்துச் சென்று, கவுன்சிலர்கள் மாதிரி வேலை செய்ய வேண்டியிருக்கிறது. எம். எல். ஏ-க்களுக்கு ஏற்பட்டிருக்கிற தலைவிதி இது. இந்த நிலைமையிலே, அவர்களை அழைத்துக் கொண்டுபோனால்தான் அவர்கள் பார்க்கிறார்கள் ; அவர்கள் திட்டம் தயாரிக்கிறார்கள். அவர்களுக்கு நிதி கிடையாது. அதுதான் உண்மை. உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியிலுள்ள காந்திபுரத்திலே 10 வீதிகள் இருக்கின்றன. அந்த இடத்திலே கடைசிவரைக்கும், அநேகமாக ஜனங்கள் நெருக்கமாகக் குடியிருக்கிற சந்துகளிலே ஸ்லாப்கள் போடப்படுவது கிடையாது. ஆகவே, அமைச்சருக்குக் கொடுத்திருக்கிற பட்டியலை அவர் வாசிக்கலாம். எங்களுக்கு ஆட்சேபணையில்லை. 100-க்கு 90 ஸ்லாப்கள் போடப்படவில்லை. 0·05 காசுக்குப் பெருங்காயம் வாங்கி கடலிலே கரைத்தால் என்ன வாசம் இருக்கும் ? அந்த மாதிரி நிலைமைதான் இருக்கிறது. இதில் ஒரு மாறுதல் செய்வதற்கு, விசேஷ நிதியாக, அரசு கடன் கொடுத்தாவது அங்கே ஸ்லாப் போட நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 0·05 காசுக்குப் பெருங்காயம் வாங்கி கடலிலேகரைப்பதும், ரூ. 5 கோடிக்கு வாங்கி கரைப்பதும் ஒன்றுதான். இரண்டுக்குமே பலன் இருக்காது. மாநகராட்சி மூலமாக எல்லா இடங்களுக்கும் ஸ்லாப் போடப்பட்டு விட்டது என்று நான் சொல்லவில்லை. மாநகராட்சியின் நிதி ஆதாரத்தையொட்டி சென்ற ஆண்டு 3 லட்சத்து 45 ஆயிரத்து 900 ரூபாய்க்கு போடப்பட்டிருப்பதாக எனக்கு பட்டியல் கொடுத்து இருக்கிறார்கள். வேண்டுமென்றால் பட்டியலைக்கூட படிக்கிறேன். இந்த ஆண்டுக்கும் 20 பட்டியல்கள் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு செய்வதற்காக 5 லட்சத்து 80 ஆயிரத்து 500 ரூபாய்க்கு ஒரு பட்டியல் தயாரித்து இருக்கிறார்கள்.

மேற்கொண்டு, எந்த, எந்த இடங்களில் செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு எழுதி கொடுப்பாரேயானால் மாநகராட்சியைவிட்டு அதை செய்யச் சொல்கிறேன். மேலும் மாநகராட்சிகளுக்கெல்லாம் ஆலோசனைக் குழு ஒன்று அமைப்பதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. விரைவிலே அது அமைக்கப்பட்டவுடன், உறுப்பினர்கள் நேரடியாக மாநகராட்சியோடு தொடர்பு கொண்டு செய்யலாம்.

### காங்கேயம், பெருந்துறை வட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை

632 *(வினா எண் 4822) திரு கா. செ. பழனிச்சாமி, மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், பெருந்துறை வட்டங்களில் குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) காங்கேயம் மற்றும் பெருந்துறை வட்டங்களின் நகரப் பகுதிகளில் தற்போது குடிநீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை. பெருந்துறை வட்ட ஊரகப் பகுதிகளில் கடந்த ஆண்டு பருவ மழைக்கு முன்னர் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. வரும் கோடைக் காலத்தில் அந்த நிலையைத் தவிர்க்க, தமிழ்நாடு குடிநீர் வாரியம் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

(முற்பகல் 9-10)

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம், பெருந்துறை போன்ற வட்டங்கள் அமைந்திருக்கின்ற பெரியார் மாவட்டத்திலும், அதன் இதர பகுதிகளிலும், சத்தி வட்டத்திலும் இதுபோன்ற கடுமையான குடிநீர்ப்பஞ்சம் இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் வழங்குகிற கருத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.



திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது நகரப் பகுதியில் தற்போது குடிநீர்த்தட்டுப்பாடு ஏதும் இல்லை என்றும் கிராமப்புறப் பகுதியில் கொஞ்சம் தட்டுப்பாடு இருந்தது என்றும் கோடைக்காலம் வந்தால் சரியாக்கப்பட்டுவிடும் என்றும் கருத்து சொன்னார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை உள்ள நேரத்தில் வறட்சிப் பகுதியாக இருக்கிற பெரியார் மாவட்டத்தில் உள்ள அனைத்துப்பகுதிகளிலும் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தை ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டு வருவதற்கு அரசு செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆராயும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலே கை இறைப்பான், போர்வெல், இவை எல்லாம் இப்போது பொய்த்துப் போய் அவற்றில் தண்ணீர் வருவது இல்லையென்று சொன்னதில் அவற்றை எல்லாம் ரெவியு செய்து புதிதாக அவை போன்ற கை இறைப்பான்கள் அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகாரி பெருமக்கள் அவற்றை எல்லாம் ரெவியூ செய்து கணக்கெடுத்து இங்கே அரசுக்கு வருகிறது. இந்த ஆண்டும் பஞ்சம் வந்துவிடுமோ என்ற பயம் இருப்பதால் பொய்த்துப் போன கை இறைப்பான்களுக்குப் பதிலாக புதிதாக உடனடியாகப் பெற்று அவசர நடவடிக்கையின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காங்கேயம், பெருந்துறை போன்ற பகுதிகள் மிகவும் வறட்சியாக இருப்பதால் அங்குள்ள மக்கள் இதை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கும்—அதேபோல் மாநிலம் பூராவும் குடிநீர் பஞ்சம் இருக்கிறது. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து இதற்கு என்ன ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத் தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிதும் மனம் உவந்து 4 கோடியே 74 லட்சம் ரூபாய் திருவண்ணாமலைக்கு ஒதுக்கினார்கள். ஆனால் இன்று வரை அதற்காக மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாற்றுக் கட்சியினர் ஏதோ 4 கோடியே 74 லட்சம் ரூபாய் கிடைத்ததாக நான் பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாகக் கூறுகிறார்கள். எனவே அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்பற்றி விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் இது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அது எந்தக்கட்டத்தில் இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து பதில் சொல்ல முடியும்.

### ஆண்டிப்பட்டி—குன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

633—(*வினா எண் 4829)—திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி—குன்னூர் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் கீழ் ரெங்கசமுத்திரம், நாச்சியார்புரம், முத்தனம்பட்டி, அரப்படித்தேவன்பட்டி, சண்முகசுந்தரபுரம் போன்ற பதினொன்று கிராமங்களுக்குக் குடிநீர்வசதி செய்து தரும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்து தரப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஆண்டிப்பட்டி பேரூராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து, வினாவில் குறிப்பிட்டுள்ள 5 கிராமங்கள் உள்ளிட்ட 12 வழியோரக் கிராமங்களுக்குத் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள 6 கிராமங்களுக்கு எப்போது குடிநீர் வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதிலேயே 12 வழியோர கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே மக்கள் தொகை ஆயிரத்திற்குக் கூடுதலாக இருக்கின்ற கிராமங்களில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதமும், மக்கள் தொகை ஆயிரத்திற்குக் குறைவாக இருக்கிற



கிராமங்களுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் வீதமும் கிடைக்கும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1985ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10ஆம் நாள் முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்காபுரத்திற்கு 11/85 முதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### வடகாட்டில் வேளாண்மைக் கிடங்கு.

634—(*வினா எண்.8125):—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி வடகாட்டில் வேளாண்மைக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடமுள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம். இது குறித்து வேளாண்மை இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையிலுள்ளது.

(ஆ) பரிசீலனை செய்து உரிய ஆணை வெளியிடப்படும்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி தொகுதியில் வடகாட்டு கிராமத்தில் வேளாண்மைக் கிடங்கு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலேயே மக்கள் தொகை அதிகமாகக் கொண்ட கிராமம் அது. அதோடு மட்டும் அல்லாமல் மாவட்டத்திலேயே விவசாயத்தில் முதல் இடம் பெற்றுள்ள கிராமம் அது. இந்த வகையில் அதைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் அங்கே விரைவில் வேளாண்மைக் கிடங்கு அமைப்பதற்கு வழிவகைகளைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம்சாரா பணிகளின்கீழ் வரக்கூடிய செலவினங்களைக் குறைக்கவேண்டும் என்று அரசு முடிவை மேற்கொண்டு அதையொட்டி புதிய இடங்களில் ஏற்படுத்த 1985-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ம் நாள் முதல் தடை விதித்து இருந்தது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற கருத்தின் அடிப்படையில் நிதித் துறையோடு கலந்து ஆலோசித்து உரிய ஆணையை வெளியிடும்.

**விதைப் பண்ணைகளில் வழங்கப்படும் வீரிய விதைகள்.**

*635—(* வினா எண் 8876)*—**திரு. த. பழனி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விதை பண்ணைகள் உருவாக்கித் தரும் வீரிய விதைகளின் தரம் குறைந்துள்ளது என விவசாயிகள் கருதுவது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** விதைப் பண்ணைகளில் பயிரிடப்படும் பயிர்கள் சான்றளிப்புத்துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு, விதைகள் அவர்கள் மேற்பார்வையிலேயே சுத்திகரிக்கப்பட்டு, விதை பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கிய பின்னரே, கொள்முதல் செய்து வினியோகிக்கப்படுவதால், விதைகளின் தரம் குறையவோ, வீரியம் குறையவோ வாய்ப்பு ஏதுமில்லை. மற்றும் இவ்விதைகள் தரம் குறைந்துள்ளது என விவசாயிகளிடமிருந்து புகார்கள் வரவில்லை.

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதைப் பண்ணையிலே 1985–86-ல் என்ன விதைகள் எவ்வளவு விதைகள் தமிழகத்தில் விநியோகம் செய்யப்பட்டன என்பதையும், 1986-87 ஆம் ஆண்டுக்கு என்னென்ன விதைகள், எவ்வெவ்வளவு விதைகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, உள்ள விதைகள் எவ்வளவு என்கின்ற தகவல் என்னிடம் இல்லை. ஆனால் கடந்த ஆண்டு சான்று பெற்ற விதைகளில் இதுவரையில் விநியோகம் செய்யப்பட்டது; நெல் 14,820 மெட்ரிக் டன், கேழ்வரகு 297 மெட்ரிக் டன், சோளம் 463 மெட்ரிக் டன், வீரிய சோளம் 18 மெட்ரிக் டன், கம்பு 451 மெட்ரிக் டன், மக்காச் சோளம் 103 மெட்ரிக் டன்.

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எண்ணெய் வித்துக்கள் அடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அடங்காது.

**திரு. இரா. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து வாங்கும் சாதாரண நெல்லை, விதை என்று வாங்கி, அதையே நாம் டெப்போக்களில் வைத்து மீண்டும் விவசாயிகளுக்கு வழங்கும்போது தரமான விதையாக இலை என்று விவசாயிகள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



அதை வாங்குகிற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதோடு, இப்படி விவசாயிகளிடமிருந்து தனியாக நெல், விதை என்று எத்தனை டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, எவ்வளவு என்ற குறிப்பு இல்லை. ஆனால் சான்று அளிக்கப்பட்ட விதைகளைத்தான் வாங்கவேண்டும், கொள்முதல் செய்ய வேண்டுமென்று தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறோம். அதை மீறி தவறு நடந்த சூழ்நிலை இருக்குமானால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதைகள் தயாராகின்ற நிலையில் பதர்களும் சேர்ந்து இருப்பதன் காரணமாக, சரியான முறையில் காய வைக்காத நிலையில் அதை விதைக்கும்போது முளை வருவதில்லை என்று பொது மக்கள் கூறுகிறார்கள். நல்ல முறையில் பதர்களை நீக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, சான்று அளிக்கப்பட்ட விதைகளை வாங்கி விதைகள் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். பதர்களை நீக்குவது அரசினுடைய குறிக்கோள்.

**திரு. த. பழனி :** தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கோலியனூர் ஒன்றியத்திலும், கரணை ஒன்றியத்திலும் போதுமான அளவிற்கு விதைகள் கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அதுவும் குறிப்பாக மணிலா போன்று மானிய விலையில் கொடுக்கப்படுவது சரியான முறையில் கிடைப்பது இல்லை. எனவே போதுமான அளவில் அது கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா ? அதற்கு மேலும் ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

**திறந்தவெளிச் சிறைச்சாலைகள்**

*688—(*வினா எண். 4088)* **திரு. எஸ். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி சிங்கப்பட்டி பகுதியில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) அம்பாசமுத்திர தொகுதி சிங்கப்பட்டி பகுதியில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

689—(*வினா எண். 5491) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சட்ட துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னையில் புதிதாக திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னையில் புதிய தாக திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலையை வேறு இடத் திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ? அப்படியானால், இந்த இடம் எதற்காகப் பயன்படுத்தப்படும் ? மாற்றுச் சிறைச் சாலையைத் திறந்த வெளிச் சிறைச்சாலையாக அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மைய சிறைச்சாலையை புழல் பகுதிக்கு மாற்றக் கூடிய ஒரு திட்டம் அரசிடம் உள்ளது. அந்தப் புழல் பகுதியிலேயே சிறைச்சாலைக்கான பணிகள் முடிவுறும் தரு வாயில் இருக்கின்றன. இன்னும் சில மாதங்களில் சென்னை மத்திய சிறைச்சாலை அந்தப் பகுதிக்கு மாற்றப்படும்.

எம். எம். சி.யைப் பொறுத்தவரையில், போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்ட்டிட்யூஷனாக அதனுடைய நிலையை உயர்த்தவேண்டு மென்று அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிற காரணத்தினாலே, அதற்குத்தான் தரப்படும்.

(முற்பகல் 9–20)

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் அமைக்கப்படவுள்ளன ? சிறைச்சாலை என்றா லே, பாம்புகளும், பல்லிகளும் ஊறுகின்ற சிறைச்சாலையில்



வாடினேன் என்ற தவறான சில கருத்துக்களைப் பரப்பி வரு கின்ற இந்தச் சூழ்நிலையில் என்ன, என்ன அடிப்படை வசதிகள் இந்த திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அமைக்கப்படவுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலையைப் பொறுத்தவரைக்கும், கோவையிலே சிங்காநல்லூர் பகுதியிலே ஏற்கனவே ஒரு சிறைச்சாலை இருந்து வருகிறது. தஞ்சை யைப் பொறுத்தவரைக்கும் திறந்தவெளிச் சிறைச்சாலை இருந்த பகுதி தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டு விட்டது. அதை அடுத்து, தற்போது இன்னும் 4 இடங்களில் புதியதாக, திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைத்திட, அரசு திட்டத்தை வைத்து இருக்கிறது. அந்த அடிப்படையில், இராம நாதபுரம் மாவட்டத்தில் முத்துப்பட்டி என்ற இடத்திலேயும், தென்னாற்காடு மாவட்டத்திலே வெள்ளம்பாக்கம் என்ற இடத் திலேயும், செங்கை மாவட்டத்தில் வேங்கடமங்கலம் போன்ற 4 இடங்களில் மேலும் புதியதாக திறந்தவெளிச் சிறைச்சாலை களை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திறந்த வெளிச் சிறைச்சாலையைப் பொறுத்த வரைக்கும், ஒருவர் குற்றம் புரிந்துவிட்டால் அவர் குற்றவாளியாகவே வாழ்நாள் பூராவும் இருக்க வேண்டும் என்றில்லாமல், அவர் திருந்த வேண்டும், திருந்தி நல்ல குடிமகனாக வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு மனோதத்துவ ரீதியில் அதற்கு உறுதுணையாக இருக்கிற அமைப்பு, வசதிகள் அனைத்தும் திறந்தவெளிச் சிறைச்சாலை, யில் இருக்கவேண்டும் என்ற நோக்கோடு, அந்த அடிப்படையில் அவை அமைக்கப்படுகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சிறைச்சாலைகளில் கைதிகளுக்குத் திரைப்படங் களைக் காண்பிக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ? அப்படி என்றால் சிறந்த சமூக நீதி போதனைகளை வழங்குகின்ற திரைப்படங்கள் காட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நல்ல கருத்துக்களைப் போதிக் கின்ற சினிமாப் படங்களைப் பொறுத்தவரை, சிறைச்சாலை களில் அவை ஏற்கனவே காட்டப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் கடுமையான வெயில் காலத்தில் கைதிகள் வெயிலின் கொடுமையால் பாதிக் கப்படாமல் இருக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ? இதே மாதிரி, வேறு நாடுகளில் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரைப்படங்

களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். '' பல்லாண்டு வாழ்க '' என்று ஒரு படம் வந்திருக்கிறது. புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் படம். அந்தப் படத்தைப் போட்டால் கைதிகள் நிச்சயமாகத் திருந்துவார்கள். அதை அவர்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாப் படங்களைப் பொறுத்தவரைக்கும், சிறைச்சாலையிலே இருக்கின்றவர்களுக்கு நல்ல உணர்வுகளை ஊட்டக்கூடிய படங்கள் எதுவாக இருந்தாலும், அந்தப் படங்கள் அவர்களுக்குக் காண்பிக்கப்படும்.

திரு. ஏ. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் மத எதிர்ப்புக் கருத்துக்களையும், மதச்சார்பற்ற கருத்துக்களையும் உள்ளடக்கிய திரைப்படங்களைத் தயாரித்து, காண்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம் புரிந்தவர்கள் மீண்டும் குற்றம் புரியாமல் தவறை உணர்ந்து திருந்தி சமுதாயத்திற்கு நலம் பயக்கின்றவர்களாக, நல்ல குடிமக்களாக வாழக்கூடிய உணர்வுகளைப் பரப்பக்கூடிய திரைப்படங்கள் காட்டப்படும்.

திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, தஞ்சையிலே இயங்கி வந்த திறந்தவெளிச் சிறைச்சாலையானது, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். எனவே, அந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலையை வேறு இடத்திலே அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, புதிதாக இன்னும் 4 இடங்களில் திறந்தவெளிச் சிறைச்சாலைகளை அமைக்கின்ற திட்டத்தோடு, தஞ்சையிலே ஏற்கனவே இருந்த அந்தப் பகுதி, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு விடப்பட்டு விட்ட காரணத்தினால், தஞ்சையில் திருமலை சமுத்திரம் என்ற பகுதியில் புதிதாக திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்க அரசு திட்டமிட்டு இருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொல்கிற போது, 4 திறந்த வெளிச் சிறைச்சாலைகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிசீலனை எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. செ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்குன்றத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் வேலை முடிந்து விட்டதா? எந்த வருடம் சென்னையிலிருந்து அது மாற்றப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் பகுதிக்கு வருகிற சிறைச்சாலை திறந்த வெளிச் சிறைச்சாலை அல்ல. சென்னையில் உள்ள மையச் சிறைச்சாலை மிக்க நவீன வசதிகள் அதிகமாக இருக்கக்கூடிய அளவிற்கு இந்தியாவிலேயே முன் உதாரணமாக இருக்கக்கூடிய சிறைச்சாலையாக அங்கு கிட்டத்தட்ட ஆறு கோடி ரூபாய்ச் செலவில் இது அமைக்கப்படுகிறது. வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. இன்னும் சில மாதங்களில் இது மாற்றப்படும். செங்கை மாவட்டத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை வேங்கடமங்கலம் என்ற பகுதியில் அமைக்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது.

**நெல்லிக்குப்பத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்.**

690—(*வினா எண். 5222) திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நெல்லிக்குப்பத்தில் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் உயர்நீதி மன்றத்திடமிருந்தோ, வழக்குரைஞர் சங்கத்திடமிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ வரவில்லை. அவ்விதம் வரும்பொழுது நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**சத்துணவுக் கூடங்களுக்குச் சூரிய அடுப்புகள்.**

691—(*வினா எண். 5443) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக்கூடங்களில் '' சூரிய அடுப்பு '' மூலம் சமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இம்முறை எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் பரீட்சார்த்தமாக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 10 மையங்களில் 1985ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு எவ்வளவு செலவாகிறது? விறகைப் பயன்படுத்துவதற்கும் சூரியஒளி அடுப்பைப் பயன்படுத்துவதற்கும் ஏதாவது மாறுபாடு உண்டா? இதற்கு மைய அரசு ஏதாவது மானியம் வழங்குகிற நடவடிக்கைகள் இருக்கின்றனவா என்பதையும் இந்த முறை இலாபகரமானதாக இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட விவரங்களை அறிவதற்காகத்தான் தற்போது ஆய்வு நடைபெற்று வருகிறது. குறைந்தபட்சம் ஆறு மாதகாலம் அந்த ஆய்வை நடத்தியதற்குப் பிறகுதான் அதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரீட்சார்த்தமாக ஒரு மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்தில் பத்து மையங்கள் என்று சொன்னார்கள். அது ஆங்காங்கிருக்கிற எல்லா மாவட்டங்களிலும் எல்லா ஒன்றியங்களிலுமா அல்லது குறிப்பிட்ட ஒன்றியங்களில் இந்த முறை நடைமுறைப் படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் ஒரு இடத்தில் இதைப் பரீட்சார்த்தமாக ஆய்வு நடத்திப் பார்ப்பதின் மூலம்தான் நாம் ஒரு சுலபமான முடிவிற்கு வரமுடியும் என்பதால் மதுரை மாவட்டத்தில் இதைப் பரீட்சார்த்தமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்த எண்ணத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூரிய அடுப்பு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருந்த போதிலும்கூட— சத்துணவுக் கூடங்களில் பச்சை விறகை, எரியாத விறகை உபயோகப்படுத்துவதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே இந்தச் சூரிய அடுப்பைக் கொடுப்பது சாத்தியமாகிறவரை காஸ் ஸிலிண்டர் சப்ளை செய்யப்படுமா? அப்படி அந்த எரிவாயு கொடுக்கக்கூடிய அளவிற்கு ஒரு புதிய உத்தரவை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா, பரிவுகாட்டுவார்களா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி காஸ் அடுப்பு வழங்குவது, குழந்தைகள் இருக்கிற இடத்தில் அவ்வளவு உசிதமானதல்ல. ஆகவே அதை வழங்குவது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது பரீட்சார்த்தமாக அதற்கு ஆறு மாத அவகாசம் தேவை என்றார்கள். 1985-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளில் ஆரம்பிக்கப்பட்டது, இன்று 1986-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாளுக்கு வந்திருக்கிறோம். ஆறு மாத காலம் முடிந்துவிட்டது. இந்தப் பரீட்சார்த்த நிலை தீருவதற்கு இன்னும் காலம் தேவையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாத காலம் அந்தப் பத்து மையங்களில் வைத்து உபயோகித்த பிறகு அவர்கள் அவர்களது கருத்துக்களை வழங்குவார்கள். அதற்குப் பிறகு அந்தக் கருத்தை அதற்குரிய திறமை பெற்றவர்கள் ஆய்ந்ததற்குப் பிறகு சமூகநலத்துறை அதை ஆய்வு செய்ததற்குப் பிறகு அரசாங்கப் பரிசீலனைக்கு வரும். அதற்குப் பிறகுதான் அரசாங்கம் முடிவு எடுக்கும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் சூரிய அடுப்பு பயன்படுத்தப்படுவது சிக்கனப்படுத்துகிற நடவடிக்கையாக அமைகிறதா? இப்போது விறகு விலையெல்லாம் ஏறிப்போயிருக்கிறது. உமி, தேங்காய் நார்த்தூள் இவற்றைப் பயன்படுத்தும் அடுப்புகள் தயார் செய்து அவற்றைப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறார்களே, அதை அரசு பரிசீலிக்குமா? அப்படிப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு அடுப்பு தயாரிக்கப்பட்டிருப்பதாக பல பேர்கள் விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆனால் அதற்குத் தேவையான அளவிற்கு உமி, தேங்காய் நார்த்தூள் இவை கிடைக்குமா என்பதையும் பார்க்கவேண்டும். இவை, தமிழகத்தைத் தழுவிய பல இடங்களில் 66,000 மையங்கள் நடைபெற்று வருகின்றன. எல்லாயிடங்களிலும் போதிய அளவிற்கு உமி, தேங்காய் நார்த்தூள் கிடைக்குமா என்பதையும் பார்க்க வேண்டும். ஆகவே நமக்கு எல்லா சௌகரியங்களையும் தருகிற ஒரு அடுப்பபைத்தான் நாம் பயன்படுத்த முடியும்.

சத்துணவுக்குக் கூடுதல் நிதி.

692—(*வினா எண். 6488) திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களில் காய்கறி, விறகு போன்ற பொருள் வாங்க ஒரு மாணவனுக்கு வழங்கப்படும் 13 காசை, 20 காசாக உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு. திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற அதே நிலையைத் தான் நாம் இப்போது நீடித்துக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9-30)

திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையம் துவக்கப்பட்டு இப்போது 3 ஆண்டுகள் கடந்து விட்டன. அந்தக் காலத்தில் குழந்தை ஒன்றுக்கு 13 பைசா கொடுக்கப்பட்டது. அந்த 13 பைசாவில் விறகு, புளி, காய்கறி, இன்னும் அதற்கான உபகரணங்கள் எல்லாம் வாங்க வேண்டும். இப்போது 4 ஆண்டுகள் நிறைந்து விட்டன. இன்றைக்கு எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்து விட்டன. காய்கறிகூட இன்றைக்குத் தனியாகக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, விலைவாசி ஏற்றத்தால் குறைந்த பொருளை வாங்கி அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு, வருகின்ற ஆண்டிலாவது இந்த 13 பைசா என்பதை உயர்த்திக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை ஒன்றுக்கு 13 பைசா என்று வழங்குகிறோம். 50 குழந்தைகள் இருந்தால், 13 பைசா வீதம் ரூ. 6.50 வழங்குகிறோம். அது போதுமானது என்று அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்கும் அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் அது போதுமானது என்று கருதப்படுகிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த 13 பைசா கொடுப்பதென்பது எந்த ஆண்டு துவக்கப்பட்டது ? இப்போது இத்தனை ஆண்டுக் காலத்திற்குள் மற்றப் பொருள்களின் விலையெல்லாம் உயர்ந்து இருக்கும்போது, குழந்தைகளுக்கு மட்டும் இது போதுமானது என்று அதிகாரிகள் சொல்வதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவ்வாறு அதிகாரிகள் சொன்னாலும்கூட, எதிர்காலத்தில் இதை உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக் கொள்வதோடு, அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகிய மூன்று பொருள்களும் தற்போது வழங்கப்படுவது நல்ல பொருள்களாக இருக்கின்றன. ஆனால் அவை தற்போது யார் அமைப்பாளர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் வீட்டிலே வைத்திருக்க வேண்டுமென்று இன்றைக்கு அரசு அறிவித்திருக்கிறது. அதனால், அந்தக் குழந்தைகளுக்குத் தரக்கூடிய பொருள்கள் அவர்களுக்கு முழுமையாக வந்து சேரவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதை மாற்றி, அந்தப் பொருள்களைப் பொதுவான ஒரு இடத்திலே வைத்து, அதை எடுத்துக் கொடுக்கின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு, ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைக்கு 13 பைசா என்று வழங்குவதில், காய்கறிக்கு 5 பைசாவும், எரிபொருளுக்கு 5 பைசாவும், தாளிப்பதற்கு 3 பைசா என்றும் வழங்கப்படுகின்றது. பொதுவாக, இந்தக் குழந்தைகள் நல மையங்களிலும், பள்ளி மையங்களிலும் உள்ள அமைப்பாளர்கள் இதை அங்குள்ள எண்ணிக்கையோடு பெருக்கிப் பார்த்து, போதுமானதாக இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. அன்றைக்கு எந்த அளவு கொடுக்கப்பட்டதோ, அதே நிலையில் இன்றைக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. அது போதுமானது என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் அரசு இதை பரிசீலிக்கும். அடுத்து, தனியார்கள் வீட்டிலே அரிசி, பருப்பு போன்றவற்றை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப் போல் எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி வைத்திருக்கக்கூடாது என்று அரசு ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு, கு. ரமணி : தலவைர் அவர்களே, அமைச்சர் அவர்கள், 13 காசை 20 காசாக உயர்த்திக் கொடுக்கப்படுமா என்று கேட்டபோது ஒரு சத்துணவுக் கூடத்தில் உள்ள மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையோடு, இந்த 13 காசைப் பெருக்கி ஒரு தொகையைச் சொல்லுகிறார்கள். அப்படிப் பெருக்கிச் சொல்லுகிறபோது, தொகை பெரிதாகத் தெரியும். பிரச்சினை அதுவல்ல. 5 ரூபாய்க்குக் கம்மியாக கத்திரிக்காயோ, இதர வெஜிடபிளோ கிடைக்காது. அந்த அளவுக்கு விலை உயர்ந்திருக்கிறது. அதே மாதிரி எரிபொருள் விலை, விறகு விலை ஆகியவையும் உயர்ந்திருக்கின்றன. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் யோசித்து, நாங்கள் கேள்வி கேட்காமலேயே இந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பார்களா ? இல்லையென்று சொன்னால், தரம் குறைந்த பொருளைத்தான் வாங்கிப் போடுவார்கள். அதோடு பொருளின் அளவும் குறைக்கப்படும். அதைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே, கட்டாயமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அது முறைப்படி செய்யப்படுமா ? அந்த வகையிலே உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் முன்பே சொன்னேன், அதையும் அரசு பரிசீலிக்கும் என்று.

திரு. சி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படுவதால் பலயிடங்களிலே இலாபத் தொகையாகப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் இருப்பிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த இலாபப் பணத்தை மீண்டும் சத்துணவுத் திட்டத்திற்கே பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சத்துணவுக் கூடத்தின் மூலமாக வரும் இலாபத் தொகை சத்துணவுக் கூடத்திற்கே பயன்படுத்தப்படுமா என்று கேட்கிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கம், காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகும். ஆகவே, அவர்கள் வாழ்விற்குப் பயன்பட வேண்டுமென்று அதை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் இலாபத்தைச் சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்துவதற்கு இயலாது.

திரு. எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் காய்கறிகளை வாங்குகின்றபொழுது தவறிழைக்கின்ற அமைப்பாளர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? Society மூலம் காய்கறி வாங்காத அமைப்பாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதைக் கவனிப்பதற்கு கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழு விரைவில் போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுதே கண்காணிப்புக் குழு இருந்து, ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படி ஏதாவது தவறு இருக்கிறது என்று சொன்னால் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்குக் கொடுக்கப்படும் காய்கறிகள், சங்கங்களின் மூலமாக வழங்கப்படுவதன் காரணமாக, விலையேற்றமாக இருப்பதோடு கூட, நல்ல பொருளாகவும் இல்லை என்று சொல்லப்படுகிறது. தனியார்களிடம் காய்கறிகளை வாங்கினால் நல்ல பொருளாகவும் கிடைப்பதோடு விலையும் குறைவாகக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சத்துணவு மையங்களுக்கு வேண்டிய காய்கறிகளைத் தனியார்களிடம் இருந்து வாங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக வாங்கப்படும் காய்கறிகளின் விலையைவிட, தனிப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து காய்கறிகளைக் குறைவான விலைக்கு வாங்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. காய்கறி உற்பத்தியாளர் சங்கம் தரும் காய்கறிகள் மிகக் குறைந்த விலையில் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் இருக்கின்ற குழந்தைகளுக்கு நபருக்கு என்ற முறையிலே கணக்கிட்டு காய்கறிக்குக் கொடுப்பது என்ற முறையை இப்பொழுதுவைத்திருக்கிறார்கள். நபர் ஒன்றுக்கு 5 கிராம் எண்ணெய் என்று வழங்குகிறார்கள் என்று தெரிகிறது. அப்படி நபர் என்ற அடிப்படையில் கணக்கிட்டுக் கொடுக்கின்றபொழுது எண்ணெயின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆனால் அதேசமயத்தில் காய்கறி வாங்கவும், விறகு வாங்கவும் தொகை குறைவாக இருக்கிறது. இதனால் பலயிடங்களிலே எண்ணெயை விற்றுக்கூட காய்கறிகளை வாங்குவதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, நபர் என்ற அடிப்படையில் கொடுப்பதைவிட, ஸ்லாப் முறையில் 50 பேருக்கு இவ்வளவு, 20 பேருக்கு இவ்வளவு என்ற கணக்கில் உணவுப் பொருட்களுக்குத் தொகையை வழங்குவார்களா ? மேலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக சுருக்கமாகக் கேளுங்கள். மானியம் முடிந்து 15 நாட்ககள்தான் ஆகின்றன.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : எனவே, இந்த நபர் என்ற அடிப்படையை மாற்றி, ஸ்லாப் முறையைக் கொண்டுவருவது பற்றி அரசு ஆராயுமா ? அவ்வாறு செய்தால் இந்தத் திட்டத்திற்கு அது பயனுடையதாக இருக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைத் துவக்குகின்ற பொழுது, இதை நபர் அடிப்படையிலே கொண்டு வருவதா அல்லது ஸ்லாப் அடிப்படையிலே கொண்டு வருவதா என்று வல்லுநர்கள் ஆய்வு செய்த பிறகுதான், நபர் அடிப்படையிலேயே கொண்டுவரப்பட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். எண்ணெய் தரப்படுவதைப் பொறுத்த வரையில் 5 கிராம் அல்ல, 3 கிராம் என்ற முறையில் வழங்கப்படுகிறது. அந்த 3 கிராம் என்பது மொத்தமாகத் தாளிக்கும்பொழுது போதுமானதாக இருக்குமே தவிர அதை விற்பதற்கான வழிவகை இல்லை.

## ஆதிதிராவிடர் நலனுக்குச் சிறப்புத் திட்டம்.

639—(*வினா எண். 645) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பஞ்சாயத்து யூனியனைத் தேர்ந்தெடுத்து அதில் வாழ்ந்துகொண்டிருக்கும் அரிசன மக்கள் பழங்குடி மக்களுக்காக வறுமைக்கோட்டைத் தாண்டி வளவாழ்வை நோக்கி நடைபோடச் செய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?**

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ): அவை
முன் விவர அறிக்கை **ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள்,
அவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருப்பதாகச்
சொன்னார்கள். நான் காமராஜ் மாவட்டத்தைச் சேர்ந்த
எம். எல். ஏ. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில்,
ஆதி திராவிட மக்களுக்கு, 15 மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றி
யங்களைத் தேர்ந்தெடுத்து அந்த மக்களுக்காக நல்வாழ்வுத்
திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்ற கருத்து தெரிவிக்கப்பட்
டுள்ளது. ஆனால் என்னுடைய மாவட்டம் அதில் விடுபட்டுப்
போய்விட்டது. காரணம் கேட்டால் புது மாவட்டம் என்று
சொல்லுவார்கள். அது அதிகாரிகளுக்குத் தெரியாதா? இப்
படிப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?
எவ்வளவு ஒன்றியங்களை வருஷத்திற்குத் தேர்ந்தெடுக்கிறீர்கள்?
இதை வைத்தாவது, வத்திராயிருப்பு ஒன்றியத்தை அங்கே அரிசன
மக்கள் அதிகமாக வாழ்வதால் அதைத் தேர்ந்தெடுப்பார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல,
அது புதிதாக பைபர்கேட் செய்த பிறகு இருக்கின்ற காரணத்
தினால் விடுபட்டுப் போயிருக்கும். ஆனால் அதற்கு முன்
ஒவ்வொரு ஆண்டும் 15 ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து,—
தமிழகம் முழுவதும் தேர்ந்தெடுத்து—சிறப்பு நிதித் திட்டத்தின்
மூலம் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு
உறுப்பினர் சொன்னதுபோல், இந்த ஆண்டு
1986—87-ல், அவருடைய ஒன்றியத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு
ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக்கட
மைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் 15 ஒன்றியங்
களைத் தேர்ந்தெடுத்து, அவைமூலமாக, சிறப்பு மத்திய நிதி
உதவியிலிருந்து, பல பலநோக்குத் திட்டங்கள், தயாரிக்கப்
பட்டு அவைமூலம் பயன்படும் வகையில், இந்தத் திட்டங்கள்
செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தத் திட்டத்தின் மூலமாக 1984—85ஆம் ஆண்டு எத்தனை
ஆதி திராவிட மக்கள் பயன் அடைந்துள்ளார்கள்? இதற்காக
அரசு எவ்வளவு செலவழித்துள்ளது? என்னுடைய மாவட்டத்
தைப் புறக்கணித்த அந்த அதிகாரிமீது தீண்டாமை
ஒழிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமா?

---

**142—144-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தைப் புறக்கணித்ததைப்
போல உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியல்ல.
அது விடப்பட்டிருக்கும். இந்த ஆண்டு சேர்க்கப்படும்.
1983—84-ஆம் ஆண்டு, ரூ. 8,12,000 செலவில் 9.719 பேர்கள்
இதன் மூலமாகப் பயன் அடைந்திருக்கிறார்கள். 1984—85-ல்,
ரூ. 5,59,000 செலவில் 7,025 பேர்கள் பயன் அடைகின்ற
சூழ்நிலையில் அந்த மக்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்
றன. இந்தத் திட்டத்தின் மூலமாக, குறிப்பாக, ஆதி திராவி
டர்கள் ஆயிரம் குடும்பங்கள் பயன் அடைகின்ற வகையில்தான்
இந்தத் திட்டங்கள் செயல்படுகின்ற நிலைமையிருக்கின்றது.
ஆதி திராவிடர்கள் ஆயிரம் பேர்கள் இருந்தால்தான் அந்த
ஒன்றியத்தை கிளஸ்டர் வில்லேஜாக தத்தெடுத்து அதன்மூலம்
இந்தத் திட்டம் செயலாக்கப்படும் சூழ்நிலையிருக்கிறது.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிகாரி மீது அன்டச்
சபிலிட்டி சட்டத்தின்கீழ் வழக்கு போடப்படுமா என்று
கேட்டார்கள். அதிகாரி, புறக்கணிக்கிற நிலையில் எதுவும்
செய்யவில்லை. இந்த ஆண்டு, அந்தத் திட்டம் செயல்படுவது
குறிப்பிட்ட இடத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த
நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1984—85-வது ஆண்டு இந்த கிளஸ்டர்
திட்டத்தின் மூலமாக, நிலக்கோட்டை எடுக்கப்பட்டது. அங்கே
10 இடங்களில், கிட்டத்தட்ட, ரூ. 2—3/4 இலட்சத்தில் ஒரு
கட்டிடம், ரூ. 1—3/4 இலட்சத்தில ஒரு கட்டிடம், ஆக, ரூ. 41/2 இல
ட்சம் செலவு செய்து கட்டிடங்கள் கட்டப்பட்டு இன்னும் சரியான
முறையிலே, முடிவு பெறாமல் இருக்கிறது. ஒவ்வொரு யூனி
யனிலும் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள கிட்டத்தட்ட ஆயிரம்
மக்களுக்கு மத்திய அரசு நிதியுதவியின் மூலமாக, இத்திட்டம்
செயல்படுத்தப்படுகிறது. துரிதமாக அந்த மக்களைத் தேர்ந்
தெடுத்து, விரைவிலே அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை
எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன
கருத்துக்களை ஏற்று, விரைவிலே செயல்படுத்த ஆவன நட
வடிக்கை மேற்கொள்ளப்படும்.

### பொம்மியன்பட்டி ஆதிதிராவிடர்களுக்குக் குடியிருப்புகள்.

**திரு. சே செம்மலை —*640 * வினா எண் 5179**

**மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்**
**களுக்கு விடையளிப்பாரா—**

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம் பொம்மியன் பட்டி ஆதி திராவிடர்களுக்கு ''தாட்கோ'' மூலமாக குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப் படும்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** (அ) ஆம்.
(ஆ) அரசின் ஆய்விலுள்ளது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் தமிழகம் முழுவதும் தாட்கோ மூலமாக எத்தனை வீடுகள் கட்டப்பட இருக்கின்றன என்ற விவரத்தையும் அதற்காக இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85ஆம் ஆண்டில் மட்டும் 3,222 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1 கோடியே 93 இலட்சம் ஒதுக்கப்பட்டு, செயல்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், 1986—87இல் இதய தெய்வம் புரட்சித் தலைவர் 5 இலட்சம் வீடுகள் கட்டுகின்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதன் காரணமாக, அதை எப்படிப் பல துறைகளில் விடலாம் ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ, ஹவுசிங் போர்ட், போன்ற இப்படிப்பட்ட நிறுவனங்கள் மூலமாக ஒதுக்கிக் கொடுத்து, செயல்படுகின்ற சூழ்நிலையில் அதை இந்த ஆண்டு செயல் படுத்துகின்ற திட்டம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதன் பிறகுதான் எத்தனை கோடி ரூபாயில் செயல்படும் என்பதைத் தெரிவிக்க முடியும்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, இந்தத் திட்டத்தின் மூலமாக ஒரு வீடு கட்டக் கொடுக்கப்படுகிற தொகைக் குறைவாக இருப்பதாக இந்த ஆதி திராவிட மக்கள் தெரிவிக்கிறார்கள். கொடுக்கப் படுகிற அந்தத் தொகையிலே, முழுமையாக அந்த வீடுகளைக் கட்ட முடியவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. எனவே, அந்தத் தொகைகளை உயர்த்திக் கொடுக்க அரசு பரிசீலித்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி அதிகப் படுத்துகிற நேரத்தில், எவ்வளவு தொகை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ 6,000 போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். என்னுடைய மானிய கோரிக்கையில் எல்லோரும் பேசினார்கள். அதன் காரணமாக ரூ, 6,000 என்பதை ரூ. 10,000 ஆக உயர்த்துகின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## தனியாரால் தவளை, இரால் ஏற்றுமதி.

693 —[* வினா எண்.1582ல்—திரு. இரா. தாமரைக்கனி, மற்றும் திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தவளை, நண்டு, இரால், நத்தை ஆகியவற்றை தனியார் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தவளை, நண்டு, இரால், நத்தை ஆகியவற்றை தனியார் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிப்பதைப் பற்றி கொள்கையளவில் முடிவெடுப்பது மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். இதில், மாநில அரசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. இந்திய வனவிலங்கு சட்டத்தில் தவளை மற்றும் தவளை பொருள்களை மாநில அரசுகள் ஏற்றுமதி செய்வதற்கு குறிப்பாக தடை ஒன்றும் இல்லை. ஆயினும், நண்டு, மற்றும் தவளை இனங்கள் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன் கீழ் அட்டவணை IVல் சேர்க்கப்பட்டிருப்பதால் இவ்வினங்களைப் பிடிப்பதற்கோ, விற்பதற்கோ மாநில தலைமை வனவிலங்கு பாதுகாவலரிடம் அனுமதி வாங்க வேண்டும். சுற்றுப்புற சூழ்நிலையை நிலைப் படுத்துவதில் தவளைகள் ஆற்றும் பணியைக் கருத்திலகொண்டு ஏற்றுமதி செய்வதற்காக வழங்கப்படும் தவளையின் அளவு படிப் படியாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சுற்றுப்புற சூழ்நிலையை நிலைப்படுத்துவது சம்பந்தமாக தவளைகள் பற்றி சொன்னார்கள். எவ்வாறு இந்த தவளைகள் சுற்றுப்புற சூழ்நிலையை நிலைப்படுத்துவதில் முக்கிய பணி எடுக்கிறது. அது மட்டுமல்லாமல் நமது நாட்டிலிருந்து தவளைக்கால்கள் ஏற்றுமதியாகின்றன. அதனால் அன்னியச் செலாவணி எவ்வளவு கிடைக்கிறது என்பதை அமைச்சர் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் பல்வேறு வகையான தவளைகள் உள்ளன. தண்ணீர் தவளைகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை மனிதர்கள் வாழும் இடங்களில் சுற்றியுள்ள சாணம், குப்பை, நிலங்களில் உழு பூச்சிகளையும், நெல் மற்றும் தென்னைக்குச் சேதம் விளைக்கும் புழு பூச்சிகளையும் உண்பதன் மூலம் மனித சமுதாயத்

திற்கு மிக்க நன்மையைச் செய்கின்றன. நீரில் உள்ள ஒட்டுல்லணி வகைகளும், உயிரினங்களையும், தெளிந்த நீர் நிலை மீன்களையும், மலேரியா போன்ற தொத்து நோய் உண்டாக்கும் கிருமிகளை பரப்பும் கொசு முட்டைகளையும், லார்வாக்களையும் உண்பதன் மூலமாக தொத்து நோய்கள் மனிதனிடையே பரவாமல் தவளைகள் தடுக்கின்றன. தவளைக் கால்களைத் தனியார் துறை வியாபாரிகள் ஏற்றுமதி செய்வதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11 கோடி அன்னியச் செலாவணி நமக்கு கிடைக்கிறது. தவளைச் கால்கள், மருந்துக்கும், உணவிற்கும் அயல் நாடுகளில் பயன்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக கிடைக்கப்பெற்ற புள்ளிவிவரப்படி 3,000 டன்கள் தவளைக் கால்கள் ஏற்றுமதியாகி இருக்கின்றன. 9,000 டன்கள் அதாவது 200 மில்லியன் தவளைகள் நம்நாட்டில் பிடிக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்களுக்கும், நெல் மற்றும் தென்னை போன்ற பயிர்களுக்கும் சேதம் விளைவிக்கும் புழு பூச்சிகளை இந்தத் தவளைகள் உண்கின்றன என்று இந்தக் கேள்வியின் ஆரம்பத்தில் சொன்னேன். அன்னியச் செலாவணி 11 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்க்கின்ற குளங்கள் தனியாருக்கு விடப்படுகின்றனவா ? அப்படி விடப்படுகின்றன என்றால் அதிலே எவ்வளவு பரப்பளவு மீன் குளங்கள் விடப்படுகின்றன? அப்படிப்பட்ட குளங்களில் மீன்விட அவர்களுக்கு ஏதாவது கடன் உதவி வழங்கப்படுகிறதா. அப்படி வழங்கப்பட்டால் அதிலே உற்பத்தியாகின்ற மீன்கள் எவ்வளவு ? வேறு ஏதாவது பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றனவா ? தனியார்களுக்கு எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியை மனதிலே வைத்துக் என்று கருதுகிறேன். இது தவளை, நண்டு தனியார் கேட்கிறார் ஏற்றுமதி பற்றிய கேள்வியாகும்.

மீன் வளர் போர் மேம்பாட்டு நிறுவனம்

694.—(* வினா எண். 7061) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக மத்திய அரசு ஒதுக்கி உள்ள தொகை எவ்வளவு ?



மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம். புதியதாக ஏற்படுத்தப்பட்ட காமராஜர் மற்றும் அண்ணா மாவட்டங்களில, மத்திய அரசின் நிதியுதவியுடன் இரண்டு புதிய மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவுவதற்கு கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) மத்திய அரசின் அங்கீகாரமும், நிதியுதவியும் எதிர்பார்க்கப்படுகிறது.

பனைமரங்கள் அழிக்கப்படுவதற்குத் தடை

695—(*வினா எண், 8989) திரு, எப், எம், இராசரத்தினம் மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயன் தரும் நிலையில் உள்ள பனைமரங்கள் அழிப்பதைத் தடைசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) இல்லை

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

(முற்பகல் 9—50)

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரங்களில் பதனீர் இறக்குகிற பணியைச் செய்பவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. பனை மரங்களை வைத்திருக்கின்ற தனியார் உடமையாளர்களுக்கு நல்ல பலன் கிடைக்காத காரணத்தாலே விறகுக்கும் மற்றும் பல்வேறு தேவைகளுக்கும் பனைமரங்கள் பெரும்பான்மையாக அழிக்கப்பட்டு வருகின்றன. இப்படியே போனால் இன்னும் 50 அல்லது 100 ஆண்டுகளில் பனைமரங்களையே பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம். எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பயன் தரும் நிலையில் உள்ள இந்தப் பனைமரங்களை அழிக்கக்கூடாது, வெட்டக் கூடாது என்று சுற்றறிக்கை ஏதேனும் வெளியிட, ஆணை வெளியிட அரசு அறிவுறுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை, பச்சை மரங்கள் உட்பட பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு

மலைப்பகுதி மரங்கள் பாதுகாப்புச் சட்டம் 1955-ன் படியும தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம் 1949ன்படியும் மரங்களை முன் அனுமதியின்றி அழிக்கக்கூடாது என்று இருக்கிறது. இதில் பனைமரங்களும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பதனீர் இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இன்றையதினம் இந்தப் பதனீர் இறக்கும் தொழிலில் 1,69,000 பேர் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பனைமரம் இப்போது அதிகமாக வெட்டப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு எந்த இடத்தில் பனைமரங்கள் வெட்டப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் எடுத்துக் கூறினால் அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங் களில் பரவலாக பனை மரங்கள் வெட்டப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பனைமரங்கள் அழிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றுவதற்காக நவீன விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு குட்டையான ஒட்டுப் பனைமரங்களை ஆண்டுதோறும் பதனீர் தருகின்ற மரங்களை, பலன் தரும் மரங்களை உற்பத்தி செய்கின்ற வகையில் பனைமரக் கன்றுகளை விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்தும் நோக்கம் ஏதேனும் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரம் எந்த இடத்தில் வெட்டப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு நட வடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குட்டைப்பனைமரம் பற்றி இப்போது ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்குச் சொந்தமான தோப்பிலே தங்களுடைய சொந்த உபயோகத்திற்காகப் பனைமரங்களை வெட்டினாலும் அரசாங்கம் வழக்கு போடுகிறது. அந்தமாதிரி வழக்கு போடுவது நியாயமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் பதில் கூறிய போது எடுத்துக் கூறி இருக்கிறேன். அரசுக்குச் சொந்தமான



புறம்போக்கு நிலங்களிலுள்ள சிறிய மற்றும் பச்சை மரங்களை வெட்டினால் வனத்துறைச் சட்டத்தின்படி குற்றமாகும். ஆனால் சொந்த நிலங்களிலுள்ள பனை மரங்களை அவர்கள் வெட்டிக்கொள்ளலாம். அதைப்பற்றி அரசு ஒன்றும் நட வடிக்கை எடுக்காது. அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள பச்சை மரங்களை வெட்டினால்தான் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இடைபொத்தை குளத்திற்கு நீர்வரத்து

696.—]*வினா எண். 3293) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பகுதியில் அமைந்துள்ள இடைபொத்தை குளத்திற்கு ஆதியான் குளத்தி லிருந்து கால்வாய் அமைத்து மணிமுத்தார் பெருங்கால் தண்ணீர் பெறச் செய்யும் பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இடைபொத்தை குளத்துக்கு ஆதியான் குளத்திலிருந்து கால்வாய் அமைத்து மணிமுத்தாறு பெருங்கால் தண்ணீர் பெறச் செய்யும் பணிக்கான செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

### நண்டலாற்றுக்குத் தாமதமாக நீர்வரத்து

697—*வினா எண்) 3809).—திரு. என். விஜயபாலன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி தாலுகா 175 திருக்களாச்சேரி வட்டம் பாலூர் கிராமத்தில் பாயும் நண்டலாற்றிற்கு ஒரு மாதம் கழித்தே தண்ணீர் வருவதால் அப்பகுதி விவசாயம் பாதிக்கப் படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) வீரசோழன் ஆற்றிலிருந்து கோவிந்த களகம் உபரி நீர்ப்போக்கி மூலம் பாசன நீர் அவ்வப்போது வழங்கப்படுகிறது.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 175 திருக்களாச்சேரி வட்டம் பாலூர் கிராமத்திற்கு நண்டலாற்றிலிருந்து ஒரு மாதம் கழித்துத்தான்

தண்ணீர் வருகிறது. அது வீரசோழன் ஆற்றின் பாசனம் என்பதை விட நண்டலாற்றின் பாசனமாகவே இருக்கிறது. அங்கு 4 அடிதான் தண்ணீர் விடப்படுகிறது. அதுவும் புதுவை மாநிலத்தின் காரைக்கால் பகுதிக்குத் தான் பயன்படுகிறது. ஆகவே பாலூர் கிராமத்திற்குக் பயன்பட வேண்டுமென்றால் 6 அடி அளவிற்குத் தண்ணீர் தேக்கிவிடப்பட வேண்டும். அந்த அளவிற்கு அரசு செய்யுமா என்பதுடன், நண்டலாற்றின் வாய்க்காலை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் தர அரசு முன் வருமா எனவும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அந்த மாவட்டத்தில் பல இடங்களிலும் வடிகால்வாய்கள்தான் பாசனக் கால்வாயாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அந்த வகையிலே ஒன்றுதான் இந்த நண்டலாறு வடிகால் ஆறாக மாறி அதன் வாயிலாக அது பாசனத்திற்குப் பயன்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அது கடைமடைப் பகுதியாக இருப்பதால் 3 அல்லது 4 வார காலம் அங்கு தண்ணீர் வருவதற்கு ஆகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அதற்கான மாற்று ஏற்பாடாகத் தான் வீரசோழன் ஆற்றிலிருந்து கோவிந்த களகம் உடரி நீர்ப் போக்கி மூலம் அவ்வப்போது தண்ணீர் விடப்படுகிறது. நீரேற்று இயந்திரங்கள் மூலமாக தண்ணீர் பெறுவது போன்ற ஒரு சில திட்டங்களைச் செயல்படுத்த முடியுமா என்ற அளவுக்கு சில யோசனைகளை, கோரிக்கைகளை அல்லது வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். அது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீரசோழன் ஆற்றிலிருந்து உபரிநீரை அங்கே தண்ணீர் பெறுவதற்காக திருப்பி விடப்படுகிறது என்று சொன்னார்கள். அங்கே போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதும், விவசாயம் செய்து முடிகிற நேரத்தில் தண்ணீர் போய்ச் சேருகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் நண்டலாற்றின் வாய்க்காலைத் தடுக்க வேண்டும், அது புதுவை மாநிலத்தின் பி.டபிள்யூ.டி.-யின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. அவர்களுக்கு 2½ அடி தண்ணீரே போதுமானதாக இருக்கிறது. 4 அடி தண்ணீரை இங்கே திருப்பிவிடுகிறார்கள். ஆனால் பாலூர் வட்டத்திற்கு 6 அடி தண்ணீர் தேவைப்படுகிறது. அந்த 6 அடி தண்ணீர் கிடைப்பதற்கு அரசு நண்டலாற்றின் வாய்க்காலை வெட்டி ஆழப்படுத்தி, அந்தப் பகுதி கிராம மக்கள் விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா ? அல்லது வேறு மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நண்டலாற்றின் வரலாற்றையே இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அரசிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லை. எனினும், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஏதேனும் அத்தகைய பணிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருப்பின் அவை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### முடிகொண்டான் ஆற்றில் ரெகுலேட்டர் அமைத்தல்.

698—(*வினா எண். 4573.) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வட்டம் முடிகொண்டான் ஆற்றில் சன்னாநல்லூர் அருகில் ரெகுலேட்டர் அமைத்து நெடுஞ்சேரியிலிருந்து குனாண்டிதரிசி வெளி வரை பாசன வசதியைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### நசுவினியாற்றை ஆழப்படுத்தல்.

699—(*வினா எண். 8910) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில், நசுவினியாறு, கடலில் கலக்கும் இடம் சுமார் 2 கி. மீட்டர் தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை அகற்றி, ஆற்றை ஆழப்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் நசுவினியாறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள பகுதிகளில் ஆற்றைச் சுற்றிலும் காடுகள்

பல வகையான காடுகள், மங்கனங்காடு, ராசியங்காடு, தந்தர நாயகிபுரம் காடு, கருங்குளம் காடு, கரிசக்காடு, முழுக்குக்காடு, அதிராம்பட்டினம், மழவேனில்காடு போன்ற காடுகள் அடர்த்தியாக இருந்து கொண்டு, இந்த ஆற்றின் நீர் கடலில் சென்று கலக்க விடாமல் தடுக்கிறது. அதனால் அந்தப்பகுதியில் உள்ள மக்களுக்கு விவசாயம் செய்ய முடியாமல் சிரமமாக இருக்கிறது. பயிர்கள் அழிந்துவிடுகின்றன. மழைக்காலங்களில் அந்தப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டு, வெள்ளத்திலிருந்து வெளியே வர முடியாமல் மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அந்தக் காடுகளை நீக்க வேண்டும் என்று நாங்கள் கலெக்டரிடம் மனு கூட கொடுத்தோம். அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ள 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒதுக்கிய தொகையில் $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய்தான் புல்டோசர்களுக்காக கொடுக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டது. மீதம் உள்ள $4\frac{1}{2}$ லட்சம் ரூபாயையும் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வியைப் பொறுத்தவரையிலும் நசுவினியாறு கடலில் கலக்கும் இடம் சுமார் 2 கி.மீ. தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை அகற்றி, ஆற்றை ஆழப்படுத்துவதைப் பற்றியதாகும். காடுகள் வளர்வது என்பது இயற்கையான ஒன்றாகும். அவ்வாறு காடுகள் அமைவது சுற்றுப்புற சூழலை, சீதோஷ்ணத்தை சம நிலையில் பாதுகாக்க உதவுகிறது. ஆகவே அந்த நிலையில் காடுகளை அழிக்க வேண்டுமென்றால் சுற்றுப்புற சூழல் துறையின் அனுமதியைப் பெற வேண்டிய நிலையில் இந்தத் துறை இருக்கிறது. அந்த முறையில் அதற்கான ஒப்புதலைப் பெற்றால் தான் மேற்கொண்டு பணிகள் மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் காடுகளை முழுமையாக அழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நசுவினியாறு கடலில் கலக்கும் இடத்தில் சுமார் 2 கி.மீ. தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை 50 அடி அகலத்திற்கு அகற்றுவதற்கு அனுமதியை வனத்துறையிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒதுக்கப்பட்ட பணத்தில் பாதியை நிறுத்திவிட்டார்கள். அதையும் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :—தலைவர் அவர்களே, வனத்துறை மூலமாக, சுற்றுப்புறச் சூழல் துறை மூலமாக ஒப்புதலைப் பெறுவதற்கு நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபடும். நிதி ஒதுக்கீட்டை பொறுத்தவரையிலும் ஒட்டு மொத்தமாக அந்தப் பகுதிக்கு, தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதி, அந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் அத்தனைபேரும் சேர்ந்து அந்தந்த பணிகளுக்கு வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்கிறார்கள். அப்படி ஒதுக்கீடு செய்கிறபோது சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவார்களேயானால் அதனை அந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னால் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். தேவைப்பட்டால் அரசு இதில் தலையிடும்.

கிண்டியிலுள்ள காமராஜர் நினைவாலயம்.

கு.கா.வினா எண் 10—(*வினா எண். 9139) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவாலயம் சரிவர பராமரிக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்து பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) கிண்டியிலுள்ள காமராஜ் நினைவாலயம் பராமரிக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்ற 13—4—1986ஆம் நாளன்று எங்கள் கட்சியின் மாநிலத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. இரா. செழியன் அவர்கள் கிண்டியிலுள்ள காமராஜர் நினைவாலயத்திற்கு மலர் வளையம் வைக்கச் சென்றிருந்த போது நினைவாலயத்தின் முன்னாலே இருந்த கேட் உடைந்து போன நிலையில் இருந்தது. புல்வெளிகள் காய்ந்து போயிருந்தன. அங்கே எந்தவிதமான பராமரிப்பும் இல்லை. நினைவாலயம் ஒட்டடை அடைந்து போய் கவனிக்கப்படாத நிலையில் இருந்தது. இந்த நிலை குறித்து ஜனதா கட்சியின் தலைவர் அவர்கள் தபால் மூலமாக மாண்புமிகு அறநிலையத் துறை

அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் எழுதியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நினைவாலயம் நல்ல முறையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நினைவாலயத்தை பார்த்து நல்ல முறையில் பராமரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, ஜனதா கட்சியின் தலைவரோ அல்லது வேறு யாராவதோ இது போன்ற குற்றச்சாட்டை எழுத்து மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாக தெரியவில்லை. காமராசர் நினைவாலயத்தைத் பராமரிக்க இரவு காவலர் ஒருவரும், பகல் காவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது நீங்கலாக தோட்டம், புல் வெளிகளைப் பராமரிக்க மூன்று பேர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த நினைவாலயத்தைப் பராமரிக்க இரவும், பகலும் பணியாளர்கள் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த முறையில்தான் நான் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னேன். மற்றபடி நினைவாலயத்தில் ஒட்டடை அடிக்கப்படவில்லை போன்ற சிறுசிறு குறைபாடுகள் இருக்குமானால் அவற்றை களைவதில் இந்த அரசுக்கு ஆட்சேபணை கிடையாது. நேரிடையாகப் பார்வையிட்டு இந்த சின்ன சின்ன குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதெல்லாம் நான் செய்யக் கூடிய நிலையில் உள்ளவை தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் நானும் அவர்களும் ஒன்றாக சேர்ந்து அந்த இடத்தைப் பார்வையிட முடியும்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, கிண்டியில் உள்ள காமராசர் நினைவாலயத்தின் பராமரிப்பு குறித்து தமிழ் நாடு ஜனதா கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய செழியன் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அவர்கள் அங்கே மலர் வளையம் வைத்து வணங்குவதற்குச் சென்றிருந்தபோது நினைவாலயம் சரியாக பராமரிக்கப்படவில்லை என்கிற கருத்தை எழுதியிருக்கிறார்கள். அந்த நினைவுப் பகுதிகள் செய்தித் துறையின் பொறுப்பிலே இருக்கின்றன. ஆனால் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்கள் இடத்திலே ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே இதன் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்களில் அங்கே பணியாற்றிக் கொண்டு இருப்பவர்களிடத்திலே விவரங்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் சில விவரங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தக் குறைபாடுகள் இனிமேல் சரி செய்யப்படும்: குறைபாடுகள் இனிமேல் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு



பொதுப் பணித் துறை அமைச்சருக்கு நேரடியாக தொடர்பு இல்லாத காரணத்தாலும் எப்படியோ இந்தக் கேள்வி அவர்களுக்குப் போய்விட்ட காரணத்தாலும் முழுமையான தகவலை அவர்கள் இங்கே தர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர். காமராஜ் அவர்களும் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர். ஆனால் அண்ணா நினைவாலயத்தைப் பராமரிக்கும் அளவிற்கு, காமராஜ் நினைவு ஆலயத்தை அரசு பராமரிக்கவில்லை என்பது எங்களுடைய கருத்து. எனவே இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வி வேண்டாம்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு—ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தகவல் கோரல்.

### (அ) கவிஞர் இரபீந்திரநாத் தாகூருக்குப் புகழஞ்சலி.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இந்திய துணைக் கண்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் விதத்தில் பல தீய சக்திகள் சில மாநிலங்களில் முயற்சிகளை மேற்கொண்டு உள்ள இந்த நேரத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்காக நம்முடைய நாட்டிலே, வாழ்ந்த, தேசிய கீதத்தை இயற்றிய இரபீந்திரநாத் தாகூர் அவர்களின் 125ஆவது பிறந்த நாள் இன்று. எனவே இந்த நாளை நினைவு கூறும் விதத்தில், ஒருமைப்பாட்டை பெரிதும் விரும்புகிற, ஆதரிக்கிற நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த மாநில அரசின் சார்பில் இந்த மன்றத்தின் சார்பில், இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிற விதத்திலே கருத்துக்களை வெளியிட வேண்டுமென நான் இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் புகழ்பெற்ற வங்க மகா கவிஞரும், நாட்டுப்பற்று மிக்க நாவலரும், தேசப்பிதா காந்தியடிகளுக்கு 'மகாத்மா' என்ற பெயரை சூட்டியவரும், தேசப் பிதா காந்தி

யடிகளால், 'குருதேவர்' என அழைக்கப்பட்டவரும், பன்னாட்டு பல்கலைக்கழகமான 'விஸ்வபாரதியை' ஸ்தாபித்தவரும், உலகப் புகழ்பெற்ற அமர இலக்கியமான 'கீதாஞ்சலி'யை இயற்றியவரும், நம்முடைய தேசிய கீதமான 'ஜன கண மன'வை இயற்றியவருமாகிய, நோபல் பரிசு பெற்ற மேதை, மகரிஷி இரபீந்திரநாத் தாகூர்அவர்களுடைய 125ஆவது பிறந்த நாள் இன்றைக்கு....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே அவையின் சார்பிலே ஒரு வாழ்த்து எழுதி இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் :—அந்த 125ஆவது பிறந்த நாளையொட்டி இந்தியப் பேரரசு இந்த நல்ல நாளை விடுமுறை தினமாக அறிவித்து இருக்கிறது. எனவே உலகப் புகழ்பெற்ற அந்த மேதைக்கு 'புகழாஞ்சலி' செலுத்துகின்ற வண்ணம் தமிழக மக்களின் சார்பிலே நாமும் நினைவு கூர்வதும், புகழ் சொல்வதும், வாழ்த்து சொல்வதும் பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் குறிப்பிட்டது போல இன்றைக்கு, இந்தியாவிற்கே புகழையும், பெருமையையும் தேடித் தந்த, உலகப் புகழை ஈட்டித்தந்த கவிஞர் இரபீந்தரநாத்தாகூர் அவர்களுடைய 125ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா என்ற முறையில் இந்தியாவே கொண்டாடுகிறது. அந்தத் தன்மையில் இந்த அவை தன்னுடைய மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்ற ஒரு வாய்ப்பை தங்கள் மூலமாக ஏற்படுத்திக்கொள்வதும் முறையான ஒன்றுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு சித்தன் அவர்கள் சொல்லியதைப் போன்று இந்த 20ஆவது நூற்றாண்டினுடைய இணையற்ற ஒரு பெருங்கவிஞராக விளங்கி இந்தியாவினுடைய புகழையும், பெருமையையும் நிலைநாட்டுவதற்கு இரபீந்தரநாத் தாகூர் அவர்கள் தங்களுடைய கவித்திறன் முழுவதையும் பயன்படுத்தினார். தம்முடைய தாய்மொழியாக இருக்கின்ற வங்க மொழியில் அவர்கள் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதும், அந்த மொழியை வளர்ப்பதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக விளங்கினார்கள் என்பதும், மக்களுடைய உள்ளத்தை கவருகின்ற அளவுக்குக் கவித்திறன் படைத்த அந்தக் கவிகளாலே ''பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாவித்திட வேண்டும்'' என்று பாரதியார் கூறியதற்கு இணங்க புவியை பாவித்து வந்தார் என்பதும் உலகம் நன்கு அறியும். அந்த வகையில், பல்லாண்டுகாலம் பலதடவை அவர்கள் உலக சுற்றுப்பயணம் சென்றவர்கள். பல பேரறிஞர்களோடு தொடர்பு கொண்டவர். ஜார்ஜ் பெர்னாட் ஷா, டால்ஸ்டாய் போன்றவர்களோடும் ஈன்ஸ்டின் போன்றவர்களோடும்



தொடர்பு கொண்டு அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர்கள். நோபல் பரிசு பெற்று இந்தியாவுக்கு ஒரு பெருமைத் தேடித் தருகின்ற அளவுக்கு, இலக்கியத் துறையிலே நோபல் பரிசு வாங்கியவர் இரபீந்தரநாத் தாகூர். அப்படிப் பட்டவருடைய பிறந்த நாளிலே இந்தப் பேரவையும், முழு மகிழ்ச்சியோடு பங்குகொள்கிறது என்பதையும், இந்தப் பிறந்த நாள் விழாவிலே, அவர்களுடைய பெயரும் புகழும் நீண்ட பெருங்காலம் நின்று நிலவ வேண்டுமென்ற முறையில் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறது என்ற முறையில் பங்குகொள்கிறது என்ற முறையில் தங்கள் மூலமாகவே அந்த வாழ்த்தை இந்த அவையின் சார்பாக தெரிவித்துக்கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு இரபீந்திரநாத் தாகூர் அவர்களின் 125-வது பிறந்த நாள் விழாவை என் சார்பிலும் இந்தப் பேரவையின் சார்பிலும் நினைவு கூற விரும்புகிறேன். அவர்கள் தேசீய இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டவர்கள். சிறந்த தத்துவஞானி மட்டும் அல்லாமல் ஒரு சிறந்த தேச பக்தராகத் திகழ்ந்தார். அவருக்கு ஆங்கில அரசால் அளிக்கப் பட்ட ' Knighthood ' என்ற பட்டத்தை தம் தாய் நாட்டின் பெருமை கருதி உதறித் தள்ளினார். அவருடைய மிகச் சிறந்த படைப்பான கீதாஞ்சலி என்ற நூலினால் அவருக்கு உலக மாபெரும் பரிசான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவர் உருவாக்கிய சாந்தி நிகேதன் இந்திய கலாச்சாரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அவர் உலக சமாதானத்திற்காகவும், உலக ஒற்றுமைக்காகவும் பாடுபட்டார். அதை உலகம் முழுவதும் பரப்புவதில் தம் வாழ்நாளை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் மனித குல மாணிக்கமாக திகழ்ந்தார். அவர் எழுதிய கவிதை இன்று தேசீய கீதமாக பாடப்படுகிறது. இன்பத்திலும் துன்பத்திலும் வாடுகிற உள்ளங்களோடு நாமும் பகிர்ந்து கொள்வோம். அதுவே இறைவனுக்கு அளிக்கப்படுகின்ற மலர்களாகும் என்பது அவருடைய கொள்கை ஆகும். உங்கள் அனைவரின் சார்பிலும், என் சார்பிலும் அவருக்கு நமது உள மார்ந்த அஞ்சலியை செலுத்துவோமாக.

(ஆ) திரு. காமராசர் நினைவாலயம் பராமரிப்பு குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் நடைபெற்ற ஒரு கேள்வியிலே எங்களுடைய கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் அண்ணா நினைவாலையத்தைப் போலவே பெருந்தலைவர் காமராசர் நினைவாலயம் பராமரிக்கப்பட வேண்டும்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பேர் பண்ண வேண்டாம். (குறுக்கீடு) சுமுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். அண்ணா நினைவாலயத்தைப் பராமரிக்கிற அளவிற்கு என்று சொல்கிற அந்த வாசகங்களில் தவறு இல்லை. என்ன தேவை என்று சொல்லுங்கள் கம்பேர் பண்ணாதீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கேள்வி கேட்பதினாலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் பராமரிப்பதைப் பொறுத்த வரையில், எந்த வேறு பாடும் எந்தத் தன்மையும் காட்டுவது இல்லை. பராமரிப்பு ஏற்படுகின்ற அளவிற்கு நினைவுச் சின்னங்கள்—காந்திக்கு ஒரு விதமான மண்டபத்தைக் கட்டியிருக்கிறார்கள். அதேமாதிரி எல்லோருக்கும் கட்டுவதில்லை. ஆகவே காமராசர் அவர்களுக்கு ஒருவிதமாக நினைவு ஆலயம் கட்டியிருக்கிறோம். அதே மாதிரி ராஜாஜி அவர்களுக்கும் கட்டியிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒருவிதமாக நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதைப்போல டெல்லியிலே காந்திக்கும், நேருவிற்கும், இந்திரா காந்திக்கும் விதம் விதமாக கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் அங்கே ஒரேவிதமான பராமரிப்பு என்று இருப்பதில்லை. ஆகவே அந்தந்த அளவிற்குப் பராமரிப்புகள் சரிவரநடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதிலே வேறுபாடு எதுவும் கிடையாது என்பதையும், ஆகவே பேரறிஞர் அண்ணாவை எந்த அளவிற்கு இந்த அரசு விரும்புகிறதோ, அதே அளவிற்குத்தான் நாட்டினு டைய தலைவர்கள், தமிழகத்தின் தலைவர்கள் என்ற முறையில் பெரும் தலைவர் காமராஜ் அவர்களும் மதிக்கப்படுகிறார்கள், ராஜாஜி அவர்களும் மதிக்கப்படுகிறார்கள், மற்ற தலைவர்களும் மதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*(முற்பகல் 10—10.)*

**(இ) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்படும் என்கிற கருத்து குறித்து.**

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர் களே, தங்கள் மூலம் இந்த அரசிடமிருந்து ஒரு தகவலை அறிய விரும்புகிறேன். சட்டமன்றத்தினுடைய மேலவையைக்கலைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? அதற்கான முயற்சிகளில் அரசு ஈடு பட்டுள்ளது என்பது உண்மையா? ஆகவேஅதற்கான காரணகாரியங் களை அரசு அறிவிக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கு இரு அவைகள் இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா, என்ற பிரச்சினை பல்வேறு மாநிலங்களில் அவ்வப்போது வருவது உண்டு. இந்த மாநிலத்திலேயும் வந்தது உண்டு. அந்த எண்ணங்கள் அவ்வப் போது வந்து போவதும் உண்டு. ஆகவே மேலவை இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா, என்பது இந்தியா



முழுவதும் இருக்கின்ற 22 மாநிலங்களில் 6 மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் மேலவையெல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அடிக்கடி வந்துபோனது உண்டு. இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு திட்டவட்டமாக எடுக் கப்படவில்லை, திட்டவட்டமாக எடுக்கப்படுகிற நிலையில் இந்த அவைக்குக் கொண்டு வரப்படாமல் எந்த முடிவும் எடுக்க முடியாது. அவையினுடைய கருத்தை அறிந்து, அவையினுடைய முடிவுக்குப் பிறகுதான் அது எடுக்கப்படும். அப்படி அவையி னுடைய கருத்து வந்து, செயற்குறிப்பு போடப்பட்டு, அவைக்கு கொண்டுவருகின்றபோது, அவையில் கருத்தை தெரிவிக்கவோ, அப்போது அதற்கான காரண காரியங்களை எடுத்துச் சொல்வ தற்கான வாய்ப்பும் ஏற்படும். இப்போது திட்டவட்டமான செயற்குறிப்பு, இன்றைய நிலையில் இந்த நேரத்தில் இல்லை என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**(ஈ) பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு குறித்து**

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பிற்பட்டோர் நலனுக்காக பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள். அவர் களுடைய கொள்கையின்படி கல்வி, வேலைவாய்ப்பு, பல்வேறு துறைகளில் இருகின்ற முன்னேற்றங்கள் இவைகளைப் பங்கிட்டுத் தரவேண்டும் என்பது பெரியார் அவர்களுடைய கொள்கை ஆகும். அதேபோல் தமிழகத்தில் இருக்கின்ற 5 கோடி மக்களில் 2 கோடி மக்கள் அடங்கிய வன்னிய சமுதாயத்தினர் கடந்த 6ஆம் தேதி அன்று தமிழகத்தில் இந்த நிலையை வலியுறுத்தி தலையை எண்ணுகிற முறையில் எங்களுக்கும் கல்வி, தொழில், வேலை வாய்ப்பில்.........................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது 'பாயின்ட் ஆப் ஆர்டரில்' வராது. இதை டிபேட்டில் பேசலாம். (குறுக்கீடு).

**(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்**

**திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நான் கொடுத்துள்ள குறுகிய கால வினா......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது முடிந்து போன விவகாரம். அதை விடுங்கள். சில நேரங்களிலே உங்களுக்கு விதியை மீறி செய்திருக்கிறேன்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லும்போது நான் விதியை மீறி செய்து இருக்கி றேன் என்று சொன்னீர்கள்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரங்களில் விதியை மீறி கொடுத்தேன் என்று தான் சொன்னேன். உங்களுக்காகத் தான் செய்தேன். எனக்காக எதையும் நான் செய்வது இல்லை. உறுப்பினர்களைத் திருப்தி செய்வதற்காகத் தான் செய்தேன். It is a passing remark. It was not uttered seriously.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது. இன்றைக்கு நிதி ஒதுக்கீடு மசோதா வருகிறது. அதில் பேசுகிற போது யாரேனும் ஒருவர் இந்தக் கருத்தை எடுத்துப் பேசலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பு இருக்கும்போது, இதை பாயின்ட் ஆப் ஆர்டரில் பேச வேண்டிய அவசியம் இல்லை.

(ஊ) மாநிலங்கள் அவையில் நடந்த விவாதம் குறித்து

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்திய மாநில அவையில் இந்திய துணைக் கண்டம் எதிர்பாராத அளவுக்கு ஜனநாயகத்திற்கு ஒரு மாசு கற்பிக்கும் வகையில், ஜனநாயகத்தைக் கொச்சைப் படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. நீதித் துறையின் சுதந்திரத்தை அழிக்கவும், அச்சுறுத்தவும் திமிர் பிடித்த சிலர் அக்கிரமச் செயலை ஆரம்பித்து விட்டார்கள் என்றும், ஏப்ரல் 7ஆம் தேதி அன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் சபாநாயகர் தீர்ப்பு நீதித் துறையின் சுதந்திரத்தைப் சாகடிப்பது போல் இருக்கிறது என்றும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டெல்லியில் மேல் சபையில் அவர்கள் அதை பேசினார்கள் என்றால் அதை நாம் இங்கே விவாதிக்க வேண்டியது இல்லை. (குறுக்கீடு) வெளியே யாரும் பேசலாம். நீங்கள் 234 மாண்புமிகு உறுப்பினர்கள் என் மேல் நம்பிக்கை, கான்பிடென்ஸ் வைத்து இருக்கும்போது அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். I have your full confidence love and affection அது போதும், அதுதான் முக்கியம். நீங்கள் இருக்கும்போது யாரும் வேண்டாம்.

(முற்பகல் 10-20)

(எ) திருச்சி நகரில் நிலவும் பதட்ட நிலை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக திருச்சி மாநகரத்திலே பரபரப்பூட்டுவதாகவும், அச்சுறுத்துகின்ற நிலையிலும், இன்றைய தினம் திருச்சியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம், கிட்டதட்ட 160-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயந்து, ஒளிந்து, வெளியே இருக்கின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பெரிய விவகாரத்தை எழுதிக் கொடுத்தால் நல்லது. பதில் சொல்வதற்கு எளிதாக இருக்கும். இவ்வளவு தகவலும் அமைச்சரிடம் இருக்காது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாட்டிலே நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவை விரும்பத் தக்க வகையிலும் நடைபெறுகின்றன, விரும்பத் தகாத வகையிலும் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் இந்த அவை பொறுப்பேற்று, பதில் கூறுவது என்பது இயலாது. பல்வேறு முறைகளினுடைய அடிப்படையிலே கொண்டு வந்தால், இந்த அவை பொறுப்பேற்று பதில் சொல்வதற்கு இயலும். ஆக அந்த வகையிலே சொல்லமுடியுமே தவிர, ஒவ்வொரு பிரச்சினைக்கும் பதில் சொல்வதற்கு இடம் கொடுப்பது என்பது, பொருந்தி வராது. அதற்கு இப்படிப்பட்ட ஜீரோ அவரே இந்த அவையைப் பொறுத்தவரையில் இல்லை. அதை அனுமதிப்பதும் கூட தவறு. அதை இனிமேல் கடைப்பிடிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(ஏ) கோட்டூர்புரத்தில் கட்டப்பட்டுள்ள குடிதண்ணீர் தொட்டி குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கோட்டூர்புரம் பகுதியில் தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டி— (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தந்த அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். அப்போதுதான் பதில் கிடைக்கும். (குறுக்கீடுகள்) வாய்ப்பு கொடுத்தால், பெரிய பிரச்சினை உண்டாகும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் மலர்மன்னன் ஆகட்டும், மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி ஆகட்டும், அவர்களுடைய கருத்துக்களை ஏதேனும் விதிமுறையின் கீழ் எழுதிக் கொடுத்தால், அதற்கான பதிலை வழங்குவதுதான் முறையே தவிர, அவரவர்கள் விருப்பப்படி எடுத்துச்சொல்வது, அதற்கான பதில் பெற வேண்டுமென்பது சரியாக ஆகாது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுப்புவதற்கு அனுமதி கொடுத்துவிட்டேன். இவ்வளவு பெரிய விவகாரம் என்றால் எழுதிக் கொடுங்கள் என்கிறேன். அப்ரோப்பிரியேஷன் பில் வரும்போது, உங்கள் கட்சி சார்பில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஆக அனுமதித்தேன். அனுமதிக்காமல் இல்லை. அவ்வளவுக்கும் அமைச்சரிடம் பதில் இல்லை.

திரு க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 நாட்களாக தங்களிடத்திலே சொல்லப்பட்டு, இன்றைய தினம் எழுப்பப்படும்போது, அமைச்சரவர்களிடத்தில் அவற்றுக்கான விவரம் இல்லாத காரணத்தாலோ அல்லது முன்கூட்டியே அவர்களுக்கு எழுதித் தெரிவிககப்படாத காரணத்தாலோ, இந்தப் பதில் சொல்லமுடியவில்லை என்று தெரிவிக்கிறார்கள். எனவே நாளைக்குக் கூட ஒருவேளை தாங்கள், அனுமதித்து, அவர் அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து, அமைச்சர் அதன் மூலம் பதில் சொல்லமுடியுமா என்பதைத் தாங்கள் அவைக்குத் தெரிவித்தால், அந்த உறுப்பினருக்கு இருக்கிற குறை நீங்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு முறையில் வர வேண்டுமென்பதைத்தான் நானும் விரும்புகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்வது போன்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக வருமேயானால்கூட, பதில் சொல்வதற்கான முயற்சிகளை நாம் எடுக்கலாம். அந்த முறையை கடைபிடிக்கவேண்டும். ஏதேனும் ஒரு விதிமுறையின் கீழ் வர வேண்டுமென்பதுதான் நோக்கம். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானங்களை வரிசையாகத்தான் எடுக்க முடியும். நாளைக்கு எடுக்க இயலாது. நாளைக்கான அஜெண்டா ஏற்கெனவே தயாராகி ப்ரிண்ட்டாகி விட்டது. (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் கேட்பது முறையல்ல. ஒரு நாளைக்கு இரண்டுதான் எடுக்கப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. 100-க்கும் மேற்பட்டு கொடுக்கப்பட்டதில் 90-க்கு அனுமதித்திருக்கிறேன். இன்றைக்கு உங்கள் கட்சி சார்பில் நடத்தப்படும் பத்திரிகையில் விவரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஓரவஞ்சனை என்று போடப்பட்டிருக்கிறது. நான் எல்லோருக்கும் நியாயமாகத்தான் நடந்து வருகிறேன். 90 கொடுத்து, 30 கொடுத்தால், அது தான் ஓரவஞ்சனை. (குறுக்கீடுகள்) நீங்களே முழுமையாக சப்போர்ட் பண்ண வேண்டும். (கூச்சல்-குழப்பம்)....

(ஜ) பல மாவட்டங்களில் நிலவிவரும் வறட்சி நிலைமை குறித்து

திரு உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு காரியம். தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மக்களைப் பாதிக்கின்ற ஒரு நிகழ்வினை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களிடமிருந்து அதற்குச் சரியான பதிலும் எங்களுக்கு வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இரண்டாண்டு காலமாக தொடர்ந்து தமிழ்நாட்டில் வறட்சியின் காரணமாக திருநெல்வேலி, கிழக்கு இராமநாதபுரம், காமராஜர் மற்றும் தர்மபுரி, மதுரை இன்னும் பல மாவட்டங்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் மிகக் கொடுமையான கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அந்த நிலையில் ஆங்காங்கு அரசுத் தரப்பு ரெவின்யூ அதிகாரிகளும், கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் நில வரி வசூல் செய்வதற்கும். கூட்டுறவுத் துறைக் கடன்களை வசூல செய்வதற்கும் மிகக் கடுமையான முறையில் நடவடிக்கை எடுத்து, வசூல் செய்வதில் போலீசை வைத்து மிரட்டுகின்ற அளவுக்குச் செல்கின்ற காரணத்தால் பதட்ட நிலை இருக்கிறது. ஆகவே, ஒத்திவைக்கவேண்டும் என்று சொல்லவில்லை. இவைகளுக்கு ஏதாவது பதில் உங்கள் மூலமாக கிடைக்கவேண்டும் என்ற ஆசையில் நான் கேட்கிறேன். இந்த நிலவரம் நீடிப்பது தமிழ்நாட்டிற்கு நல்லதல்ல, விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் நல்லதல்ல.

ஒன்றே ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். தொடர்ந்து இரண்டாண்டுக் காலமாக வறட்சியின் காரணமாக பல கிணறுகளிலே தண்ணீர் இல்லை. ஆனால் இப்போது தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு 'டாரிஃபின்' மூலமாக மாதம் இவ்வளவு கட்டவேண்டுமென்று ஒரு முறை இருக்கிற காரணத்தினால், கிணறுகளில் தண்ணீர் இல்லையெனினும் கூட, அவர்கள் மினிமம் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கட்டாவிட்டால் அதற்கு வசூல் செய்கின்ற முறைகள் எத்தனையோ இன்றைக்கு இருந்தும் கூட, இன்று கோவை மாவட்டத்தில் பல பம்புசெட்டுகள் கைப்பற்றப்பட்டு, ஜப்தி செய்யப்பட்டு, விவசாயிகளின் கிணறுகளிலிருந்து அகற்றப்பட்டு இருக்கிற நிலை உருவாகி இருக்கிறது.

அதே போல், திருநெல்வேலி மாவட்டம், எங்கள் மாவட்டம், நேற்று முன் தினம் மதுரை மாவட்டம் போடியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் தொடருமேயானால், அது தமிழ்நாட்டின் அமைதிக்கு உகந்ததல்ல. நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையில், உண்மையாக பாதிக்கப்பட்டிருக்கிற நிலையில் அதற்கு நிவாரணம் வேண்டும் என்றுதான் கேட்கிறோம். அரசாங்க அதிகாரிகள், குறிப்பாக ரெவின்யூ துறை அதிகாரிகள்—(குறுக்கீடு)—இதையெல்லாம் சொன்னால்தான் அவர்களுக்கும் தெரியும்.

விளைச்சலைப் பற்றி எழுதும்போது, அவர்கள் மேலிட அதிகாரிகளுடைய கட்டாயத்திற்காகவோ, அல்லது அமைச்சரவையினுடைய கட்டாயத்திற்காகவோ 50 சதவிகிதம் அனாவாரி சர்ட்டிபிகேட்தான் கொடுப்போம், அதற்குக் குறைவாகக் கொடுக்கமாட்டோம். எங்களுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு என்கிறார்கள். அது தவறாகவும் இருக்கலாம்

சரியாகவும் இருக்கலாம். அவர்கள் எழுதுகின்ற காரணத்தினால் மிகப் பெரும்பாலான விவசாயிகள், தமிழ்நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். உண்மையிலேயே கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு வரி நிவாரணம், கடன் நிவாரணம் கிடைப்பதற்கில்லை.

அதையொட்டி நேற்று இங்கு நடந்த கலெக்டர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஏதாவது முடிவு எடுத்து அரசாங்கம் விவசாயிகளுக்கு நல்ல செய்தி அறிவிக்கும் என்று இன்று காலைப் பத்திரிகைகளிலே துருவித் துருவிப் பார்த்தேன். ஆனால் எந்தவிதமான செய்தியும் கிடைக்க வில்லை. என்ன முடிவு எடுத்து இருக்கிறார்களோ தெரியவில்லை. ஆகவே, இந்த நிலையை உணர்ந்து, தமிழ்நாட்டில் தொடர்ந்து விவசாயிகளுக்குக் கஷ்டம் வறட்சியின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பார்த்தோம்—செங்கல்பட்டு, மதுராந்தகத்திலே வடாற்காட்டில், தென்னாற்காடு பகுதியிலே ஏரிகளின் உடைப்பின் காரணமாக, விவசாயிகள் பாதிக்கப்பட்டு, நிலங்கள் பழுதாகி, மேடிட்டு, தொடர்ந்து பல்வேறு கஷ்டங்களுக்கு விவசாயிகள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்காக நிவாரணம் கேட்கிறோம். ஏதோ லாபத்தைத் தள்ளிவிடுங்கள் என்று கேட்கவில்லை. அல்லது, நாங்கள் வேறு வகையில் ஒரு 'ஆர்கனைஸ்டு செக்டாராக' அரசாங்கத்தை மிரட்டிக் கேட்கவில்லை. கஷ்டம் ஏற்பட்டிருக்கிற நேரத்தில், உங்களிடம் நிவாரணம் கோருகிறோம்.

ஆகவே, இந்த ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய வறட்சியின் காரணமாக அவதிப்பட்டுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, குறிப்பாக, பல்வேறு விதமான பகுதிகளிலே வறட்சிக்கு தொடர்ந்து இலக்காகி இருக்கிற பகுதிகளில் அரசு அதிகாரிகள் மிரட்டி, போலீஸை வைத்து வசூல் செய்கின்ற கெடுபிடி, ஜப்தி நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி நிவாரணம் அளிக்க அரசாங்கம் முன் வருமா என்று உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லிய குறிப்புகளுடைய அடிப்படையில், இங்கே வருவாய்த் துறை மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றபோது கூட, ஓரளவுக்கு அதுபற்றி நான் குறிப்பிட்டேன். ஆகவே, இவ்வளவுதான் விளைந்து இருக்கிறது என்ற கணக்கைக் கொடுக்கவேண்டும் என்று அரசின் சார்பிலிருந்தோ, மேலிடத்திலிருந்தோ எந்தத் தாக்கீதும், எந்த அதிகாரிக்கும் செல்லவில்லை. இருக்கின்ற உண்மை நிலையை அறிவிக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கமே தவிர, இவ்வளவுக்கு அறிவிக்கவேண்டும் என்று எந்தத் தாக்கீதும் இல்லை.



அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆங்காங்கே உள்ள நிலைமைகளைக் கண்டறிந்து, அறிக்கைகளை அனுப்பி வைத்து இருக்கிறார்கள். எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்தத் தாலுக்காக்களில் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு வரி வஜா செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எழுதியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும் என்று, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதங்களின் பதிலுரையின்பொழுதே சொன்னேன். அந்த அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 10-30)

ஆனால், அதுபற்றி மட்டுமல்லாமல், வறட்சி நிலையைப் பற்றி ஆராயவும், குடிதண்ணீருக்கான வசதி வாய்ப்புகளைச் சிறப்பாகச் செய்து தரவும், வறட்சி நிவாரண வேலைகளில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு முதல்வரவர்கள் நேற்றும், இன்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டத்தை கூட்டி இருக்கிறார்கள். அந்தக் கூட்டம் நேற்றும் நடந்தது. இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆகவே, எந்த முடிவுக்கும் வராத அளவில், சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மற்றும் சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துக்களைச் சொல்ல இருக்கிறார்கள். எல்லாக் கருத்துக்களையும் ஒன்று திரட்டிய பிறகு மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு துரிதமாக எடுக்கும். ஆனால், அவசரத்தின் நிலைமைகளைக் கருதி, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும்பொழுதேகூட, இங்கேயிருக்கின்ற அமைச்சர்கள் அதில் கலந்துகொள்ள வேண்டிய நெருக்கடி இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உடனடியாக நடத்த வேண்டுமென்று கருதி, ஒருபக்கத்தில் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கட்டும்; மற்றொரு பக்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டம் கூடி முடிவெடுக்கலாம் என்று கருதித்தான் கூட்டியிருக்கிறார்கள்.

விவசாயிகள் என்று பார்க்கின்றபொழுது, 5 ஏக்கர்களுக்குக் கீழே உள்ள விவசாயிகள், இரண்டரை ஏக்கர்களுக்குக் கீழே உள்ள விவசாயிகள், அப்படிப்பட்ட ஏழை எளிய விவசாயிகளை அல்லல்படுத்தக்கூடாது, அவர்களை அவதிக்கு உள்ளாக்கக் கூடாது என்று கருதித்தான் அந்த வகையில் எந்த ஜப்தியும் செய்யக்கூடாது என்றுதான் இருக்கிறது. ஆனால், வசதி படைத்தவர்கள் இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு கட்டாமல் இருப்பது சரி அல்ல. கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களை, முடியாதவர்களை, வற்புறுத்திக் கட்ட வேண்டுமென்று

சொல்வது நோக்கம் அல்ல. அதையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொல்லுவார்கள். அந்த மாநாடு முடிவெடுக்க இருக்கிறது. மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள் கூறிய கருத்துக்களையும் கவனத்திற்கொண்டு அதற்கு என்ன நடவடிக்கையை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும்.

ஆனால் வசதி படைத்தவர்கள், கொடுக்கக்கூடியவர்கள், பேங்கிலே டெபாசிட் வைத்துக்கொண்டிருப்பவர்கள், பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து அவர்கள் வீட்டிலே திருமணங்களை நடத்தினாலும் அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய வரியைக் கட்டாமல் இருக்கிறார்கள். அவர்களும் இதோடு சேர்ந்து கொள்கிறார்களே என்ற வருத்தம் தானே தவிர, ஏழை எளியவர்கள், கட்ட முடியாதவர்கள், இந்த ஆண்டு வருமானம் வராதவர்கள் கட்ட வேண்டுமென்று வற்புறுத்துகின்ற எண்ணம் இல்லை. அவர்களுக்குத் தள்ளுபடி செய்யவோ, வஜா செய்யவோ உரிய நடவடிக்கைகளை அரசு முறைப்படி ஏடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள சட்டப்படி 15 ஏக்கர்களுக்கு மேல் இருக்க முடியாது. இன்கம் டாக்ஸோ அல்லது வேறு எந்தவிதமான வரியாக இருந்தால் அவர்களுக்கு வேறுவிதமான வருமானம் இருந்தால் விதிக்கப்படுகிறது ; அவர்களுடைய தொழில்களுக்கு வருமானம் இருந்தால் அந்த வரிகள் விதிக்கப்படுகின்றன. ஆகவே, நிலம் வைத்திருப்பவர்களுக்கு இப்படிச் சொல்வது நியாயம் அல்ல என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நில வரி, அதையொட்டிய கடன்கள் ஆகியவைகளை வசூலிப்பதில் கெடுபிடி கூடாது, மிரட்டக் கூடாது, ஜப்தி செய்யக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதற்குப் பதில் சொல்லிவிடுகிறேன். சென்ற ஆண்டு 6 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்கின்ற அளவிற்கு இருந்து, செய்து வைத்து இருக்கிறோம். அவ்வளவை கொள்முதல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் அவ்வளவும் விளைந்திருக்கிறது என்றுதான் பொருள். அவர்களும் வரி கட்டாமல், வாங்கிய கடனைத் திருப்பித் தர மாட்டோம் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது? நான் முதலிலேயே சொன்னபடி, ஏழை எளியவர்களாக இருந்து கட்டவில்லை என்றால், வஜா செய்வது, தள்ளுபடி கொடுப்பது பற்றி ஆலோசிக்கலாம். ஆனால் விளையவே



இல்லை, எங்குமே நடைபெறவில்லை என்று சொல்லி, வரியே வாங்க வேண்டாம் என்று சொன்னால் எப்படி அரசை நடத்த முடியும் ? இரண்டாவது விஷயம், நான் முன்னரே சொல்லியிருக்கிறேன், ரிசர்வ் பேங்க் தருகிறது, அதிலே சதவீதத்தைத் திருப்பிக் கட்டாவிட்டால் அடுத்த ஆண்டுக்குக் கடன் கொடுப்பதற்குப் பணம் தரமாட்டார்கள். 47 சதவீதம், 48 சதவீதம் தான் இப்பொழுது வசூலாகியிருக்கிறது. ஜூன் மாதத்திற்குள்ளாக வசூல் செய்து கட்டினால்தான் அடுத்த ஆண்டு கடன் கொடுப்பதற்குரிய பணம் கிடைக்க வழி ஏற்படும் ஆனால் ஏழை எளியவர்களை, முடியாதவர்களை. ஜப்தி செய்யவேண்டுமென்ற எண்ணம் இல்லை. அவர்கள் கூறுவதைப்போல அதையெல்லாம் ஆராய்ந்தறிந்து, யாரையும் கொடுமைப்படுத்த வேண்டாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் குறிப்பிட்டு ஏதாவது பிரச்சினை இருந்தால் அதைத் தெரிவித்தால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமில்லை, உட்காருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் சொல்வதில் அன்பார்லிமெண்டரி வார்த்தைகள் இருந்தால் நீக்கிவிடுங்கள். தயவு செய்து ஒரு நிமிஷம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரொம்ப வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து அமருங்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, அவர்களுக்குப் பாதுகாப்பைத்தான் கேட்கிறோம். மிரட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மிரட்ட வேண்டாம்.. யாரும் மிரட்ட மாட்டார்கள். மிரட்டினால் சொல்லுங்கள் (குறுக்கீடு).

நான்தான் சொல்லிவிட்டேனே, நானே உத்தரவாதம் கொடுத்து விட்டேன். யாரும் அப்படிச் செய்ய மாட்டார்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள், மிரட்டமாட்டார்கள், யாரும் மிரட்ட மாட்டார்கள். இவ்வளவு உத்தரவாதம் கொடுத்தாயிற்று.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தப் பசலி அடுத்த........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்வு உட்காருங்கள். சீரோ ஆவர் கிடையாது. அப்ரோபிரியேஷன் பில்லில் பேசுங்கள்.

திரு. உ. சுப்பிரமணியன் : விவசாயிகள் பிரச்னை வரும்போது சீரோ ஹவர் கிடையாது என்கிறீர்கள். நாங்கள் சொல்வதில் தவறான கருத்தோ, தேவையில்லாத கருத்தோ இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவசாயிகள் பிரச்னை என்பதால்தான் அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடு) உங்கள் கருத்து பூராவும் எனக்கு உடன்பாடான கருத்துதான். இதற்கு மேல் நான் என்ன செய்யமுடியும் ? தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அப்படியானால் நான் வெளியே போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வெளியே போகலாம். என்னாலே, வெளியே போகிறேன் என்று சொல்ல முடியாது. அவ்வளவுதான் வித்தியாசம். நான் வெளியே போக முடியாது. (குறுக்கீடு) நீங்கள் போனால், நான் போய் விடுவேன்.........

மாணபுமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும், இன்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெறுகிறது. இப்பொழுது வறட்சியைப் பற்றி அறிவிக்கவேண்டுமென்று உத்தரவாதம் வேண்டுமென்று மாண்புமிகு திரு சித்தன் அவர்கள் எப்படி வற்புறுத்த முடியும் ? (குறுக்கீடு) மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கோ, அரசு அதிகாரிகளுக்கோ, மற்றவர்களுக்கோ, அந்த பாயின்ட் எப்படித் தெரியாமல் இருக்கும் ; வறட்சி எப்பொழுது அறிவிக்க வேண்டும், எப்படி அறிவிக்க வேண்டுமென்றும் தெரியும். அதை முறைப்படி செய்கிறேன் என்றும் சொல்லிவிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு சித்தன் சொல்லப்போகின்றவைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) ஆராயப்படும், என்ன சொன்னாலும் ஆராயப்படும், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரங்களில் கேஸ் ஜெயித்தால்கூட, கிளையன்ட் இருந்தால், பேசிக் கொண்டே இருப்பான். அந்த பேச்சே கேசுக்கு வீக்காகிவிடும். அது மாதிரி ஆக்கிவிடாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இவ்வளவு பேர்கள் பேசுகிறீர்களே, எனக்கென்று இரண்டு பேர்கள் எழுந்துகொள்ளுங்களேன். இந்த அவையை நடத்துபவன் நான். (குறுக்கீடு) எல்லாவற்றிலும் நான் தனிமைப்படுத்தப்படுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒரு நிமிஷம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரத்திற்காக அல்ல, சபாநாயகருக்குக் கொடுக்க வேண்டிய கொஞ்சம் மரியாதையைக் கொடுத்து, நான் சொல்வதைக் கேட்டு உட்காருங்கள். (குறுக்கீடு.) நீங்கள் வேண்டுமானால் பேசுங்கள், அவ்வளவுதான், I do not like i..



திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் வற்புறுத்தி, மனம் புண்படுத்தி, அல்லது சபையினுடைய நரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கமே கிடையாது ; நான் என்றைக்கும் அப்படிச் செய்பவன் அல்ல. ஒரே ஒரு பிரச்னை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரத்திற்காக அல்ல. இதற்கு மேல் நான சொல்வதைக் கேட்கவில்லையென்றால், அதற்குப் பிறகு என்ன இருக்கிறது ? (குறுக்கீடு) நீக்கவேண்டாம் இன்னொரு முறையிலே கொண்டு வாருங்கள். Why do you stand on prestige? நீங்கள் ஒத்துழைக்க மாட்டேன் என்கிறீர்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி பற்றி, வரி வஜா பற்றி, கடன் வசூல் ஒத்தி வைப்பதைப் பற்றி, நிரம்பப் பேசியிருக்கிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல்வேறு சமயங்களில் இந்த அவைக்கு உறுதி கொடுத்திருக்கிறார். எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம், இந்தப் பசலி ஆண்டு அடுத்த மாதத்தோடு முடிவடையப் போகிறது. அதற்குள்ளாகவே வரி வஜா பற்றி அறிவித்தால்தான், கடன் வசூல் ஒத்தி வைப்பு நீடிக்கும். ஆனால் இன்னமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம், என்றால், அதற்குள் வருஷம் முடிவடைந்து விடுமே, அதுதான் எங்களுடைய கோரிக்கை. இவ்வளவு நாட்களாக, இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், நாங்களும் சொன்னோம். இவ்வளவு நாட்களாக நடவடிக்கை எடுப்பதிலே ஏன் தாமதம், புள்ளி விவரம் எடுப்பதிலே ஏன் தாமதம் ? உடனடியாக அறிவிக்க வேண்டும்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில் பாஸ் பண்ண வேண்டுமா வேண்டாமா ? ஒருவர் கேட்டால் 7 பேர்களையும் அனுமதிக்க வேணடும். No, No. I cannot discriminate. அதையும் சொல்லிவிட்டேன்.

திரு பொ. உத்திராபதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபை ஆரம்பிக்கப்பட்டு முடிவடைவதற்கு இன்னும் 3 தினங்கள் இருக்கின்றன. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, நிதியமைச்சர் அவர்கள் விவரம் கேட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வறட்சிக்கு ஒரு வெள்ளை அறிக்கை வைத்து இங்கே பேசப்பட்டு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் எங்கெங்கு வறட்சி இருக்கிறது என்ற விவரம் கேட்டு வெள்ளை அறிக்கை வைத்து இந்த சபை முடிவதற்குள்ளாக விவாதிப்பதற்கு அமைச்சர் அவர்கள் சந்தர்ப்பம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. ந. ராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல முறை அரைத்த மாவையே அரைப்பது போல் நான் இதைச் சொல்வது எங்கள் மாவட்டத்தினுடைய தலையாய கடமையாகும். இன்றைய தினம் விவசாயிகள் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் அந்த வறட்சி பற்றிய விவர குறிப்புகளின் தகவலை பெற்று வரி 'வஜா செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தாங்கள் பேசும்போது மிகவும் மன வருத்தத்தோடு எனக்கு யாருமே பாதுகாப்பு இல்லை, துணையாக வரவில்லை என்று சொன்னீர்கள். நாங்கள் எல்லாம் இருக்கிறோம். உங்களை என்ன செய்ய முடியும் ?

*திரு. எப். எம். இராசரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை வரலாறு காணாத மிகப்பெரிய வறட்சி இருக்கிறது. அணையிலே தண்ணீர் இல்லை. விவசாய பெருங்குடி மக்கள் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த பிரச்சனையை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் நல்ல தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(ஒ) அரசு அனுமதியின்றி நடைபெறும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறித்து:

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஊர்களில் அரசு அனுமதி பெறாமல் ஆசிரியர் பயிற்சி பள்ளி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அது சம்பந்தமாக நேற்றைய தினம், சுப்ரீம் கோர்ட் அனுமதி பெறாமல் ஆசிரியர் பயிற்சி பள்ளி நடத்தக் கூடாது என்று ஆணை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி ஆணை இருக்கும்போது தமிழகத்திலே சில இடங்களில் ஆணை பெறாமல் ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு அரசு என்ன திட்டம் உருவாக்கியிருக்கிறது.

### 3. அறிவிப்புகள்.

*(ஆ) பொதுக்கணக்குக் குழு-உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986–87ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்குக் கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. செ. ஆறுமுகம்
2. திரு. மு. இராமநாதன்



3. திரு உ. சுப்பிரமணியன்
4. திரு டி. வெங்கடரெட்டி
5. திருமதி ஏ. எல். பொன்னம்மாள்
6. திரு எஸ். சிவராமன்
7. திரு எஸ். இராசாராமன்
8. திரு எப். எம். இராசரத்தினம்
9. திரு சி. சுப்புராயர்
10. திரு மா. சின்னராசு
11. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
12. திருமதி இரா. சரோஜா
13. திரு கே. உச்சி
14. திரு கூடலூர் இ. வி. வேலு
15. திரு ப. ந. இராமச்சந்திரன்
16. திரு ஆ. கா. அ. அப்துல் சமத்.

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1986–87ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 230ஆவது விதியின் கீழ் மாண்புமிகு திரு உ. சுப்பிரமணியன், எதிர்கட்சித் தலைவர் அவர்களை, இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு-உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1986–87ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு சு. பாலன்
2. திரு அ. மலர்மன்னன்

3. திரு வி. பி. சிந்தன்

4. டாக்டர் க. நல்லமுத்து

5. திரு மா. கதிர்வேலு

6. திரு ப. தீர்த்தராமன்

7. திரு ஆர். ஈஸ்வரன்

8. திரு வே. இரா. ஜெயராமன்

9. திரு எஸ். புருசோத்தமன்

10. திரு ஆ. பிரேம்குமார்

11. திரு ச. பாலகிருஷ்ணன்

12. திரு த. மாரிமுத்து

13. திருமதி பா. வளர்மதி

14. திரு த. பழனி

15. திரு பொ. அன்பழகன்

16. டாக்டர் கே. சமரசம்.

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1986–87ஆம் ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 239இன் கீழ் டாக்டர் கே. சமரசம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

**(இ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1986–87ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு



கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு க. அன்பழகன்

2. திரு அ. ரகுமான்கான்

3. திரு ஜெ. ராஜா பாபு

4. திரு பி. எம். தங்கவேல்ராஜ்

5. திரு டி. தீர்த்தகிரி கவுண்டர்

6. திரு தி. நா. கோ. அ. மனோகரன்

7. திரு பூ. மு. நரசிம்மன்

8. திருமதி பி. லட்சுமி

9. திரு சி. சிவப்பிரகாசம்

10. திரு எல். இராசமாணிக்கம்

11. திரு மு. மாரிமுத்து

12. டாக்டர் த. முகம்மது சலீம்

13. திரு என். விஜயபாலன்

14. திரு கு. தமிழரசன்.

முறையாக நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1986–87ஆம் ஆண்டிற்கான உரிமை குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 253 (3)ஆவது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(அ) இராயபுரம் தொகுதியிலுள்ள மாநகராட்சி குடியிருப்புகளின் வாடகை உயர்வு.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சென்னை இராயபுரம் தொகுதி 14-வது வட்டம் மாடல் லைன் பகுதியில் நீண்டகாலமாக மாநகராட்சிக் குடியிருப்புகளில் வசித்து வரும் 144 ஆதி திராவிட குடியிருப்புகளின் மாத வாடகையைக் கடந்த 1—11—1985 முதல் சென்னை மாநகராட்சி நிர்வாகம் ரூ. 15-லிருந்து ரூ. 60ஆக உயர்த்தி விட்டதால் அக் குடியிருப்புகளில் வசிப்போருக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரைவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி பந்தர் ராமநாயக்கன் தோட்டம், கான்ரன் ஸ்மித் நகர், கல்யாண மேஸ்திரி தோட்டம், துறைமுகம், பிராட்வே, கல்லறைச் சாலை மாதிரிப் குடியிருப்பு, செல்லப்ப முதலி தெரு போன்ற இடங்களில் குடியிருப்புகளைக் கட்டி மாநகராட்சி ஊழியர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளது. அப்பொழுது முதல் ரூ. 10, ரூ. 15 மற்றும் ரூ. 20 மட்டுமே மாத வாடகையாக ஒதுக்கீட்டாளர்களிடமிருந்து சென்னை மாநகராட்சி வசூலித்து வருகிறது. குறிப்பாக, இராயபுரம் தொகுதி கல்லறைச் சாலை மாதிரிக் குடியிருப்புகளுக்கு மாத வாடகையாக ரூ. 15 கடந்த இருபதாண்டுகளாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இது தற்போது ரூ. 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னை நகரின் வாடகை மதிப்பினை ஒப்பிடுகையிலும், மற்றும் நிர்வாகச் செலவினைக் கருதிப் பார்க்கையிலும் இந்த வாடகை மிகவும் குறைவானதாக இருப்பதால், சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரி (நிலைக் குழு) வரி, நிதி மற்றும் மன்றம் அவர்களின் ஒப்பாணையின் பேரில், மாநகராட்சி குடியிருப்புகளின் வாடகை உயர்த்தப்பட்டுள்ளது.

வாடகை விகிதங்கள் இருபது ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டமையால், மேற்படி குடியிருப்புகளை நன்கு பேணிக் காக்கவும், நிர்வகிக்கவும் உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



திரு ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது ' பேணிக் காக்கவும் ' என்ற வகையில் ஒரு சென்டன்ஸ் போட்டிருக்கிறார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றுக் கொண்டு வருகிறேன். கடந்த 10, 12 ஆண்டுகளாக அந்தப் பக்கத்தைப் பொறுத்தவரையில் பராமரிக்கப்படுகிறது என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல்தான் மாடல் லைன் இருந்து வருகிறது. சென்னையிலும் அப்படித்தான் இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. உதாரணமாக ஒரு வீட்டைக் காட்டுகிறேன். அந்த வீட்டில் எலி, பூரான், பாம்பு போன்றவை கூட குடியிருக்க அஞ்சும். அந்த அளவுக்கு அவை பழுதான நிலைமையில் இருக்கின்றன. இப்படித்தான் மாடல் லைனிலே இருக்கின்ற வீடு இருக்கிறது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் இதனை நான் ஒரு உதாரணமாகச் சொல்கிறேன்.

அமைச்சரின் மேலான கவனத்திற்கு மற்றும் ஒன்றை நான் கொண்டு வருகிறேன். புதுப்புதுத் திட்டங்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்காக நாம் கொண்டு வருகிறோம். இலவசப் பட்டா வழங்குகிறோம் ; இலவச வீடுகள் கட்டித் தருகிறோம். இந்த மாடல் லைன் குடியிருப்பைப் பொறுத்தவரையில் இது பிரிட்டிஷ் காலத்திலே கட்டப்பட்டது. குடிசை மாற்று வாரியம் 1971லே ஏற்பட்டதிலிருந்து படிப்படியாக வீடுகளைக் கட்டி வருகிறபோது வாடகைக்கு என்று சொல்லப்பட்ட சிலவற்றை எல்லாம் ஹையர் பர்சேஸ் ஸ்கீமாக மாற்றி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, பிரிட்டிஷ் காலத்திலே கட்டப்பட்ட குடியிருப்பாகையால் கிட்டத்தட்ட 75, 76 ஆண்டுகளாக வாடகை வாங்கிக் கொண்டு வருகிறார்கள்.

(முற்பகல் 10—50)

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளையே குடிசை மாற்று வாரியம் ஹையர் பர்ச்சேசில் கொடுக்கிறபோது, 75 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அந்த வீடுகளை ஹையர் பர்ச்சேஸ் மூலமாக கொடுப்பதற்கு என்ன தடை, அப்படிக் கொடுக்கப்படுமா என்பது ஒன்று. இரண்டாவது ஏற்கனவே மாநகராட்சி இது குறித்து ஒரு முடிவு எடுத்திருக்கிறது. கமிஷனர் கூட ஒரு புரோபோசல் வைத்திருக்கிறார்கள். அதையும் படித்து முடித்து விடுகிறேன்.

'This is in accordance with the decision taken in the Chambe.s of Housing Minister and the Chairman, Slum Clearance Board. As such, the Commissioner's proposal to sell away the tenements to existing occupants on Lease-cum-sale basis.. .. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவன ஈர்ப்பிலே கேள்வி கேட்கும்போது இவ்வளவு பேசுவது சரியா? டிபேட்டில் பேசுவதுபோல் பேசக் கூடாது. கேள்வியாக சுருக்கமாக கேட்பதாக இருந்தால் கேளுங்கள். அல்லது அதையே நான் முழுவதுமாக டிஸ் அலவ் பண்ணி விடுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : இதுபோன்ற புரொபோசல் ஏற்கனவே போட்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி ஹையர் பர்ச்சேசில் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினால் கட்டப்பட்டிருக்கிற பல கட்டிடங்கள் பல இடங்களில் இருக்கின்றன. குறிப்பாக அவற்றில் சில இடங்கள் குடியிருப்பதற்கே லாயக்கு இல்லை. எந்த நேரமும் இடிந்து விழுந்து விடுமோ என்று இருக்கின்ற நிலையை எடுத்துச் சொல்லியும் மாநகராட்சி கொடுக்க வேண்டிய எச்சரிக்கையை கொடுத்தும், எச்சரிக்கை கொடுத்தும் காலி செய்ய மறுக்கிறார்கள். வாடகை கொடுக்கவும் மறுக்கிறார்கள். கட்டிடம் தவறி இடிந்து விழுந்தால் யார் பொறுப்பை ஏற்றுக் கொள்வது என்று தெரியவில்லை. அதுபோன்ற ஒரு கட்டிடத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் இங்கே புகைப் படமாக எடுத்துக் கொண்டு வந்து காட்டியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

வாடகை முன்பு 15 ரூபாய் மட்டும் இருந்தபோது பராமரிப்பு சரியாக இல்லாமல் இருந்தது. இப்போது அதனை 60 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். ஆகவே பராமரிப்பை கண்காணிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அவைகள் எல்லாம் சொந்தமாக்கப்படுமா என்று கேட்டார்கள். மாநகராட்சியின் ஒரு குறிப்பையும் படித்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மறுமலர்ச்சி மன்றம் என்ற ஒரு மன்றம், அதை விலைக்கு கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறது. அது அரசின் பரிசிலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசிலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். பரிசிலனை அங்கு குடியிருப்பவர்களின் விருப்பத்திற்கு இணங்க முடிவு அமையுமாஎன்று அறிய விரும்புவதோடு பரிசீலனை என்று சொல்லி டிலே பண்ணிவிடக் கூடாது. விலைக்குத்தான் கேட்கிறார்கள். நம்மால் பராமரிக்கப்பட முடியாமல் இருப்பது, அவர்களே பராமரித்துக் கொள்கிறேன் என்று சொல்லும்போது, ஏன் தடை செய்ய வேண்டும். ஆகவே பரிசீலனை சீக்கிரமாக முடிக்கப்பட்டு, அவர்களுக்கு விலைக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அவரவர்கள் விரும்பியபடி முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதற்கு பரிசீலனை என்று பெயராக இருக்க முடியாது.

(ஆ) விருதுநகர் அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையில் உள்ள மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டுள்ளது குறித்து

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' அண்மையில் காமரசார் மாவட்டம், விருதுநகர் அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையில் இரு பக்கமும் உள்ள சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள முதிர்ந்த பச்சை புளிய மரங்களைச் சமூக விரோதிகள் வெட்டி விட்டனர். அவற்றை அதிகாரிகள் பட்டுப்போன மரங்கள் என்று குறைந்த தொகைக்கு, வெட்டியவர்களுக்கே ஏலம் விட்டதினால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புப் பிரேரணையில் குறிப்பிடப்படும் அருப்புக்கோட்டை—விருதுநகர் சாலை கி.மீ. 0-0-17/8-ல் உள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை 952 ஆகும். இதில் கடந்த ஜூலை 1983 முதல் ஏப்ரல் 1986 வரை உள்ள காலத்தில் களவு போனவை முழு மரங்கள் இரண்டும் மற்றும் முறிந்த கிளைகள் 11ம் ஆகும். இதே காலஅளவில் பட்டுப் போன மற்றும் காற்றினால் விழுந்த மொத்த மரங்களின் எண்ணிக்கை 225. இம்மரங்கள் அவ்வப்போது விரிவான விளம்பரங்களுக்குப் பின் பகிரங்க ஏலத்தில் விடப் பட்டன. இதன் மூலம் கிடைத்த மொத்த தொகை ரூ. 18,147 ஆகும். மீதமுள்ள மரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. காவல் துறையினருக்குப் புகார் செய்யப்பட்ட திருட்டுகளின் மொத்த எண்ணிக்கை ஆறு. கண்டு பிடிக்கப்பட்ட ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட நபருக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. மூன்று வழக்கில் காவல் துறை இன்னும் நமக்கு பதில் தரவில்லை. அவைகள் புலனாய்வில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிடையாகப் பார்த்து, அது சம்பந்தமான புகைப் படத்தினையும் இங்கே என்னிடத்தில் தந்திருக்கிறார்கள். அந்த நிலைமைகளுக்கு ஏற்ப கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர்-அருப்புக்கோட்டை சாலை பசும் சோலையாக இருந்தது. இப்போது அது பாலைவனமாக காட்சியளிக்கிறது. இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள பச்சை மரங்கள் வெட்டப் பட்டுள்ளன. ஆனால் 18 ஆயிரம் ரூபாய்க்கு தான் அவை ஏலம் விடப்பட்டுள்ளன. மீதி போலீஸ் கேசில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்

னார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களின் அனுமதியோடு இந்தப் புகைப்படங்களை அமைச்சர் அவர்களிடம் காண்பிக்கிறேன். நேரிடையாக அவர்கள் வரட்டும், நானும் வருகிறேன். இல்லாவிட்டால் சட்டமன்ற குழு போடுங்கள். நேரிடையாகப் போய் பார்ப்போம். சம்பந்தப்பட்ட தவறான குறிப்பைக் கொடுத்த அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியில் எஸ்.இ. ஆக இருந்தவர் சீ.இ. ஆக வந்திருக்கிறார். அந்தப் பகுதியில் டி..இ. ஆக இருந்தவர் மூன்று நான்கு வருடங்களாக இருக்கிறார். இந்தக் குற்றங்களை எல்லாம் செய்ய வேண்டும் இல்லையா, அதற்காக தான் இருக்கிறார். ஆகவே அப்படிப்பட்டவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத்தலைவர் அவர்களே, இந்தப் புகைப்படங்களை எல்லாம் கொண்டு வந்து கொடுத்ததற்கு நன்றி. கொஞ்சம் காலத்திற்கு முன்னாலேயே கொடுத்திருந்தால் கூட நடவடிக்கை எடுத்திருக்க முடியும். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து தான் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக் கூடாது என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. கொஞ்சம் முன்கூட்டியே கொடுத்து விட்டால் உடனடியாக நடவடிக்கை எடுத்துவிடலாம். இப்போது நான் சொன்னதைக் கூட என்னிடத்தில் கொடுக்கப்பட்ட குறிப்பை வைத்து தான் சொன்னேனே தவிர நேரிடையாக போய் பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்தப் புகை படங்களை வைத்து நேரிடையாகப் போய் பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைக்குமானால் போய் பார்த்து, தவறாக குறிப்பு கொடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது சரியாக பராமரிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்தாலோ, தயவு தாட்சண்யம் இல்லாமல், அரசினுடைய நன்மையையும், பொது மக்களுடைய நன்மையையும் கருதி நிச்சயமாக அவர்கள் மீது இந்தத் துறை நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இராணி மங்கம்மாள் காலத்திற்கு பிறகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் தான், அதுவும் மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வி. அவர்கள் முயற்சியால் நம் நாட்டு வளத்தைப் பெருக்குகிறார்கள் சாலை ஓரங்களில் மரங்களைப் பெருக்குகிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அரசுக்கு களங்கம் ஏற்படுத்துகிற வகையில் இந்தக் காரியம் நடந்திருக்கிறது. இந்த சமூக விரோத செயலை செய்வதற்கு, காமராசர் மாவட்டம் முழுவதிலும் இருக்கிற சாலையோர மரங்களை அழிப்பதற்கு சமூக விரோதிகள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். ஒரு கண்காணிப்புக் குழு போட்டு, மொபைல் வேன் போலீசோடு, துப்பாக்கியோடு போகவேண்டும். சும்மா போகக் கூடாது. அந்தமாதிரியாக நடவடிக்கை யெடுத்து இந்த மரங்களை காப்பாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமாகவோ அல்லது தனியார்களுக்குச் சொந்தமாகவோ இருப்பது எதுவுமே திருட்டு போகக் கூடாது என்பது தான் எல்லோரும் விரும்பக் கூடிய ஒன்று. எனவே திருட்டுப் போவதைத் தடுப்பதற்குத்தான் காவல் துறை இருக்கிறது. திருட்டு போவதைப் பற்றி எந்தத் தகவல் கொடுத்தாலும் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பார்கள். ஏற்கெனவே இருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு நிச்சயமாக அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம். என்னென்ன குறைபாடுகள் நடந்திருக்கின்றன. எப்படி இன்னும் தீவிரமாக பராமரிக்க வேண்டுமென்பதைப் பற்றி தனியாக இந்தத் துறை மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்ன எதிர்பார்க்கிறார்களோ அந்தவகையில் நடவடிக்கையெடுக்கப் படும்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு

### நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

*திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நடப்பு ஆண்டில் பல்வேறு துறைகளின் திட்டங்கள் செயல்படுவதற்காக 3,400 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டினால் நிறைவேற்றப்படுகிற அத்தனை திட்டங்களும் சரியான முறையில் எதிர்பார்க்கும் வகையில் செயல்படுத்தப்படுமா என்பதில் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசின் நிர்வாக இயந்திரம் திட்டங்களின் தன்மைக்கேற்ப செயல்படுவதாகத் தெரியவில்லை. அந்த நிலையை சரிபடுத்தவும், ஆங்காங்கு இருக்கும் கோளாறுகளை சீர்படுத்தவும் இந்த அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை அல்லது செய்வதாகவும் தெரியவில்லை. கல்விக்காக நம்முடைய மானியத்தில் 550 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறோம்.

[திரு. ச. கோவிந்தசாமி]

(முற்பகல் 11-00)

இப்படி நிதி ஒதுக்கியிருந்தாலும், ஆரம்பக் கல்வியிலிருந்து உயர் தரக் கல்வி வரை தரம் மிகக் குறைந்திருக்கிறது. இதைச் சரி செய்வதற்கு சரியான முயற்சி எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே இந்தியாவிலேயே தலைசிறந்து விளங்கிய தமிழக கல்வி இன்று தமிழகத்தில் வியாபாரப் பொருளாக மாறி உள்ளது. இந்த நிலையைப் போக்க முயற்சி எடுக்கவேண்டாமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். பல உயர்நிலைப் பள்ளிகளில் கட்டிடங்கள் இல்லாத நிலை இருக்கிறது. எனது தொகுதியில் பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லாமல், மரத்தின் நிழலில் வகுப்பறைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. எனவே அங்கு பள்ளிக் கட்டிடங்களைக் கட்டவேண்டும் என்று கடந்த 3 ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் அவைகள் கவனிக்கப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது அங்கே பள்ளிக் கட்டிடத்தைக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது இடைப்பாடி தொகுதியில் சங்ககிரி தாலுக்காவில் எந்தவிதமான அரசுக் கல்லூரியும் இல்லை; எனவே அங்கே ஒரு அரசுக் கல்லூரியை இடைப்பாடியில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 160 கோடி ஒதுக்கப் பட்டு உள்ளது. இதில் எந்த அளவு பயன் உள்ளது என்று பார்க்கவேண்டும். பணம் கோடிக்கணக்கில் ஒதுக்குவதால் மட்டும் திட்டங்கள் நடைபெறாது. அதைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் தேவையான அமைப்புக்களை உருவாக்க வேண்டும். எனவே இதனைக் கண்காணிக்கும் பொறுப்புகளை ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றிய, நகர் மன்றத் தலைவர்களுக்கும் பங்கிருக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் மகப் பேறு மையக் கட்டிடங்கள் கட்டப்பட்டு இரண்டு வருடங்களாகியும், அதற்குரிய அலுவலர்களை நியமிக்காமல் அவைகள் எல்லாம் பயன் இல்லாமல் இருந்து வருகின்றன. எனவே அவற்றைத் திறப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தற்போது வேளாண்மைத் துறையின் செயல்பாடுகள் சரியான முறையில் இல்லை. விவசாயிகளுக்கு சேர வேண்டிய சலுகைகள், மானியங்கள் சேருவதில்லை. பெரும்பாலும் தவறான கணக்குகளும், ஊழல்களும் நடைபெறுகின்றன. விவசாயத்துறையில் வழங்கும் விதைகள் 'தரமான விதைகளாக இல்லை. எனவே 'இந்தத்துறை ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையில் செயல்பட்டால்தான் பயன் உடையதாக இருக்கும் என்பதையும், விவசாயிகளுக்கு இதனால் பயன் உடையதாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 மே 9] [திரு. ச. கோவிந்தசாமி]

அடுத்து முன்பிருந்த கிராம கர்ணம், முன்சீப்புகளை மாற்றி புதிய கிராம நிர்வாக அலுவலரை நியமித்து உள்ளீர்கள். இதனால் என்ன பயன் ஏற்பட்டுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். கிராமங்களில் அவர்கள் ஈவு இரக்கமின்றி நடந்து கொள்கிறார்கள். சாதாரண மக்களும் விவசாயிகளும் சான்றிதழ் பெறுவதற்குக் கூட பணம் கொடுக்கவேண்டி உள்ளது. இவர்கள் சரியான முறையில் செயல்படுகிறார்களா ? இவர்களின் செயல்களினால் மக்களுக்கு பயன் ஏற்பட்டுள்ளதா எனப் பார்க்கவேண்டும். இதிலே உள்ள குறைபாடுகளைக் களைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அடுத்ததாக நில உடைமைப் பதிவு மேம்பாடு திட்டத்தின் மூலம் புதிய நில அளவை செய்யப்பட்டது. இதில் ஆயிரக் கணக்கான ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஆனால் ஐந்தில் ஒரு பங்கு நிலங்கள் கூட அளவை செய்யப்படவில்லை. அளவு செய்யப்படாமலேயே அளவு முடிந்துவிட்டதாக தெரிவித்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பக்கத்திலுள்ள நிலங்கள் யார் யார் பெயருக்கோ மாற்றப்பட்டு, அதனைச் சரி செய்ய நூற்றுக் கணக்கில் பணம் வாங்கிக் கொண்டும், இன்னும் அதனைச் சரி செய்யவில்லை. சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல் விவசாயிகள் மத்தியில் வீண் அலைச்சலும் சிரமும்தான் மிச்சம். எனவே இதைப் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு நல்ல திட்டம் தான். இதைச் சரியான முறையில் அமுல் நடத்தாதால் வீண் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இதைச் சரியான முறையில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சேலம் மாவட்டத்தில் மழை இன்மை காரணமாக கடும் வறட்சி ஏற்பட்டு, வேளாண்மை பாதிக்கப்பட்டு பல பகுதிகளில் தென்னை மரங்கள் பட்டுப் போய் உள்ளன. வெற்றிலைக் கொடிக்கால்கள் அழிந்துவிட்டன. பாசனக் கிணறுகள் குடி தண்ணீர் கிணறுகள் வறண்டுவிட்டதினால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள், வேலை இன்றி வாழ்க்கை நடத்துவதற்கே சிரமப்படுகிறார்கள். எனவே வறட்சி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தவேண்டும். தேவையான குடிநீர்க் குழாய்களை அமைத்து, குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்கவேண்டும். சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்..

தற்போது கூட்டுறவுக் கடன்களுக்கும், நிலவரிக்கும் ஜப்தி நடவடிக்கை எடுப்பதைத் தடுக்க உத்தரவிடவேண்டும். பெரும்பாலான பேரூராட்சிகள் வருமானம் இல்லாமல் நிர்வாகச் செலவிற்கே போதாமல் எந்த அபிவிருத்தி வேலையும் செய்ய முடியாமல் அந்தப் பகுதிமக்களுக்கு சுமையாக இருந்து வருகிறது. எனவே அரசாங்கத்திலிருந்து வர வேண்டிய வீட்டு வரி மானியம்

கிடைப்பதில்லை. கிராமக் குடி தண்ணீர் திட்டத்திலும் சேர்க்கப்படுவதில்லை. மேலும் மற்ற அபிவிருத்தித் திட்டங்களும் செயல்படுத்தாமல் பேரூராட்சியாக இருப்பதால், பயன் இல்லாமல் தண்டனை போல் அனுபவிக்க வேண்டி உள்ளது. அரசு பரிசீலித்து கிராம ஊராட்சிகளுக்கு கிடைக்கும் வசதிகளை, பேரூராட்சிகளுக்கும் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பாலான நகராட்சிகள் வருவாய் பற்றாக்குறையால் நிர்வாக செலவுகளைச் சமாளிக்கமுடியாமல் இருந்து வருகின்றன. அங்கு தேவையான தெருக்களை அமைப்பதற்கும், கழிப்பிட வசதி செய்வதற்கும், குடிதண்ணீர் வழங்குவதற்கும் முடியாமல் இருப்பதால், மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவைகளுக்கு தன்னிறைவுத் திட்டங்களின் மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், இடைப்பாடி நகராட்சியில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட காவேரி குடிதண்ணீர் வழங்கும் திட்டம் தற்போது பெருகியுள்ள மக்கள் தொகைக்கு போதவில்லை. அங்கு தற்காலிகமாக மேல்நிலை தொட்டி கட்ட வேண்டியுள்ளது. கடந்த ஓராண்டாக சர்வ கட்சியினரும் வற்புறுத்தியும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி பகுதியிலுள்ள கிராமங்களுக்கு ஆழ்துளை கிணறு அமைத்துக் கொடுக்கவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

பல்வேறு வகையான புறம்போக்கு நிலங்களில் நீண்டகாலமாக குடியிருந்துவரும் ஏழை மக்களுடைய வீடுகளுக்கு பட்டா இல்லாமல் இருந்து வருகிறார்கள். இதனால் அந்த மக்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் வாழ்க்கை மேம்பாட்டுக் கடன்களைப் பெற தகுதி இல்லாதவர்களாக இருந்து வருகிறார்கள். எனவே அரசாங்க விதிகளை தளர்த்தி ஏழைமக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக தாங்கள் பண்படுத்தி, கிணறு வெட்டி, தன்னுடைய கடுமையான உழைப்பால் விவசாய நிலமாக்கப்பட்டு அதையே நம்பி வாழ்ந்துவரும், பல விவசாயிகள் உழவடை செய்துவரும், ஓடை, புறம்போக்கு போன்ற இடையூறு இல்லாத நிலங்களை பட்டா செய்து அவர்களுக்கு உடைமையாக்கப்பட வேண்டுமென்பதனையும் நான் வலியுறுத்திக்கேட்டுக் கொள்கிறேன்.



ஊராட்சி ஒன்றியங்களுக்கு தற்போது போதுமான நிதி வசதி ஒதுக்கப்படாததால் சாலை வசதிகள் செய்ய முடியாமல் பெரும்பாலான கிராம சாலைகள் பழுதடைந்துள்ளன. எனவே அதிகப்படி நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின்துறையால் தற்போது விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள குதிரை சக்திக்கு ரூ. 75 என்று விதித்ததால் கிணறுகளில் போதிய தண்ணீர் இல்லாத விவசாயிகளுக்கு மிகவும் சுமையாக உள்ளது. இதனையும் பரிசீலிக்கவேண்டும்.

கிராமங்களில் இலவச குடிசை விளக்கு திட்டம் மிக தாமதமாக செயல்படுகிறது. அதனை விரைவுபடுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இலவச குடிசை விளக்கு திட்டத்தை, பேரூராட்சிகளுக்கும், நகராட்சி பகுதிகளுக்கும் விரிவு படுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பெரும்பாலான ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை இல்லாமலும், வீடு கட்டப்படாமலும் இருந்து வருகிறது. வீட்டு மனையும், வீடு கட்டுவதற்கும் உறுதி செய்யப்படவேண்டும்.

கிராமங்களில் விவசாய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பும், அவர்களுக்கு ஓய்வூதிய திட்டமும், பணி காலத்தில் இறந்தால் அரசு உதவித் தொகையும் அளித்திடவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகாரிகளின் கையில் சீரழிந்து வருகிறது. அவைகளுக்கு தேர்தல் நடத்தப்படவேண்டும். கிராம விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த ஆறாம் தேதியன்று தமிழகத்திலே மிக அதிக எண்ணிக்கையுள்ள வன்னிய பெருமக்கள் சாலை மறியல் கிளர்ச்சி நடத்தியிருக்கிறார்கள். அவர்களில், கிட்டத்தட்ட 25 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், தங்களுக்கு கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 20 சதவீதம் வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார்கள். அவர்கள் நீண்டகாலமாக மகாநாடுகள் நடத்தியும், உண்ணாவிரதம் இருந்தும் இந்த அரசுக்கு பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பலமுறை முயற்சித்தும் நம்முடைய முதல்வர் அவர்கள், அவர்களை சந்திக்க மறுத்து இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த சமுதாயத்திலே கிட்டத்தட்ட நம்முடைய கூட்டணிக்கு பெரும்பாலான வாக்களித்த வன்னிய மக்கள் அவர்கள் படுகின்ற

துன்பத்தையும், அவர்களுடைய கோரிக்கைகளையும் நாம் அனுதாபத்தோடு கவனிக்கவேண்டுமென்பது எங்களுடைய கருத்து. அதனை ஏற்று அவர்கள் கேட்கின்ற அந்த விகிதாசார பிரதிநிதித்துவத்தை பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு, அம்பாசங்கர் அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்ட பிற்பட்டோர்நல கமிஷனுடைய பரிந்துரைகளை வெளியிட்டு அதிலுள்ள சிபாரிசுகளை அமுல் நடத்த அரசு முயறசிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு க்கொள் கிறேன்.

(முற்பகல் 11-10)

தமிழகத்திலே 2 கோடி மக்களைக் கொண்ட இந்த வன்னிய சமுதாயத்தினருடைய பிரச்சினையை நாம் அலட்சியப் படுத்துகிறோமா என்பதை இந்த நேரத்தில் பரிசீலிக்கவேண்டும் என்றும், இந்தப் பிரச்சினையை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்றும் நான் இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த கடுமையான வறட்சி நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஒரு சில ஆழ் குழாய் கிணறுகளை போடுவதற்கு ரிக் இல்லாமல் தாமதம் ஆகியிருக் கிறது. எனவே தேவையான ரிக்குகள் நமக்கு கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

*திரு. அ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதற்கண் என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொண்டும், எனக்கு பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டும் என்னுடைய பேச்சை துவக்குகின்றேன்.

மழை பொய்த்ததின் காரணமாக, மக்களுக்கு சிரமம் இல்லாமல், அரிசி கிடைக்க மத்திய அரசிடம் மாதம் 1 லட்சம் டன் அரிசி கேட்டதையும், சத்துணவு திட்டத்தால் 88 லட்சம் குழந்தைகள் பயன் அடைந்திருக்கிறார்கள், இலவசப் பாடப் புத்தகம், இலவச சீருடை, இலவச மருத்துவம் ஆகியவைகளை சிறப்பாக செயல்படுத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை உளமாரப் பாராட்டுகிறேன். மேலும் எனது தொகுதியான தாராபுரத்தில் கோட்டாட்சி அலுவலகம் கட்ட பண ஒதுக்கீடு, சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், குடிசைகளுக்கு மின் இணைப்பு, நெசவுத் தொழிலாளி இறந்தால் ரூ. 10,000 வழங்கும் திட்டம், கட்டடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம், விவசாயிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம், பாரம் தூக்குவோர் பாதுகாப்புச் சட்டம், கல்வித் துறையில்



தொழிற்கல்வியில் புரட்சிகரமானத் திட்டம், போக்குவரத் துறையில் அதிகமான வழித்தடங்களில் பேருந்துகளை அதிகப் படுத்தியது, இது போன்று பல துறைகளிலும் புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து,ஏழை எளிய மக்கள் வாழ வழி செய்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும்,இந்த அரசையும் மனமாரப் பாராட்டுகிறேன். எனது தொகுதியானது விவசாயிகள் நிறைந்த தொகுதி. விவசாயம் செய்ய திருமூர்த்தி அணையில் இருந்து, மலையைக் குடைந்து அமராவதி அணைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தையும் தாராபுரம் பகுதியில் விவசாயிகள் நன்மை பெறும் பொருட்டு பல்வேறு தொழிற் சாலைகளை அமைக்கும் திட்டத்தையும் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை கிழக்கு நோக்கிப் பாயும்படி செய்யத் திட்டம் தீட்டும் படியும் டாக்டர் புரட்சித் தலைவர் அரசைக் கேட்டுக் சொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் வீடுகள் கட்ட தற்போது ரூ. 6 ஆயிரம் என்பதை ரூ. 10 ஆயிரமாக உயர்த்த வேண்டுமாய் இந்த அரசையும், புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடர் நலத் துறையின் மூலம் குடிமங்கலம், மடத்துக்குளம், தாராபுரம் ஆகிய ஒன்றியங்களில் ஆதி திராவிட மக்களுக்கு தலா 500 வீடுகள் கட்டித் தர வேண்டுகிறேன். கைத்தறித் துறை மூலம் ஆதி திராவிட மாணவர்களுக்கு ஒரு நூற்பாலையை புதிதாக ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். ஆதி திராவிட மக்களுக்கு தீப் பிடிக்காத வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடிமங்கலம், தாராபுரம், மடத்துக்குளம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு பட்டா வழங்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதே நேரத்தில் வீடுகள் கட்ட 3 சென்ட்டாக உயர்த்தியது இந்த ஆட்சியில் தான் என்பதைத் தெரிவித்துப் பாராட்டுதலை யும் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் ஆதி திராவிட மக்களுக்கு கடன் கிடைப்பதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. சுலபமாக அவர்களுக்கு உதவிகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் சொள்கிறேன்.

மழை பெய்யாத காரணத்தால் எனது தொகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் விவசாயிகளிடம் வரி வசூல் செய்வதை சிறிது காலம் தள்ளிப் போட வேண்டுகிறேன்.

மேலும் எனது தொகுதியில் பரம்பிக்குளம், ஆளியார் திட்டத்தின் மூலம் 12,500 ஏக்கருக்கு பாசனக் கால்வாய்கள் வெட்டியும், இரண்டு ஆண்டுகளாகத் தண்ணீர் விடாமல் உள்ளது. இதனால் அந்தப் பகுதியில் விவசாயம் பாதிப்பதுடன் குடிநீர் பற்றாக்குறையும் கடுமையாக உள்ளது. உடன் இந்நிலைமையை போக்க வேண்டுகிறேன்.

மளக்கடவு, சின்னக்காம்பாளையம், காங்கயம்பாளையம் வெல்லம்பட்டி, சடைய பாளையம் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்து மக்களின் துயரத்தைப் போக்குமாறு வேண்டுகிறேன்.

எனது தொகுதியான தாராபுரத்தில் ரூ. 86 இலட்சத்தில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அனுமதியளித்த புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தாசநாயக்கன்பட்டி-அலங்கியம் சாலை குறுக்கே சண்முக நதியில் பாலம் கட்டித்தர வேண்டுகிறேன். இத் திட்டத்தை விரைவில் அமுல்படுத்த உத்தரவிட புரட்சித் தலைவர் அரசை வேண்டுகிறேன்.

எனது தொகுதியைச் சுற்றிலும் சாலைகளை பராமரித்து இன்னும் பல பேருந்துகளை விடவேண்டுகிறேன்.

மூண்டு வேலம்பட்டி, பொன்னாபுரம், புத்தூர் கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதில்லை. அதனால் ஏழை அரிஜன மக்களுக்கு எவ்வித உதவியும், அரசு அறிவித்த சலுகைகளும் கிடைக்கவில்லை. இந்த சங்கங்கள் செயல்பட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தாராபுரம் அரசு மருத்துவ மனையில் முன்பு 2 டாக்டர்கள் பணிபுரிந்து வந்தனர். தற்போது புரட்சித் தலைவர் ஆட்சியில் 10-க்கும் மேற்பட்ட டாக்டர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலான டாக்டர்களுக்கு சரியான இருக்கை வசதிகள் இல்லை. நோயாளிகளை கவனிக்கும்போது நின்று கொண்டு கவனிக்க வேண்டிய நிலை உள்ளது. அவர்களுக்கு உரிய வசதியும், வெளி நோயாளிகளுக்குத் தனி அறுவைச் சிகிச்சை அறையும் ஏற்பாடு செய்ய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அதே நேரத்தில் அரசு மருத்துவ மனையில் கண் சிகிச்சைப் பிரிவு தொடங்க அனுமதி வழங்கிய புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொளகிறேன்.

மேலும் தாராபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற ஆவன செய்யும்படியும் வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் கோழி வளர்ப்பு பண்ணைகள் அதிகமாக இருப்பதால், மேலும் அந்தப் பண்ணைகள் அபிவிருத்தியடைய தாராபுரத்தில் கோழித் தீவனத் தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசு ஆவன செய்யும்படி வேண்டுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏழை எளிய



மக்களுக்காக பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றிய புரட்சித் தலைவர் ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாக விளங்குகிறது என்பதனை தெரிவித்துக் கொண்டு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த நிதியாண்டிற்கான நிதி ஒதுக்க மசோதாவில் ரூ. 3419,11,87.000 நிதிகளை இந்த மசோதாவிலிருந்து பல்வேறு மானியங்களுக்கு ஒதுக்குகின்ற இந்த மசோதாவின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக ஒரு சிலபல கருத்துக்களை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

இந்த நிதி ஒதுக்கம் என்பது ஆரம்பத்திலே அறிமுகப் படுத்தப்பட்டு, ஆய்விற்கு பின்னர் இந்த நிதி ஒதுக்கம் உறுதி செய்யப்படுகிறது. இவ்வளவு நிலைகளை கடந்தாலும் கூட, இந்த நிதி ஒதுக்கம் பல பணிகளில் பல்வேறு துறைகளில் இவைகளுக்காகப் பயன்படுத்தப்படாமல் மீண்டும் இந்த நிதி, அரசாங்கத்திற்கே திரும்பி வருகின்ற சூழ்நிலை இருக்கின்றது என்றால், அதற்கெல்லாம் என்ன காரணம். 'நான் இம்ப்ளிமென்டேஷன், ஸ்லோ இம்ப்ளிமென்டேஷன்' என்கின்ற அடிப்படையில் திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதும், திட்டத்தை மெதுவாக, அல்லது மெல்ல மெல்ல நிறைவேற்றுவதும் தான் அதற்குக் காரணமாக இருக்கமுடியும்.

'காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல்' அவர்களுடைய ஆய்வுரையில், 1983–84-ல் ஆய்வுரை தந்திருக்கிறார்கள். அவருடைய அறிக்கையின்படி எந்தெந்த துறைகளில், எவ்வளவு பணம் மீண்டும் அரசாங்கத்திற்கு, திட்டங்களுக்கு செலவழிக்கப் படாமலே திரும்ப வந்திருக்கிறது என்பதற்கான விளக்கத்தை அந்த அறிக்கையில் 18—19ஆவது பக்கத்தில் நாம் பார்க்க முடிகிறது.

(முற்பகல் 11-20)

" ..In addition to those mentioned in paragraph 2,2.4 above, substantial surrenders arose in the following cases on account of either non-implementation or slow implementation of schemes.." அதிலே நூற்றுக்கு நூறு விழுக்காடு அப்படியே கொடுத்த பணத்தை திருப்பிக் கொடுத்த சில சான்றுகளை மட்டும், இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதிலே, "Education" (கல்வி) என்கிற தலைப்பின் கீழ், 'Establishment of Women's University at Kodaikanal' என்பதில் 90 விழுக்காடு அப்படியே திரும்ப பணம் சரண்டர்'

செய்யப்பட்டு இருக்கிறது. அதுபோன்று, 'Establishment of World Tamil Sangam at Madurai' என்பதில், 100 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் திரும்ப அரசாங்கத்திற்கு அப்படியே தரப்பட்டிருக்கிறது.

அதுபோன்று, 'பப்ளிக் ஹெல்த்' என்ற தலைப்பின் கீழ், கொடுக்கப்பட்ட பணம் முழுவதும் 100 விழுக்காடும், திரும்ப அரசாங்கத்திற்கே தரப்பட்டிருக்கிறது.

இப்படி எண்ணற்ற துறைகளிலே கொடுக்கப்பட்ட பணம் முழுவதும் அப்படியே அரசாங்கத்திற்கு செலவு செய்யப் படாமல் திரும்பத் தரப்பட்டிருக்கிறது. அதே, Report of the Comptroller and Auditor General of India 1983-84 என்கின்ற 1983–84ஆம் ஆண்டு ஆய்வு அறிக்கையில் 159ஆவது பக்கத்தில் கலைக் களஞ்சியம் தயாரிப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எப்படி திரும்பப் தரப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த ஆய்வறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"...Owing to release of the ad hoc grants by Government without sanctioning the project as such and discontinuance of the project by the Academy, the net grant of Rs. 3.23 lakhs, after taking into account the cost of furniture, library books and blocks (Rs. 0.10 lakshs) returned by the Academy to Government had remained unproductive (April 1984)" என்கின்ற அடிப்படையில் இப்படி ஒதுக்கப்பட்ட தொகைகள் அனைத்தும் செலவு செய்யப் படாமல் மீண்டும், மண்டும் அரசாங்கத்திற்கே வந்து கொண்டிருக்கிறது என்கின்ற நிலைமைகளை 'காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர்-ஜெனரல்' அறிக்கை தெரிவிக்கிறது.

இதுபோன்று அரசாங்கம் சார்பாக அல்லது பங்கேற்று நடத்துகிற 21 கம்பெனிகள் எந்த அளவுக்கு அவைகள் நஷ்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கான விளக்கத்தையும் அதே 'காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர்-ஜெனரல் ஆஃப் இந்தியா' 1983–84 (கமர்ஷியல்) என்கின்ற ஆய்வறிக்கையில் தெளிவாகச் சொல்கிறார்கள்.

அவர்கள் 'Tamil Nadu Sugarcane Farms Corporation Ltd.' உள்ளிட்ட 21 கம்பெனிகளில் செய்யப்பட்ட முதலீட்டை விட

'accumulated loss' (மொத்தப் சேர்ந்த நட்டம்) 'Paid up capital' (முதலீடு) ஐ-விட 'accumulated loss' (மொத்த நட்டப்) அதிகமாக இருக்கிறது என்பதை அந்த ஆய்வறிக்கை நமக்கு மிகத் தெளிவாக தெரிவிக்கிறது.



அதுபோன்று, 'பப்ளிக் அன்டர்டேக்கிங்ஸ்' பொதுத் துறை யிலே எல்லாம் நஷ்டம் தான் வருகிறது என்பதை இதே ஆய்வறிக்கையில் மிகத் தெளிவாக 'ஆடிட்டர் ஜெனரல்' அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இன்னொரு கருத்து—'காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா' ஆய்வறிக்கையில் ஒரு இடத்தில், 'வரி வருவாயையாவது ஒழுங்காக அரசாங்கம் செய்கிறதா என்றால் அதிலே கூட, வரி வருவாயை சேகரிப்பதிலே கூட அரசாங்கம் தவறு செய்து வருகிறது என்பதை எடுத்துக்காட்டு கிற அடிப்படையில், அந்த ஆய்வறிக்கையில் 69ஆவது பக்கத் தில் எப்படி பணம் அரசாங்கத்திற்கு வருவாய் குறைவாக வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிற அடிப்படையில், The acceptance of lower offers at the subsequent resale, instead of the higher offers received at the earlier sale resulted in loss of revenue amounting to Rs. 5,81,964 என்று தெளிவாகக் காட்டி இருக்கிறார்கள்.

எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நிதி ஒதுக்கீடு செய்வதிலே கூட நிதி செலவழிக்கப்படாமல் திரும்ப வருகிறது. அதுபோல் பொதுத் துறைகளிலே நஷ்டம் ஏற்படு கிறது. வரி வருவாய் ஒழுங்காகச் செய்யப்படவில்லை என்பதை ஆடிட்டர் ஜெனரல் தன்னுடைய ஆய்வறிக்கையில் மிகத் தெளிவாக எடுத்துக் தெரிவிக்கிறார்கள்.

அடுத்து, இன்றைய தினம் இந்த நிதி ஒதுக்கச் சட்டத்தின் கீழ், பேசுகிற நேரத்தில் ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகி றேன். இன்று காலையிலே கூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர் கள், விவசாயிகளுடைய பிரச்சினையைக் குறித்து பதில் சொல்கிற போது, விவசாயிகளில் சிலர் கடனைக் கட்டாமல், ஆடம்பரச் செலவுகளில், திருமணம் போன்ற ஆடம்பரச் செலவுகளில் எல்லாம் ஈடுபடுகிறார்கள். ஆனால், வாங்கிய கடனைக் கட்ட மறுக் கிறார்கள் என்று தெரிவித்தார்கள். நான் இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், விவசாயிகள் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகாலமாக மாறி மாறிவரும் வெள்ளச் சேதம், மாறிமாறி வருகின்ற வறட்சி நிலைமைகள் ஆகிய இப்படிப்பட்ட நிலைமைகளின் காரணமாக, நீர்ப்பற்றாக் குறையின் காரணமாக தொடர்ந்து விவசாய விளை பொருள் கள் உரிய முறையிலே வராத காரணத்தினால் வாங்கிய கடனைக் கட்டுவதற்குரிய சக்தியை இழந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கம், ஏதோ ஒரு சிலர் ஆடம்பரமாக இருக்கிறார் கள் அல்லது அதிகமான நிலத்தை வைத்திருக்கிறார்கள், அப்படி வைத்துக்கொண்டு கட்டாமல் இருக்கிறார்கள் என்பதைக் காரணம் காட்டி, பல இலட்சக்கணக்கான விவசாயிகளைக் கொடுமைப்படுத்தி, அவர்கள் வாங்கிய கடனை உடனடியாகக்

கட்ட வேண்டுமென்று வற்புறுத்தி, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கடன்களை வசூல் செய்வது என்பது உள்ளபடியே முறையற்ற ஒன்று. அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்து, விவசாயிகள் கட்ட வேண்டிய கடன்களை உடனடியாகத் தள்ளிப் போடுவதற்கான வழிவகைகளை இந்த அரசு உருவாக்க வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இராமநாதபுரத்தில் சமீபத்தில் 5–4–1986ஆம் நாளன்று இராமநாதபுரம் பெரிய கடை வீதியில் கடை வைத்து நடத்திக் கொண்டிருக்கின்ற இஸ்லாமியர்களுக்குச் சொந்தமான பெரிய பெரிய கடைகளையெல்லாம் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்து இருக்கின்றன. பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், அப்படிக் கொள்ளையடித்துச் சென்ற அல்லது கலவரத்தை உருவாக்கியவர்களில் ஒருவர்,***

என்று காவல் துறையிலே புகார் கொடுத்திருக்கிறார்கள், ***

இஸ்லாமியர்கள் கடை வைத்திருக்கின்ற அந்த இடத்தில் தொடர்ந்து காலை 10 மணிக்கு 200 பேர், 300 பேர் சேர்ந்து கொண்டு கடைகளை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அந்தக் கலவர இடத்திற்கு அருகில்தான் காவல் நிலையம் இருக்கிறது. ஆனால் காவல் நிலையத்திலே உள்ள அதிகாரிகள் வந்தார்களா என்று கேட்டால் வரவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே உள்ள இஸ்லாமிய சகோதரர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் காவல் துறையில் புகார் கொடுத்திருக்கிறார்கள். 6ஆம் தேதியன்று—கலவரம் நடந்த மறு தினத்தில் இஸ்லாமியர்கள் கடுமையான தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட முஸ்லீம் லீக் தலைவர் ரகீம், அவருடைய சகோதரர் அஜீஸ், அந்த நகராட்சியின் கவுன்சிலர் ஆகியவர்கள் தொல்லைகளுக்கு ஆட்படுத்தப்பட்டு அவர்கள்மீதுதான் காவல் துறையினர் வழக்கைப் போட்டிருக்கிறார்களே அல்லாமல் உண்மையிலேயே இப்படிக் கொள்ளையடித்தவர்கள் மீது, இப்படிச் சேதத்திற்குக் காரணமாக இருந்தவர்களின்மீது வழக்கு போடவில்லை. நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்வதெல்லாம், இஸ்லாமிய சகோதரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் ஆதரவாக நின்றிருந்தார்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்திற்காப் பணியாற்றினார்கள் என்பதற்காக அங்கேயுள்ள அ.தி.மு.க.

*** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அரசியல் கட்சிதான் இவற்றையெல்லாம் செய்திருக்கிறது என்று பகிரங்கமாகவே காவல்துறையிலே புகார் கொடுத்தும் கூட, இதுவரையிலே உரிய நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற அல்லது நஷ்டஈடு கொடுக்கின்ற நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய ஆர்க்கைவ்ஸ்—ஆவணக் காப்பகம் சென்னையிலே இருக்கின்றது. அந்த ஆவணக் காப்பகமானது, பல ஆண்டுக் காலமாகச் சேகரிக்கப்பட்ட ஆவணங்களைப் பாதுகாக்கின்ற நிறுவனமாகும் அது. இது அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இங்கே உள்ள ஆவணங்களைப் பொறுத்தமட்டில், இந்த ஆவணக் களரியின் பணி என்பது, இந்த ஆவணங்களைப் பாதுகாப்பது, நூலாக வெளியீடு செய்வது போன்ற பணிகளிலே ஈடுபட்டிருக்கிறது. ஆனால் அங்குள்ள அதிகாரிகளெல்லாம்—முறையாகத் தொழில் நுட்பம் பயின்ற அதிகாரிகள் அங்கே நியமிக்கப்படாத காரணத்தினாலே, பல நூறு ஆண்டுகளுக்கு முந்தைய அந்த ஆவணங்கள் இன்றைக்கு பழுதுபட்டதாகவும், கெட்டுப் போனதாகவும் இருப்பதால், அவற்றைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் அந்த ஆவணங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு இடங்களில் மாவட்ட ஆவண நிலையம் என்று திருச்சி, சிதம்பரம், மதுரை போன்ற இடங்களிலே திறந்தபோதிலும் அந்த மாவட்ட ஆவண நிலையங்களுக்கு அதிகாரிகள் ஒழுங்காக நியமிக்கப்படவில்லை ; சில ஆவண நிலையங்களுக்குக் கட்டிடங்கள் வாங்கப்படவில்லை; அல்லது அவற்றிற்கான அலுவலகங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை என்ற நிலைமை அங்கே இருக்கிறது. எடுத்துக் காட்டாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், சில நூல்கள் ஆவணக் களரியால் ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றால் அதையே தனியார் பிரசுரித்து 350 ரூபாய்க்கு விற்கின்ற சூழ்நிலை உருவாகின்றது என்று சொன்னால் எந்த அளவிற்கு இந்த ஆவணக் காப்பகம் படுமோசமான சூழ்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-30)

இன்னொன்று, சமீபத்திலே மதுரையில், 12, 13, 14 தேதிகளில், உலகத் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பிக்கின்ற ஒரு மாபெரும் விழாவை அரசு ஏற்பாடு செய்து நடத்தியது. அந்த விழாவில் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏறத்தாழ 2 கிலோ அளவுக்கு தங்கத்தால் செய்யப்பட்ட பொற்றாமரை ஒன்றை, உலகத் தமிழ் மக்கள் சார்பாக வழங்கினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் வழங்கியது தவறு என்று நான் சொல்லத் தயாராயில்லை. ஆனால், ஒரு

முதல் அமைச்சருக்கு, மதுரையில் முதல் அமைச்சர் என்ற அந்தஸ்தில், அந்த விழாவிலே கலந்து கொண்டவருக்கு அந்தப் ரிசினைத் தருகிறார்கள். எனவே, அப்படிப் பெற்ற அந்தப் பொற்றாமரையை, 2 கிலோ எடையுள்ள, பல இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள அந்தப் பொற்றாமரையை அரசாங்கத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஒப்படைத்து விட்டார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படி ஒப்படைக்காவிட்டால், ஒன்றை உங்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாள் முதல் அமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை வெளிநாட்டுக்குச் சென்றபோது, அவருக்கு டிராக்டர் பரிசளித்த நேரத்தில், அதை விவசாயக் கல்லூரிக்கு அனுப்பிய பின்னாலும், தலைவர் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த சந்தர்ப்பத்தில், வெளிநாட்டுக்குச் சென்று பரிசாக வாங்கிய டிராக்டரை, தன்னுடைய சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டார் என்று சொல்லி, ஊழல் பட்டியலிலே சேர்த்தவர்கள் எல்லாம் இங்கே இருககிறார்கள். எனவே தான், நான் இந்த , மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், ஏற்கெனவே அப்படிச் சொல்லியவர்கள், ஏற்கெனவே விவசாயக் கல்லூரிக்கு அந்த டிராக்டர் அனுப்பப்பட்ட பின்னாலும், அது ஊழல் பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறது என்றால் அப்படிச் சொல்லியவர்களும் இங்கே இருக்கிற காரணத்தாலே, இன்றையதினம் 2 கிலோ தங்கத்தால் ஆக்கப்பட்ட அந்தப் பொற்றாமரையை முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்திற்கு வழங்கி விட்டார்களா என்பதை இந்த மன்றத்தின் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, நெய்வேலிச் சுரங்கத்தைப் பொறுத்தமட்டில், நெய்வேலியில் இரண்டு சுரங்கங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அந்த நெய்வேலி சுரங்கம் வெட்டப்படுவதன் மூலமாக, தங்களுடைய நிலங்களை, வீட்டுமனைகளை இழந்தவர்களுக்கெல்லாம் அப்பொழுது ஒரு நம்பிக்கை ஊட்டப்பட்டது. அப்படி வீடிழந்தவர்கள், நிலத்தை இழந்தவர்களுக்கெல்லாம், மீண்டும் வீட்டு மனை வழங்கப்படும், நிலம் வழங்கப்படும், வேலை வாய்ப்பு வழங்கப்படும், நிலத்திற்கு நட்ட ஈடு வழங்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இன்று வரை வீட்டுமனை வழங்கப்படவில்லை. எதுவும் ஒழுங்காக வழங்கப்படவில்லை, வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை. அது போல், நட்டஈடு என்று சொல்கிற நேரத்தில், அரசாங்கத்தின் மூலமாக, வழங்கப்படுகிற நட்டஈடு ஒரு ஏக்கருக்கு ரூ. 2,000-லிருந்து ரூ. 5,000 வரை இருக்கிறது. ஆனால், அதற்கே நீதிமன்றத்திற்குச் சென்றால், ரூ. 45,000-லிருந்து, ரூ. 65,000 வரையிலும் வருகிறது. நீதிமன்றத்திற்கு அரசாங்க வழக்கறிஞர் ஒழுங்காக வருவதில்லை. அவரைக் கேட்டால், எனக்கு ஒழுங்காகச் சம்பளம் கிடைக்கவில்லை, ஊதியம் டைக்கவில்லை என்று காரணம் சொல்கிறார்,



இந்த மன்றத்திலே நான் தெரிவிப்பதெல்லாம் அப்படி நிலத்தை இழந்தவர்களுக்கு உடனடியாக நீதிமன்றத்தின் மூலமாக, தேவைப்பட்டால், அரசாங்க வக்கீலை, ஸ்பெஷலாக, தனித்த முறையிலே ஏற்பாடு செய்து, அல்லல் பட்டுக் கொண்டிருக்கிற அந்த விவசாயிகளுக்கெல்லாம் நட்டஈடு வழங்குகிற ஏற்பாட்டை, இந்த அரசு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாநகராட்சி, கோவை மாநகராட்சி, சென்னை மாநகராட்சிகளில் எல்லாம் தேர்தல் நடத்தாத காரணத்தாலே, அங்கே எல்லாம் இன்றைக்கு வீட்டு வரியை அதிகமாக உயர்த்தி இருக்கிறார்கள். 3 மடங்கு, 4 மடங்கு என்று உயர்த்தி இருக்கிறார்கள். அப்படி உயர்த்தப்பட்டதாலே சாதாரண மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிசீலனை செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தமட்டில், ஆழ்வார்புரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடிழந்தவர்களுக்கெல்லாம் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, வீடு வழங்கப்படும் என்று சொல்லிய பின்னால், வீடு வழங்குகின்ற முறையிலே நிறைய குறைபாடுகள் நடந்திருக்கின்றன. கால அவகாசம் இல்லாத காரணத்தாலே, விரிவான மனு ஒன்றினை நான் மாண்புமிகு வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சரிடம் வழங்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும்கூட, இந்த அளவுக்கு எனக்கு வாய்ப்பினை வழங்கிய நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலவைர் அவர்களே, திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது உலக தமிழ் சங்கத்தில் ~தமிழகத்தினுடைய புரட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்கிய பொற்றாமரை பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே தமிழக முன்னாள் முதலமைச்சர், கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒவ்வொரு முறையும் பிறந்த நாளுக்கு கை ரிக்ஷா ஒழிப்பு என்ற கொள்கையில் நிதி வாங்கியிருக்கிறார்கள். வாங்கப்பட்ட நிதி தமிழக அரசுக்கு கொடுக்கப்பட்டதா? அவர்கள் எந்த அடிப்படையில் செய்தார்களோ அதே அடிப்படையில் இதற்கும் பொருந்துமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு முறையும் நிதி வசூலிக்கப்பட்டது ......(குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மதுரையிலே பொற்றாமரை பெற்றார். அது அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டதா என்ற வினாவிற்கு மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள் தலைவர் கலைஞர்

அவர்கள் முன்னாள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் பல்வேறு பரிசுகள் பெற்றார்கள் என்னவாயிற்று என்று கேட்டார்கள். அவர் முதலமைச்சர் என்ற பொறுப்பிலே இருந்த நேரத்தில் பெற்ற பரிசுகள் அனைத்தும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ......(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் பேசி விட்டீர்கள். அவர் பதில் சொல்லிவிட்டார். இப்படித்தான் பதில் சொல்லவேண்டும் என்று சொல்ல முடியாது.

***திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இன்றையதினம் 59 மானியகோரிக்கைகளை உள்ளடக்கி ரூ. 3,419 கோடிக்கான ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும் என்ற வகையில் இந்த மசோதா இன்றைய தினம் அவையில் வந்த நேரத்தில் எனக்கும் ஒரு வாய்ப்பினைத் தந்தமைக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் முதலமைச்சர் ஏழை எளிய மக்கள் வாழவேண்டும் என்பதற்காக நல்ல திட்டங்களையெல்லாம் தீட்டி அவர்கள் வாழ்விலே வளம் பெற வேண்டும், பஞ்சடைந்த கண்களும், உலர்ந்த உதடுகளும், ஒட்டிய வயிறுகளுமாக காட்சியளிக்கின்ற அந்த ஏழை எளிய மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக திட்டங்களை தீட்டியிருக்கிறார். இன்றைய தினம் பாசனத்தை பொறுத்தவரை தனி கவனம் செலுத்தி 64,86,31,000 ரூபாயையும், பாசனம் குறித்த மூலதனச் செலவு ரூ. 63,89,13,000 ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற புரட்சித் தலைவர் அரசுக்கு தஞ்சை மாவட்ட மண்ணில் பிறந்தவன், மலை நின்று தரை நோக்கிப் பாய்கின்ற வெண்புகை காவேரித் தாயின் மடியிலே வளர்கின்ற சென்னை தமிழர்கள் என்ற முறையிலே ஒரு சில கருத்துக்களை மெத்த பணிவன்போடு உரைப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை பணிவன்போடு சமர்ப்பித்துக் கொள்கிறேன். காவேரி டெல்டா பகுதிகளைச் சீர்படுத்த வேண்டும், செம்மைப்படுத்த வேண்டும், விவசாயத்திற்கு ஏற்ற ஏற்புடைய நிலங்களாக மாற்ற வேண்டும் என்ற காரணத்தினால் உலக வங்கியிடம் ஏறத்தாழ 366 கோடி ரூபாய்க்கு கடன்கள் பெறுவதற்கு தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டில் மட்டும் 136 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தீட்டி அவர்கள் மத்திய அரசின் அனுமதியோடு உலக வங்கி கடனாக அளிக்கும் என்று எதிர்பார்ப்பதாக முன்பு கொடுக்கப்பட்ட கோரிக்கைகளின்போது சொல்லியிருந்தார்கள். இந்த நேரத்தில் ஒன்றை கோடிட்டுக் காட்டுவது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகின்றேன். 1973ஆம் ஆண்டு பதவியில் இருந்த ஆட்சியாளர்கள் ஏறத்தாழ



40 கோடி ரூபாய்க்கு காவேரி டெல்டா மார்டனைசேஷன் என்ற சீர் அமைப்பு பணிகளுக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டி உலக வங்கியிடமிருந்து 40 கோடி ரூபாய் பெற வேண்டும் என்று திட்டம் தீட்டி அவர்கள் ஒரு திட்டத்தை மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பி, உலக வங்கிக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். அப்பொழுது உறுப்பினர்கள் கேட்டபோது அன்றைய தினம் இங்கே முன்னாள் முதலமைச்சராக இருந்த மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் இடைமறித்து, பொதுப்பணித்துறை மானியம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். 1973ஆம் ஆண்டு உலக வங்கியின் அனுமதிக்காக 40 கோடி ரூபாய் அளவிலே திட்டத்தை தீட்டி அனுமதி கேட்டு இருக்கிறோம். அதை நாங்கள் பெற்று விடுவோம். பெற்றவுடன் காவேரி டெல்டா பணி சீரமைக்கப்படும் என்று சொன்னார்கள். அடுத்து 1975ஆம் ஆண்டு நீர்ப் பாசனம் குறித்த கோரிக்கை நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அன்றைய தினம் இருந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மிக எளிதாக பதிலைச் சொல்லி விட்டார்கள். கர்நாடக அரசு மறுத்த காரணத்தினால் உலக வங்கி அந்த 40 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு கொடுக்க அனுமதி மறுத்து விட்டது என்று மிக எளிதாகச் சொல்லி, தஞ்சை மாவட்ட மக்களின் வயிற்றிலே மண் போடுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி விட்டார்கள்.

(முற்பகல் 11-40)

1974ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காத அந்த அரசு சரியான ஒரு நடவடிக்கையை 1975ஆம் ஆண்டு எடுக்கத் தவறிய காரணத்தால் இந்த மாமன்றத்தில் நான் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கையின் ஒரு வரி அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அது தஞ்சை மாவட்ட மக்களின் உள்ளத்தில் ஒரு அச்ச உணர்வைத் தோற்றுவித்து இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மானியக் கோரிக்கையில் ஒரு வார்த்தை போடப்பட்டிருக்கிறது. உலக வங்கிக் கடனுக்கு நாங்கள் அனுப்பி இருக்கின்ற திட்டம் கர்நாடக மாநில அரசின் அனுமதி பெற்று அளிக்கப்படும் என்றும் நம்பிக்கையோடு இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். காவிரிப் பிரச்சினை தீராமல் இருக்கிறது. லிட்டிகேஷன் இருக்கிறது, டிஸ்ப்யூட் இருக்கிறது என்று சொல்லி, காரணம் காட்டி கர்நாடக அரசு அன்றைக்கு 40 கோடி ரூபாய் திட்டம் தீட்டப்பட்ட அளவில் மறுத்து இருக்கிறது. இன்றைக்கு 366 கோடி ரூபாய்க்குத்தீட்டப்பட்டிருக்கிறதே இதே திட்டம்1973ஆம் ஆண்டு 40 கோடி ரூபாயில் தீட்டப்பட்ட திட்டமாகும்.

அன்றைய தினம் இருந்த கையாலாகாத்தனம் கொண்ட அரசினுடைய மெத்தனப் போக்கால், அல்லது கவனக் குறைவினால், அல்லது அலட்சியப் போக்கினால், தஞ்சை மாவட்ட மக்களுக்கு

உதவுகின்ற தன்மை இல்லாமல் பிறந்த மண், பிறந்த மண் என்று பெருமை தேடிக் கொண்டவர்கள் அந்தப் பிறந்த மண்ணை அலட்சியப்படுத்திய காரணத்தால் அன்றைய தினம் அவர்கள் செய்யத் தவறினார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி நாம் பொறுப்புக்கு வந்திருக்கிறோம். (குறுக்கீடு) அவர்கள் செய்யத் தவறியதைச் சுட்டிக் காட்டித்தான் நாம் பொறுப்புக்கு வந்திருக்கிறோம் என்பதை நினைவுப்படுத்துகிற நேரத்தில் 366 கோடி ரூபாய்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் காவிரிப்படுகையில் வாழ்பவர்களுக்கு நன்மை செய்கின்ற திட்டத்தைப் பொறுத்த வரையில் கர்நாடக அரசின் அனுமதி பெற்று, மத்திய அரசின் இசைவு பெற்று உலக வங்கியிடம் கடன் பெற வேண்டி இருக்கிறது என்று எழுதியிருக்கிறீர்கள். ஆனால் கர்நாடக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறபோது விழிப்புணர்வோடு இருந்து அவற்றைத் தேடித் தர வேண்டும் என்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நீர்ப் பாசனப் பகுதிகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை எல்லாம் இந்த அரசு அகற்றி இருக்கிறது. எந்த அரசும் செய்யத் தவறிய பணியை புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செய்திருக்கிறது. நீர்ப் பிடிப்புப் பகுதிகள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பிடித்துத் தரப்பட்டிருக்கிறது. அவ்வாறு பிடித்துத் தரப்பட்ட அந்தப் பகுதிகளில் இன்றைய தினம் நீர் தேங்குகின்ற அளவில் அங்கே வழிவகை இல்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அந்த நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் போடப்பட்ட மதகுகளைப் பொறுத்தவரையில் மிக ஆழமான நிலையில் போட்டிருக்கிறார்கள். எனவே இப்போது நீர்ப் பிடிப்புப் பகுதிகளை எல்லாம் அதிகப்படுத்தியிருந்தாலும் கூட அங்கே தண்ணீர் தேங்குகிற சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே அங்கே தண்ணீர் தேங்குகிற நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் ஒரு பொது உத்தரவைப் போட்டு அந்தப் பகுதிகளில், தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் உள்ள ஏரிகளில் போடப்பட்டிருக்கின்ற வடிகால் மதகுகளை எல்லாம் மேலே போட வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டும். உடனடியாக அதற்கு உத்திரவிட வேண்டும்.

அதிகாரிகளிடத்திலே அதுபற்றிப் கூறும்போது உரிய உத்தரவுகள் எங்களுக்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே அதனை உடனடியாச நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் காவிரி பொய்த்த நிலைமையில் இரண்டாயிரம் குழாய்க் கிணறுகளை அமைத்துத் தருவதற்கான திட்டங்கள தீட்டப்பட்டும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எனவே அந்த வடிமுனை குழாய் கிணறுகளை அருள் கூர்ந்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



நீர்ப் பாசனத்திற்காக தண்ணீர் இறைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிற மோட்டார்களுக்கு மின்னிணைப்பு கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஒரு வரைமுறை தஞ்சை மாவட்டத்தில் உருவாக்கி இருந்தார்கள். கடந்த வறட்சிக் காலத்தின்போது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது அவர்கள் அந்த வரைமுறையைப் பார்க்காமல், ப்ரையாரிட்டி என்பதைப் பார்க்காமல் அனைத்து மோட்டார்களுக்கும் மின்னிணைப்பு கிடைக்க உத்தரவாதம் அளிக்கிறோம் என்று சொல்லிவிட்டு வந்தார்கள். பல்வேறு இடங்களிலிருந்து 56 டிரான்ஸ்பார்மர்களைத் தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றி நிச்சயமாக மின் இணைப்பு கொடுக்க உறுதி செய்கிறேன் என்று உறுதியளித்து விட்டு வந்தார்கள். அதையும் இந்த ஆண்டு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று, இங்கே பேசுகிற நேரத்தில் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் 431 விடுதிகள் பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் தமிழகத்தில் இருக்கின்றன. இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த 431 விடுதிகளில் 31 விடுதிகளுக்கு மட்டும்தான் சொந்தக் கட்டிடங்கள் இருக்கின்றன. அவைகள் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. மீதம் உள்ள விடுதிகளுக்கு ஏறக்குறைய ஆண்டுதோறும் 22 லட்சம் ரூபாயை வாடகையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களிடம் கலந்து பேசி ஒரு பெரும் தொகையை இதற்கு ஒதுக்கி, பெரிய திட்டத்தைப் போட்டு, ஏதாவது ஒரு நிதி நிறுவனத்திடமிருந்து கடனாவது பெற்று நிரந்தரமான கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்போமேயானால் அவர்களுக்கு வாடகையாக இப்போது கட்டிக் கொண்டிருக்கும் தொகையை தவணை முறையில் ஈடாகக் கடனை திருப்பிச் செலுத்த ஏதுவாக இருக்கும். அதையும் அருள்கூர்ந்து இந்த ஆண்டு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்றே பெரும்பாலான அரசுத் துறைக் கட்டிடங்கள் கட்டப்படவே இல்லை. இன்றைய தினம் கல்விக்காக 550 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். பெரும்பாலான பள்ளிகளில் இன்றுவரை கட்டிடங்கள் கிடையாது. வெள்ளை ஏகாதிபத்தியம் ஆண்டபோது கட்டப்பட்ட கட்டிடங்கள் இடிந்து விழக்கூடிய நிலையில் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அண்மையில் கூட தஞ்சை மாவட்டத்தில் ஈச்சங்கோட்டை என்ற கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து ஒரு பள்ளி ஆசிரியர் மரணம் அடைந்து விட்டார். 5, 6 குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை தவிர்க்கின்ற வகையில் தாராளமாக புதிய கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து ஒன்றே ஒன்றை மட்டும் இங்கிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். இங்கே பேசியபோது நமத அருமை நண்பர் பொன் முத்து ராமலிங்கம் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். உலகத் தமிழ்ச் சங்கம் துவக்க விழாவிலே கொடுக்கப்பட்ட 2 கிலோ தங்கத்தை முதலமைச்சர் அவர்கள் அரசுக்கு அளித்து விட்டார்களா என்று கேட்டார். நான் அவருக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் வேறு ஏதேதோ பிரச்னைகளை தொடுவார்கள் என்று நானும் ஆவலோடு எதிர் பார்த்திருந்தேன். அவற்றில் ஒன்று இலங்கைத் தமிழர் பிரச்சினை. காரணம் தமிழர் நலனில் அக்கறை கொண்ட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நாங்கள் என்று சொல்லிக் கொள்வார்களே அதனால். (மணியடிக்கப் பெற்றது)

மிக முக்கியமானது ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

எந்த ஒரு சூழ்நிலையாக இருந்தாலும் சரி, எதைப் பெற வேண்டும் என்று நினைத்தாலும் சரி, தமிழர்களின் வயிற்றில் அடித்துத்தான் அதைப் பெற வேண்டும் என்ற உணர்வு, எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் தமிழகத்தை ஆளும் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு கிடையாது என்பதையும் உதய குமாரனின் உயிரைக் கொண்டு டாக்டர் பட்டப் பெற்றவர் அல்ல என்பதையும் இந்த நேரத்தில் அழுத்தம் திருத்தமாக இந்த மக்கள் மன்றத்திலே கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன் சட்டமன்றத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இலங்கைத் தமிழர் பிரச்னையை எடுத்துச் சொல்வார்கள் என்று ஆவலோடு எதிர் பார்த்தேன். ஆனால் இல்லை. இன்று அசாதாரண சூழ்நிலையில் வெங்குறுதி சாக்காட்டில் விளையாடி களம் கண்ட தமிழர்களின் தலை துண்டிக்கப்பட்டு, ரத்த நாளங்கள் அறுத்தி எறியப்பட்டு, கபால ஓடுகள் உடைத்தெறியப் பட்டு, இலங்கையிலிருந்து இன்றைய தினம் தமிழர்கள் அகதிகளாக திரும்பி வருகிறார்களே, அந்தத் தமிழர்களைப்பற்றி இந்த மன்றத்திலே எடுத்து வைப்பார்கள் என்று எதிர் பார்த்தேன். இந்தியாவோடு நாம் இணைந்து ஒரே நாடாக இருக்கிறோம் ஆகவே அவர்களுக்கு உதவ வேண்டும் மத்திய அரசு என்ற வகையில் ஏதாவது இந்த மன்றத்திலே சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் இந்தியா ஒரு நாடுதான். அதில் தமிழகம் ஒரு தனித் தீவு என்று அவர்கள் தலைவர் ஏற்றுக் கொண்டு இருக்கும் கொள்கையை தாங்களும் ஏற்றுக் கொண்டிருப்பதுபோல் செயல்படுகிறார்கள் என்று கருதுகிறேன்.

அதனால்தான் அண்மையிலே நடந்த மதுரை மாநாட்டிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்திலே எதையும் தெளிவுபடுத்தவில்லை. அதை நான் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.



இங்கே வைத்திருக்கின்ற மானியத்திலே இலங்கை தமிழர்களுக்காக 104 கோடி ரூபாயை செலவழிப்பதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள். கட்டபொம்மனுக்கு ஒரு எட்டப்பன் வாய்த்ததுபோல், குட்டிமணிக்கு யாரோ ஒருவன் வந்து வாய்த்தது போன்ற துரோக உள்ளத்தைக் கொண்டவர் அல்லர் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள். தாய் உள்ளம் கொண்டவர் என்ற காரணத்தால் அகதிகளாக திரும்பியிருக்கின்ற அந்த அன்பு சகோதரர்களுக்கு 104 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்களின் மறுவாழ்வு பணிக்காக, நலத் திட்டங்களுக்காக, அதை நான் மனதார பாராட்டுகிறேன். உளமார பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் இந்த மன்றத்தில் தெளிவாக கூற விரும்புவது என்னவென்றால், நிச்சயமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்த மன்றத்தின் வாயிலாக ஒரு தெளிவான முடிவை தமிழக அரசு எடுத்தாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். செய்வோம் அல்லது செத்து மடிவோம் என்ற வகையில் ஒரு முடிவினை நாம் உடனடியாக எடுத்தாக வேண்டும் இலங்கைத் தமிழர்கள் பிரச்னையில். அந்த நிலையில் மத்திய அரசை வலியுறுத்தக் கடமைப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம் உதிரம் அங்கே சின்னாபின்னப்படுத்தப்படுகிறது. நமது உதிரங்கள் அங்கே சுட்டுக் கொல்லப்பட்டு தள்ளப்படுகிறது. கடலிலே பிணமாக மிதக்கிறார்கள். அந்த உணர்வை பெற்று மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும். பணி முடிக்க வேண்டும், வினை முடிக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன்.

(முற்பகல் 11.50)

திரு. மா. மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான செய்தியை சொல்லியிருக்கிறார்கள். 1972-ம் ஆண்டிலே தஞ்சை மாவட்டத்தினுடைய வடிகால்கள் கோட்டம் உருவாக்கப்பட ஏறத்தாழ 40 கோடி ரூபாய்க்கு மேலே திட்டங்கள் உருவாக்கப் பட்டு, உலக வங்கியின் கடனைப் பெற மத்திய அரசின் ஒப்புதலை கேட்டபோது அதை மத்திய அரசு மறுத்து விட்டது. அன்றைக்கு மைசூர் அரசாங்கம் அரசியல் காரணமாக அதைக் கொடுக்கக் கூடாது என்று மறுத்தது. அப்படி மறுத்தாலும் கூட 400 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டம் இருந்த காலத்தில், 12 கோடி ரூபாயை உலக வங்கியிலிருந்து பெற முடியாத நேரத்தில், மாநில அரசே 12 கோடி ரூபாயை செலவு செய்தார்கள். அதற்கான திட்டங்களைத் தீட்டினார்கள். இதற்கு காரணம் தீட்டப் பட்ட திட்டம் பெயிலியர் ஆகிவிடக் கூடாது என்பதற்காக அப்படி செய்தார்கள். ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் தீட்டப்பட்டு ஒரு ஆண்டுக்காலம்

ஆகியும்கூட, உலக வங்கி கொடுக்கவில்லையென்பதால் செயல் படுத்த முடியாமல் இருக்கிறது. மாநில அரசு நிதியிலிருந்து கூட செலவு செய்யப்படாமல் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் ஆளும்கட்சியில் இருப்பதால் மாநில அரசை வற்புறுத்தி ஆவன செய்ய வேண்டும். அன்றைக்கு 400 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டம் இருந்தபோது 12 கோடி செலவு செய்தார்கள். (மணியடிக்கப் பெற்றது).

திரு. ப. ந. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே. உறுப்பினர் மணிமாறன் அவர்கள் சொல்வதெல்லாம், நீங்கள் உலக வங்கிக்கு 40 கோடி ரூபாய் அளவில் திட்டத்தை தீட்டி 1972-ம் ஆண்டிலோ, 1973-ம் ஆண்டிலோ அனுப்பினீர்கள். நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் சொன்னது, அனுப்பப்பட்ட திட்டம் 1975-ம் ஆண்டில் மறுக்கப்பட்டு விட்டது என்று பதில் வந்தது. 12 கோடி ரூபாய் காவிரி டெல்ட்டா பகுதியை நவீனப்படுத்துவதற்காக நமது நிதியிலிருந்து கொடுத்தீர்கள். அதையும் நான் மறுக்கவில்லை. நான் சொன்னது உங்களுடைய இயலாமை காரணமாக, கர்நாடகா அரசிடம் சரியாக எடுத்துரைக்காததால் 40 கோடி ரூபாய்க்கு திட்டப்பட்ட திட்டம் இன்றைக்கு 360 கோடி ரூபாய் அளவிற்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும் உட்காருங்கள். இப்படி பேசிக் கொண்டிருந்தால் முடிவே இருக்காது.

திரு. மா மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது.........................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏதாவது தவறாக இருந்தால் நீங்கள் பேசும்போது சொல்லி விடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில்தான் பட்ஜெட் அலொகேஷன் முழுவதும் செலவிடப்படுவதாக விரிவாக தெரிவித்தார்கள். அப்படி தெரிவித்தும்கூட மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் 1983ஆம் ஆண்டின் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டை படித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே உங்கள் கருத்தை நீங்கள் பேசும்போது தெரிவித்து விடுங்கள். இப்போது வேண்டாம். (குறுக்கீடுகள்). காலையில் மாண்புமிகு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம்அவர்கள் பேசுகிறபோது.

* * * * *

என்று குறிப்பிட்டார்கள். அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசுவது மரபல்ல. எனவே அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசுவார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. வி. பி. சிந்தன் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே இந்த 3,419 கோடி ரூபாய் மானியம் சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் நேரத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, சுருக்கமாகப் பேச வேண்டும் என்ற காரணத்தாலும், வறட்சி நிலைமையைப்பற்றி மட்டும் பல உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். அந்தக் கவலையை நானும் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அரசு எடுக்கிற நடவடிக்கைகள் போதாது. யானைப் பசிக்கு சோளப் பொறி என்ற அளவில்தான் அது இருந்து கொண்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு மெத்தனப் போக்கு மேலோங்கி நிற்கிறது. என்பது என்னுடைய கருத்து. அதற்கு மேலே ஜப்தி என்ற பெயரிலே போலீஸ் படையை உபயோகப்படுத்தி, வன்முறையின் மூலம் விவசாயிகளைத் துன்புறுத்துவது, எந்தவிதத்திலும் சரியாக இருக்காது. இன்று காலையில் நடந்த விவாதத்தின் போதும், அதற்கு முன்னால் நடந்த விவாதங்களின்போதும், உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளை எடுத்துக் காட்டினார்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலமாக, கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று வித்தியாசம் இல்லாமல், உறுப்பினர்கள் இங்கே வறட்சியைப் பற்றி பேசும்போது, அவர்களுடைய பகுதியில், அவர்களுடைய மாவட்டத்திலே உள்ள நிலைமையை எடுத்து விளக்கிக் கூறினார்கள். எனவே இந்த அவசர நிலைமையக் கருதி நான் விளக்கத்திற்குள் போகவில்லை. அரசு உடனடியாக இதைப் பற்றிக் குறிப்பாக விவாதிக்க ஒரு நேரத்தை அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்றத்திலே இந்தக் கருத்துக்களை எல்லாம் விவாதிப்பதற்கு ஒரு நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். போலீசை பயன்படுத்தி ஜப்தி செய்கின்ற முறையைக் கடைப் பிடிக்கக் கூடாது என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து. தேர்தலைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கார்ப்பரேசன்களுக்கான தேர்தல்கள் இன்னும் நடத்தப்படாமல் இருந்து கொண்டு இருப்பது எந்தவிதத்திலும் நல்லதல்ல. அழகு ஆல்ல. இது ஜனநாயகத்தை ஊக்குவிக்கிற போக்காக அமையாது. சென்னையிலும் கோவையிலும், அதைப்போன்று மதுரையிலும் உள்ள மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தாமல் இருப்பதை எந்தவிதமான வகையிலும் நியாயப்படுத்த முடியாது. அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் இல்லை. தேர்தலைச் சந்திப்பதற்கு ஆளும் கட்சிக்கு அச்சம் ஏற்பட்டு இருக்கிறதோ, என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஏன் அச்சப்பட வேண்டும். தேர்தலைச் சந்திக்க வேண்டும், அது சென்னை மாநகராட்சியாக இருந்தாலும் அல்லது மற்ற பகுதிகளாக இருந்தாலும், மேலும் இந்த நேரத்திலே மிகக் கவலையோடு ஒரு பிரச்சினையை சபை முன்னவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன் ; அவர்களிடத்திலிருந்து நான் பதிலை எதிர்பார்க்கிறேன். அம்பத்தூர் நகரியத்திலே தேர்தல் நடத்த வண்டும் என்ற ஒரு பிரச்சனையை நான் கிளப்பினேன். நகரி

யத்திற்கு தேர்தல்களை அனுமதிக்கப் போகிறீர்களா இல்லையா என்ற ஒரு பிரச்சனையை நான் கிளப்பினேன். அந்த நகரியத்திலே கிட்டத்தட்ட 1-3/4 லட்சம் மக்கள் தொகை இருக்கிறது. அந்த நகரியத்தினுடைய வருமானம் 85 லட்சத்திலிருந்து 90 லட்சம் வரையில் எட்டியிருக்கிறது சென்ற ஆண்டு. இந்த ஆண்டு நிச்சயமாக 1 கோடியை தாண்டும். இதைவிட கம்மியாக வருமானம் உள்ள பல நகராட்சிகள் உள்ளன—இங்கே தேர்தல் நடத்த மறுப்பது ஏன்? என்று கேட்டபோது, மதிப்பிற்குரிய உள்ளாட்சித்துறை அமைச்சர் ஒருவர் சொன்ன கருத்தை நான் அவை முன்னர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் முதலமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இந்த மன்றத்தினுடைய குறிப்பிலே அது இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, தொழிலாளர்கள் நிறைந்த அந்தப் பகுதியில் தேர்தல் நடத்துவது முறையாகாது. அது கலெக்டருடைய பொறுப்பிலேயே ஆட்சி நடக்க வேண்டும் என்றார். இதுதானா காரணம்? சென்னை மாநகரத்திலும் கூட தேர்தல் நடத்தாமல் இருப்பதற்கு இதுதானா காரணம்? என்ற ஐயப்பாடு எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதேபோல் கோவையிலும் மற்றும் மதுரையிலும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் என்றால், இது ஒரு பழைய கருத்து. நாகரீகத்திற்கும் ஐனநாயகத்திற்கும் ஒவ்வாத கருத்து. இது அரசினுடைய கருத்து தானா, என்ற விளக்கத்தை அவை முன்னவர் அவர்களிடமிருந்து நான் எதிர் பார்க்கிறேன்.

(நண்பகல் 12—00)

இன்னும் நான் பேச வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினை. நிலப் பிரச்சனை. நீண்ட விளக்கத்திற்குப் போகவில்லை. பினாமி நிலத்தை ஒழிப்பதற்கு உள்ள சட்டத்தை, நாம் இன்னும் ஜனாதிபதியினுடைய அங்கீகாரம் பெறவில்லை; கிடைக்கவில்லை. அங்கீகாரம் பெறுவதற்காக இந்த அரசு, இந்த மன்றம் நாமெல்லாம் என்ன முடிவு செய்தோம் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்; அங்கீகாரம் கிடைப்பதற்காக ஒரு நிர்பந்தத்தை நீங்கள் செய்திருக்க வேண்டாமா? மத்திய அரசை தட்டிக் கேட்பதில் நிங்கள் தயக்கம் காட்டுவதற்காக நான் பல தடவை பேசியது உண்டு. நான் இங்கே அதை கூறுவதற்குக் காரணம், இன்றைய தினம் தமிழகத்தினுடைய கிராமப் பகுதிகளிலே—நான் வறட்சியைப் பற்றி மட்டும் சொல்லவில்லை—அங்கெல்லாம் சோகம் நிறைந்த ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது; சோதனை அதிகம் என்று சொன்னால் அது மிகையாகாது. வறுமைக் கோட்டிற்கு கீழே, வறுமை கோடு எது என்று விவாதம் இருக்கட்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழே, ஒரு வேளை கஞ்சிக்கு வழியில்லாமல், கஷ்டப்படுகிற கோடிக் கணக்கான மக்களை நான் கிராமப் புறங்களில் பார்க்கிறேன். அவர்களுக்கு இலவசமாக என்று நிலம் வழங்கி, அவர்களுக்கு வீட்டுமனை வழங்கி, அவர்களுக்கு விவசாயம் செய்வதற்குள்ள உடமைகளைக் கொடுத்தால்தானே அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர முடியும். கோடிக் கணக்கான அரிஜன மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய, நலிந்த மக்களுக்கு, இந்தக் காரியத்தை நீங்கள் செய்யவில்லை என்று சொன்னால் தொழில் வளர்ச்சிபற்றி நீங்கள் பேசுவது எல்லாம் அது வெறும் 'ஏட்டுச் சுரக்காய்' போலத்தான் இருக்கும் என்பதை நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். அங்கே இருக்கின்ற மக்களுடைய வாங்கும் சக்தி அதிகமானால் தானே தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்? கைத்தறி ஆகட்டும், விசைத்தறி ஆகட்டும், கைத் தொழில் ஆகட்டும், பஞ்சாலை ஆகட்டும், இங்கே உற்பத்தி செய்கின்ற பொருள்களை வாங்குவதற்கு அந்தக் கோடிக் கணக்கான மக்களுடைய கையிலே, வாங்கும் சக்தியை அதிகப்படுத்துவதற்கு என்ன திட்டத்தை நீங்கள் தீட்டி இருக்கிறீர்கள்? நிலம், வழங்குவதைத் தவிர, நிலத்தை இலவசமாக என்று வழங்குவதைத் தவிர, அதற்கு அரசியல் சட்டம் குறுக்கே நிற்குமானால் அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று, சமுதாய மாற்றத்திற்கான ஒரு கோரிக்கையைக் கிளப்பி அதை நடைமுறைப்படுத்துவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது? ஆனால் பட்டா வழங்குவதிலே கொள்கை இல்லை. 5 ஆண்டுகள், 10 ஆண்டுகளாக குடி இருந்தும் நிலப் பட்டா வழங்கவில்லை. குடிசை கட்டுவதற்கு இடம் கூட வழங்கப்படுவதில்லை.



அதே நேரத்திலே்—நான் சபை முன்னவர் அவர்களுடைய கவனத்துக்கு, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்தப்பிரச்சனையை மீண்டும்மீண்டும்வலியுறுத்திச்சொல்கிறேன். ரியல் எஸ்டேட் என்றபெயரால் பெரியவர்கள், பெரிய மனிதர்கள் பத்மபூஷன்பட்டம்பெறுகிறவர்கள் உட்பட கவர்னருடைய விருந்துகளிலே கலந்து கொள்கிறவர் உட்பட, அமைச்சர்கள் இடத்திலே [illegible]க்கக்கூடிய வாய்ப்பு அடிக்கடி பெறக்கூடிய பெரிய மனிதர்கள், ஆயிரக்கணக்கான ஏக்கர் சொந்தமாக வைத்துக்கொண்டு, அதை ஆக்கிரமித்து, அதை பட்டா போட்டு விற்கிறார்கள். பல முறைகளிலே உபயோகப்படுத்துகிறார்கள். திருச்சி வட்டத், திலே, சூரியூர் என்ற ஒரு பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம், அரசுக்குச் சொந்தமானது. அதை பினாமியாக எடுத்துக் கொண்டு அது பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கும், துப்பாக்கித் தொழிற்சாலைக்கும் இடையேயுள்ள ஒரு முக்கியமான இடம். ஆயிரம் ஏக்கர் அதை, குடிசை கட்டி தெருவோரங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு நீங்கள் கொடுத்து இருந்தால் நான் பாராட்டி இருப்பேன். ஆனால் அதற்கு பதிலாக, வி.ஜி.பி. என்ற ஒரு கம்பெனி—அதற்கு மொத்தத்திலே ஒரு 10 ஆயிரம் ஏக்கர்களுக்குமேலாவது இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஒரு கம்பெனிக்கு இவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நீங்கள் ஏன் அனுமதி கொடுக்கிறீர்கள்? அவர்க்ள் அங்கே சென்று அந்த நிலத்தை எடுத்து, இப்போது அது பூராவையும் 'பிளாட்ஸ்' பண்ணி விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்

கிறார்கள். இதே முறையில் பல இடங்களில் செய்யப்பட்டு வருகின்றது. நேரம் இல்லை; நான் விளக்கத்திற்குப் போக வில்லை. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு கொள்கை வேண்டும். யார் அவர்களுக்கு 1,000 ஏக்கர் பட்டா கொடுத்த அதிகாரி? அவர்கள்மீது நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை. இங்கே பேசும் போது ஒரு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார், அவர்களை தூக்கு மேடைக்கு அனுப்புவார்களா என்று கேட்பார். நான் கேட்கவில்லை. இருந்தாலும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு அந்த நிலம் கொடுக்கக் கூடாது. நிலம் யாருக்கு? உழவனுக்கு நிலம்; வீடு கட்டுகிறவர்களுக்கு நிலம்; வியாபாரம் செய்வதற்கு நிலமா? இயற்கை அளித்த தனியான ஒரு கனிவளம் அது. அதை வியாபாரம் செய்வதற்கு, கோடிக் கணக்கான ரூபாய் ஏற்கனவே சேகரித்து, அந்நிய நாடுகளிலே மூலதனம் போட்டு, மீண்டும் மீண்டும் சொத்து சேர்ப்பதற்கு, லட்சாதிபதிகளை கோட்டீஸ்வரர்களாக ஆக்குவதற்கு, ஏழை எளியவர்கள் தெரு ஓரங்களிலே படுக்கின்ற நேரத்தில், இதை செய்வது அநீதி: இது அநியாயம்; இது அக்கிரமம்: இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் மூடிய ஆலைகளைப்பற்றி, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்கு எனக்கு மாறுபாடு இல்லை. அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறீர்கள்? ஆனால் அதை துரிதமாக நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். உங்களுடைய தொழிலாளர் கொள்கைபற்றி எங்களுக்கு கடுமை யான ஆட்சேபனை உண்டு. நான் விளக்கத்திற்குப் போக வில்லை. பின்னி ஆலையில் இன்று லாக் அவுட். மூடக்கூடாது என்று மாநில அரசு உத்தரவிட்டதற்குப் பிறகு ஒரு தொழில் அதிபர் பகிரங்கமாகவே கதவடைப்பு செய்கிறார். உத்தரவிற்கு மதிப்பு கொடுக்கிறாரா? அந்த ஆலையில் லாக் அவுட் செய்கிறார். எந்த நியாயமான காரணமும் இல்லை. ஆகவே தான் தமிழக அரசு அந்த லாக் அவுட்டை தடை செய்தது. லாக் அவுட்டை தடை செய்து தொழிலாளர்களை வேலைக்கு வர வைத்துவிட்டுள்ளீர்கள். 3 கிழமைக்குள் வேலைக்கு அமர்த்த வேண்டும் என்று இந்த மன்றத்திலே மாண்புமிகு [illegible] தலைவர் அவர்கள் முன்னிலையில் தான் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த அமைச்சர் பதவி விலக வேண்டிய துரதிர்ஷ்ட வசமான நிலைமை தான் ஏற்பட்டதே தவிர இன்றைக்கும் அந்த ஆலை திறக்கப்படவில்லை. அவர்களுக்கு தயவு தாட்சண்யம் காட்டாதீர்கள். பாரபட்சமான முறையை கடைப் பிடிக்காதீர்கள். உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவேரி தண்ணீர் பிரச்சினை சம்பந்தமாகவும், வீராணம் திட்டம் சம்பந்தமாகவும் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். முழு விவரத்திற்குச் செல்லவில்லை. இங்கே விவாதத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும்



குறிப்பிட்ட காரணத்தால் தெரிவிக்கிறேன். தஞ்சை மாவட்டத் தில் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் 1924ஆம் ஆண்டு நடைபெற்ற போதிலும் 1975ஆம் ஆண்டு அது முடிந்து விட்டது. அது முடிகிற நேரத்தில் தமிழக அரசும் கர்நாடக அரசும் பேசி 1975ஆம் ஆண்டு ஒரு நகல் தயாரித்து அந்த நகலில் இரு தரப்பினரும் கையெழுத்திட்ட பிறகு மாண்புமிகு கவர்னர் திரு. கே. கே. ஷா அவர்களும் கையெழுத்து இட்டு, தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு அரசு வரும்போது இதை அமல் நடத்துவது என்ற அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ அது தொடர்ந்து நடத்தப்படவில்லை. பிறகு எமர்ஜென்சி வந்தது. அந்த காலத்திற்கு நான் போக வில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதிகாரத், திற்கு வந்ததற்குப் பிறகு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அவர்கள் தயாரித்த நகலிலா நாங்கள் கையெழுத்துப்போடுவது என்று நீங்கள் நினைத்தீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது, இன்று நம்முடைய நிலை என்ன? கர்நாடகாவைப் பொறுத்தவரையில் 75 ஆண்டு களில் காவேரியில் என்ன நீர் ஓடிக் கொண்டு இருந்ததோ அதனுடைய சராசரியை எடுத்து தான் தமிழகத்திற்கு கொடுக்க முடியும் என்று அவர்கள் அடம் பிடிக்கிறார்கள். நாம் என்ன கோர்ட்டுக்குச் செல்லப் போகிறோமா? கோர்ட்டுக்குச் சென்று நீதியை இந்தப் பிரச்சினையில் அடைய முடியும் என்று நான் நம்பவில்லை. காலம் கடத்துவதால் ஏற்பட்ட விளைவு இது. உங்களுக்குள் ஏற்பட்ட தகராறால் 9 ஆண்டுகளாக கிடப்பில் போட்டுள்ளீர்கள். நீங்கள் பொற்றாமரையைக் கொடுக்கவில்லை என்று அவர்களும், நீங்கள் என்ன யோக்கியர்களா என்று நீங்களு மாக பேசுகிற ஒரு அரசியலால் தமிழகத்திற்கு பாதகமே ஏற்படு கிறது என்பதை மார்க்கிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரு சின்ன கட்சி தான் இருப்பினும் தன் அடக்கத்தோடு இந்த பிரச்சினையை உங்களிடம் எடுத்து கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது அவர்கள் கேட்பது எல்லாம் 680 டி.எம்.சிக்குப் பதிலாக அன்று ஒப்பந்த நகலிலே சொல்லப்பட்ட அந்த அளவுக்கு பதிலாக 75 வருட சராசரியை கணக்கு எடுத்து ஆண்டுக்கு சராசரி 792 டி.எம்.சி. என்றும் அதில் தமிழகத்திற்கு 47 சதவீதம் (அதாவது 393 டி.எம்.சி) என்றும் கர்நாடகாவிற்கு அதேபோல் 47 சதவீதம், கேரளாவுக்கு 5 சதவீதமும், புதுவைக்கு 1 சதவீதமும் என்ற முறையில் இப்போது வலியுறுத்திக் கொண்டு இருக் கிறார்கள். மத்திய அரசு ஏனோ தானோ என்ற ஒரு நிலையை கடைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசு இதை புறக் கணிக்கும் போது அதை தட்டிக் கேட்கிற நிலைக்குப் போக வேண்டாமா?

அதே தான் வீராணம் நிலையிலும். வீராணத்தில் என்ன கோளாறு நடந்ததோ, என்ன ஊழல் நடந்ததோ அதைப்பற்றி நான் இங்கே பேசவில்லை. நான் ஆளும் கட்சியைப் பார்த்து கேட்கிறேன் வீராணம் திட்டம் அமல் நடத்தப்பட்டு இருந்தால் 5 டி.எம்.சி. தண்ணீர் இன்றைய தினம் சென்னை நகரத்திற்கு வந்து இருக்கும், சென்னை நகரத்திலே தண்ணீர் கிடைக்காமல்

கஷ்டப்படுகிறார்கள். மக்களுக்கு உதவி செய்வதற்காக நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. தி.மு.க. உருவாக்கிய திட்டத்தை நாம் நடத்துவதா என்று கௌரவப் பிரச்சினை ஆக்குகிறீர்கள்—நான் சொல்லுவேன் இது பொய்யான கௌரவம். தமிழ் மக்கள் நலன் கருதி இத்தகைய தவறான கொள்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அர்பன் டெவலப்மண்டு பற்றி, நகரங்களை விரிவுப்படுத்து வதற்கு, நகர வசதிகளை பெருக்குவதற்கு உள்ள ஒரு கொள்கை மிக மோசமான அல்லது குறைபாடு உள்ள கொள்கையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை நகரசபை அல்லது மற்ற நிறுவனங் களுக்கு நீங்கள் விட்டு விட்டால் மட்டும் போதாது. உதாரண மாக குடிநீர் எடுத்துக் கொள்வோம். 1947-ல் சுதந்திரம் பெற்றோம். இந்த சுதந்திரம் பெறுவதற்கு பல ஆண்டு காலம் சிறையில் இருந்த ஒருவன் என்ற முறையில் நான் மெத்த வருத்தத் தோடு பேசுகிறேன். குடிக்கிற தண்ணீர் இந்த நாட்டில் 10 சதவீதம் மக்களுக்கு கூட 'போட்டபிள் வாட்டர்' (நல்ல குடிக்கிற தண்ணீர்) நம்மால் கொடுக்க முடியவில்லை. இன்றைய தினம் சென்னை நகரத்தில் குடிநீர் கிடைக்காத 15 நாளைக்கு ஒரு தடவை மெட்ரோ தண்ணீர் வழங்கப்படும் இடங்கள் பல உண்டு. நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் ஐ.நா. புகழ் பெற்றவர்கள். ஆனால் மின்சார இலாகா வினுடைய நிலைமை என்ன? மின்சாரத் துறையை இன்றைய தினம் ஆளுவது அமைச்சர் அல்ல, முதலமைச்சர் அல்ல, அமைச்சரவையும் அல்ல. ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி அங்கே இருந்து கொண்டு ஆட்டம் செய்து கொண்டிருக் கிறார்.

(பிற்பகல் 12—10)

நான் உங்களைக் கேட்கிறேன். இன்றைக்கு தெரு விளக்குகள் போடப்பட்டு, அவை எறிவதில்லை. நகர சபையைக் கேட்டால் அதை 'ஆப் செய்வதும், ஆன் செய்வதும்' யார் என்று கேட்கிறார்கள். மின் வாரியத்தைக் கேட்டால், இது எங்க ளுடைய பொறுப்பல்ல என்று சொல்கிறார்கள். அதன் விளைவாக நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், தெரு விளக்குகள் இல்லை, சாக்கடைகள் இல்லை. ரோடுகள் இல்லை. 10 ஆண்டுகளாக ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன. தேர்தல் நடந்த நேரத்தில், ரோடுகள் எல்லாம் செப்பனிடப்பட்டதாகச் சொல்லப் பட்டு, அதிலே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. ரோடு போடப் பட்டதாகச் சொல்லி, இப்படியெல்லாம் கொள்ளையடிக் கிறார்கள்.

அடுத்து, போலீஸ் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். மானியக் கோரிக்கைகளிலே ஒதுக்குகின்றபோது, தமிழக அரசி னுடைய நல்ல நடவடிக்கைகளை பொதுமக்கள் புரிந்து கொள்ள



முடியாத அளவிற்கு, உங்களுக்கு கெட்ட பெயரை உண்டாக்கக் கூடிய அளவில் பலர்—எல்லோரையும் நான் சொல்லவில்லை—துணை சபாநாயகர் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள்—எந்த அதிகாரிகள் என்று குறிப்பிடவில்லை. அப்படி நடந்து கொள்கிறார்கள். அவர்கள் ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் என்று சொன்னால், உடனே, 'லா அண்டு ஆர்டர்' என்று நினைத்து விடுகிறார்கள். நீதிமன்றம் தீர்ப்பு கூறி, இன்னின்ன பொருட்களை அவர்கள் தொழிற்சாலையிலிருந்து இந்த வேலை நிறுத்தத்தின்போது எடுத்துச் செல்ல வேண்டு மென்று சொன்னால், இந்த நீதிமன்றம் யார் எங்களைக் கேட்ப தற்கு, இந்தத் தொழிற்சாலை எங்களுக்குச் சொந்தம் என்று, அந்தப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அவர்களுடைய உரிமை என்று நினைக்கிறார்கள். அவர்களை போலீஸ் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. நிதியமைச்சருக்குத் தேவை யானால், நான் அதற்குப் பல விளக்கங்களைச் கொடுக்கத் தயார்? இப்படி ஒரு போலீஸ் இலாகா ஏன்? அதுமட்டுமல்ல, சிலர் வன்முறையையே தொழிலாகக் கொண்டுள்ளனர்.

பயிற்சி கொடுக்கும்போது, கட் 1, கட் 2 என்பதில், கட் 1 என்றால் தலையிலே அடிக்க வேண்டும். கட் 2 என்றால், கழுத்திலே அடிக்க வேண்டும். சுடுவது என்றால் எனக்குத் தெரியும். தேசிய இயக்கத்திலே நீண்ட நெடுங்காலமாக விவாதிக்கப்பட்ட ஒரு பிரச்சினை இது. பண்டித நேரு முதல் இராஜாஜி காலம் வரையில் எல்லோராலும் பேசப்பட்ட பிரச்சினை. ஷீட் டு கில் என்பது கூடாது. ஆனால் இன்றைய தினம் நம்முடைய போலீஸ்காரர்கள் ஷூட் டு கில் என்று தான் நடந்து வருகிறார்கள். சமீபத்தில் நடந்த மீனவர் பிரச்சினையில் கிட்டதட்ட 500, 600 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவை முன்னவர் அவர்கள் மேற்கு வங்கத்தில் என்ன நடக்கிறது என்று என்னைப் பார்த்துக் கேட்பார். தவறு மேற்கு வங்கத்திலே நடைபெற்றாலும் தமிழகம் இந்தியாவிற்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டுமென்ற காரணத்தினாலே நான் பேசுகிறேன்.

இங்கு மீனவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தும்போது ஒரு போலீஸ் அதிகாரி 'ஷூட் டு கில்' என்பதற்காகவே துப்பாக் கியால் சுட்டார் கலவரம் செய்யும் கூட்டத்தை கலைக்க சில நேரங்களில் சுட வேண்டி வரலாம். துப்பாக்கியை நாம் எதற்காகக் கொடுக்கிறோம் ? சில நேரங்களில் உயிருக்கும் உடமைகளுக்கும் ஆபத்து ஏற்படும்போது, துப்பாக்கியை உபயோகப்படுத்தலாம் என்பதற்காகத் தானே நாம் அதைக் கொடுக்கிறோம். நான் அதன் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் போலீஸ்காரர் துப்பாக்கியைத் தோளில் எடுத்து குறி பார்த்து சுடுகிறார்கள். ஏன் காலிலே சுடக் கூடாதா ? ஆளை மிரட்டு வதற்குத் தானே சுடுவது ? ஆகவே இத்தகைய கொடுமைகளில் ஒரு மாற்றம் வேண்டும்.

இராமநாதபுரம் நிகழ்ச்சியைப் பற்றி சொன்னால், நான் நேரில் சென்றேன். அதற்கு யார் யார் பொறுப்பு என்று சொல்லவில்லை. பொறுப்பு யார் என்று நான் முன்னவர் அவர்களுக்குச் சொல்லியுள்ளேன். நான் அதைச் சொன்னால், நீங்கள் அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுவீர்கள். நேரடியாக 5, 6 மணி நேரம் கொள்ளையடிப்பதிலே, அங்கே முன்னே நின்று இதைச் செய், அதைச் செய் என்று சொன்னதையெல்லாம் அப்பகுதி மக்களிடமிருந்து நான் நேரிலே கேட்டுத் தெரிந்து கொண்டேன். அங்கே நடைபெற்றதைப்பற்றி பகிரங்கமாக ஒரு விசாரணை நடத்தவேண்டும்.

துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான கருத்தை நான் சொல்கிறேன். சில நேரத்தில் நாங்கள் போராடுகிறோம். போராடுகிறபோது ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அல்ல. அப்படியெல்லாம் ஒரு வேலை நிறுத்தத்தால், ஆட்சியைக் கவிழ்த்ததாக நான் அறியவில்லை. அப்படி ஒரு ஆட்சி கவிழ்வது என்றால் கவிழ்ந்து போகட்டுமே. அப்படி தமிழகத்தில் ஒரு நிலைமை இல்லை. ஆனால் சில உரிமைகளுக்காக நாங்கள் போராடும்போது, ஆதரவு இயக்கம் நடத்தும்போது நீங்கள் பழி வாங்குகின்ற எண்ணத்தோடு செயல்படக் கூடாது என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

ஆசிரியர்கள் போராடியபோது, தலைமைச் செயலகத்திலுள்ள ஊழியர்கள் ஆதரவு தெரிவித்தார்கள். 'சாலிடெரிடி ஆக்ஷன்' அதாவது ஆதரவு இயக்கம். அவர்களை இன்னும் சஸ்பெண்ட் செய்து வைத்திருப்பது நல்லதல்ல.

அதுமட்டுமல்ல, இலங்கை விடுதலைப்புலிகள் சம்பந்தமாக ஒரு பிரச்சினை பற்றி சொல்கிறேன். இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு விவாதம் இந்த மன்றத்திலே வர வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். ஒரு நெருக்கடியான நிலையில் நாம் போய்க் கொண்டிருக்கிறோம். ஒரு சிலர் அநாவசியமான உணர்வுகளைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். என்பது எனக்குத் தெரியும். ஆனால் புலிகளுக்குள்ளே ஏற்படுகிற சண்டை, அது தமிழகத்திலே இன்றைக்குப் பரவி, அது எங்கே சென்று நிற்கும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நான் சார்ந்த கட்சியைப் பொறுத்த வரையிலும், அந்த ஈழ பிரிவினையை நாங்கள் எற்றுக்கொள்ளவில்லை. அதற்காக பிரச்சாரம் செய்வது மீண்டும் மீண்டும் பிரிவினை உணர்ச்சியை எற்படுத்திக் கொண்டிருக்கும் இலங்கை பிரச்சனையை தீர்த்துவைப்பதற்கு உதவிகரமாக ஒரு நிலைமையும் வராது, இது சம்பந்தமாக ஒரு விவாதம் இந்த மன்றத்திலே நடத்தப்பட வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



கடைசியாக 'மிஸ்ஸலேனியஸ் எக்ஸ்பென்சஸ்' என்று பட்ஜெட்டிலே வரக்கூடிய பகுதியை எடுத்துப் பார்த்தால் நீண்டகாலமாக 1 பர்செண்ட், 2 பர்செண்ட் ஆக இருந்தது. இப்போது 7, 8 விழுக்காடு என்ற அளவிற்கு அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

பல வகைச் செலவுகள். பற்றி அரசு சற்று கவனிக்க வேண்டும். ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு: இந்த தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசிடம் என்னென்ன நியாயத்தைப் பெறவேண்டுமா அதை பெற—தேர்தல் உறவுகளோ, கூட்டோ—அதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது என்று வேண்டிக் கொண்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில தொகுதி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகளை நான் பேசுவதற்கு விரும்புகிறேன். நில வரித் தீர்வை சம்பந்தமாக என்னுடை கருத்துக்கள் ஒரு சிலவற்றைக் கூறுகிறேன்.

நெல்லை மாவட்டத்திலே ஒரு சில வறண்ட பிரதேசங்கள் இருக்கின்றன. பல ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. வறட்சிப் பிரதேசங்கள். இது சம்பந்தமாக ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். கோவில்பட்டி தாலுாகா சங்கரன் கோவில் தாலுகாவிலே ஒரு பகுதி, ஒட்டப்பிடாரம் தாலுகா—நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மழை எப்போது பெய்தது என்று. அங்கே மழை பெய்தபோது கடன் கேட்டார்கள். அரசாங்கத்திலிருந்தும் கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், கடன்கள் வழங்கி இருக்கிறார்கள். இப்போது. இரண்டு. மூன்று ஆண்டுகளாக மழை பெய்யவில்லை அங்குள்ள அதிகாரிகள் இப்போது கடனைத் திரும்பக் கேட்டுத் தொந்தரவு பண்ணுகிறார்கள். கேட்கலாம். என் போவிறவன் கடன் திரும்பக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லக் கூடியவனும் அல்ல. அப்படிப்பட்ட பிரிவைச் சார்ந்தவனும் அல்ல. இருந்தாலும். நேரம் பார்த்துக்கேட்க வேண்டாமா ? சாப்பிடுவதற்கே வழி இல்லை. விளைச்சல் இல்லை, விளைவதற்குப் பயிர் இல்லை. இந்த நேரத்தில் பிடிவாதம் பண்ணவேண்டாம் கெடுபிடி செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்வதோடு இவ்வுளவு கஷ்டமான நேரத்தில் வட்டியையாவது தள்ளவேண்டாமா ? தள்ளுவதற்கு மனம் இளகவேண்டாமா ? அந்த எண்ணம் வரவேண்டாமா ? தாயுள்ளம் கொண்ட நமது தமிழக முதல்வர் அவர்கள் 'வட்டியைத் தள்ளிவிட்டு

பாக்கியை விளைகிறபோது தாருங்கள்' என்று சொல்லும்படியான: மனப்பாங்கு ஏற்பட—மேலும், மேலும் வட்டி பெருகிக் கொண்டே போகாமல் இருக்கச் செய்ய வேண்டும், என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

ஆகவே, அந்த அளவுக்குச் செய்யாமல், நில வரியையும் அந்தப் பகுதியிலே வஜா செய்யுமாறு முதற்கண் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் கூறும்போது, அந்தப் பகுதி மழை இல்லாத பகுதி. குடிதண்ணீருக்கு ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார்கள். உண்மையிலேயே பூமிக்கு அடியிலே உப்புத் தண்ணீர். வேறு தண்ணீர் வசதி கிடையாது. ஆகவே, தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் கொடுப்பதைத் தவிர, மாண்புமிகு நாவலர் அவர்களே, வேறு வழியில்லை. அதற்கு நீங்கள் தான் வழி வகுத்துச் செய்ய வேண்டும். தமிழக முதல்வர் அவர்களைக் கலந்து, திட்டத்தைத் தீட்டி. எப்படியாவது அங்குள்ள மக்களை ஆதரியுங்கள். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். ஏழைகள் குடிப்பதற்கு தண்ணீரைக் கொடுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது வீட்டு மனை வழங்குகிறார்கள், நத்தம் புறம்போக்கு என்று சொல்வது 5 சென்ட் வேண்டாமா ? மாடு கட்டலாம், வைக்கோல் போர் போடலாம், கோழிக்கூடு வைக்கலாம் என்றால் 3 சென்ட் போதுமா ? அதுவும் நத்தம் புறம்போக்கு என்று சொல்கிற இடம், அந்தக் காலத்திலே 5 சென்ட் தான் கொடுக்கப்பட்டன, இப்போது 3 சென்ட் ஆக ஆக்கிவிட்டார்கள், நான் வண்டிக் கொள்ள விரும்புவது, அதை 5 சென்ட்—ஆக ஆக்குங்கள் என்பதுதான்,

ஏதாவது சான்றிதழ்கள், சர்டிபிகேட் வாங்கச் சென்றால் அவர்கள் பாடு, பெரும்பாடாக இருக்கிறது. சர்ட்டிபிகேட் வாங்க முடியவில்லை. இன்று வா, நாளை வா என்று கஷ்டப்படுத்துகிறார்கள். அதிலும், ஆதி திராவிடர்கள், ஏழை மக்கள், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் வகுவில் வாங்க முடியவில்லை. ஒரு தடவை வாங்கினால் போதாதா? பல தடவைகள் வாங்க வேண்டுமா? அதற்கு வழிவகை, மாண்புமிகு நாவலர் அவர்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும். அதை இலகுவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.20)

குத்தகை உரிமை சம்பந்தமாக ஐந்து பேர்களைக் கொண்ட கமிட்டியை அமைத்திருக்கிறீர்கள். அதில் யார் யாரைப் போட்டிருக்கிறீர்கள் ? நெல்லை தாலுக்காவிற்கும் அந்தக் கமிட்டி உண்டா ? ஏனென்றால் அங்கே பல தகராறுகள் நடக்கின்றன



அங்குள்ள நிலச்சுவான்தாரர்கள் விவசாயிகளையும்' ஏழை உழவர்களையும் வெளியேற்ற நினைக்கிறார்கள். எனவே, அங்கே கமிட்டியில் யார் யாரைப்போட்டிருக்கிறீர்கள், ஆதி திராவிடர்கள், ஏழைகள் ஆகியவர்களின் பெயர்கள் இருக்கின்றன என்பதை தெரிவிக்க முடியுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

போக்குவரத்து சம்பந்தமாக முன்பே பேசினேன். கே.டி.சி. நிர்வாகம் இருக்கிறது. அங்குள்ள அதன் நிர்வாகிகள் நல்ல முறையில் சாமர்த்தியமாகச் செய்து வருகிறார்கள். இருந்தாலும், கட்டபொம்மன் பிறந்த பகுதியில், ஒட்டப்பிடாரம் தொகுதியிலே அதிகமாகப் பஸ்கள் இல்லையே, அங்கு விட வேண்டுமென்று கேட்டுப் பார்த்தோமே, நாவலர் அவர்களே, நீங்களாவது சொல்லி அதிகமான பஸ்களை எங்களுடைய பகுதியிலே விடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளும் பாலங்களும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, பலயிடங்களிலே பாலங்கள் கிடையாது. தெற்கு கோனார் கோட்டை என்று ஒரு இடம் இருக்கிறது. நம்முடைய தமிழக அரசினுடைய சாலைதான். அந்த ரோட்டிலே பல ஆண்டுக்காலமாக வண்டி போக முடியவில்லை. அந்த இடத்திலே ஒரு பாலம் கட்ட ஏற்பாடு செய்யுங்கள். தலையால் நடந்தான் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே போனால் தலையால்தான் நடக்க வேண்டும். அந்த அளவிற்கு பாலம் இல்லாமல் இருக்கிறது. அங்கே பாலம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய நல விஷயமாக அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை உள்ளாட்சிகளில் தேர்தல்களை நடத்தியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தலைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்று சொல்வதைப் பற்றி கவலைப்படாமல் தரியமாக நடத்தினீர்கள். வெற்றிகரமாக நடந்தது. பலகிராமங்களில் கழிப்பிடங்கள் இருக்கின்றன அவற்றிற்கு சுத்தம் செய்ய ஆட்களைப் போடுங்கள். ஆட்களைப் போட்டதால் துர்நாற்றம் அடிக்கிறது ஆள் போடப்படாத கழிப்பிடம் தேவையில்லை. ஆகவே அங்கே ஆள் போடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகளை தெரிவித்துக் கொள்கிறேன் தமிழகத்தைப் பொறுத்த வரையிலும்

காவல் துறை மிகவும் பெருமை வாய்ந்தது. பெயர் பெற்றது; புகழ் வாய்ந்தது. அந்தக் காலத்திலே யிருந்தே பேரும் புகழும் பெற்றது. அந்த அளவிற்கு அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். திருநெல்வேலிக்குப் பக்கத்தில் சங்கர் நகர் என்று இருக்கிறது. அது திருநெல்வேலியிலிருந்து 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆய்வாளருடைய இடம். ஆனால் அது 50 மைல்களுக்கு அப்பால் உள்ள டி.எஸ்.பி.யோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்திலேயே இருக்கின்ற—7 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்றஅதே திருநெல்வேலி தாலுக்காவிலே உள்ள— திருநெல்வேலி டி.எஸ்.பி.யோடு இணைக்கக்கூடாதா? இணைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் தொகுதியில் கொம்பாடி தளவாய்புரம் என்று இரண்டு கிராமங்கள் ஒட்டப் பிடாரத்திற்குப் பக்கத்தில் அமைந்திருக்கின்றன. அந்த இரண்டு கிராமங்களையும்ஒட்டப்பிடாரம்காவல் நிலையத்தோடுஇணைத்து விடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் தூரத்தில் உள்ள மணியாச்சியில் சேர்த்திருக்கிறார்கள். அதற்குப்போக்குவரத்து மற்றும் வசதி குறைவுகளும் உண்டு. எனவே அதையும் செய்து மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையில் உள்ளவர்களைக் கிராமங்களுக்கு மாற்றுகின்றபொழுது அங்கே போவதற்கு அஞ்சுகிறார்கள். நான் ஒரு சின்ன பரிந்துரையைப் பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன். கிராமத்திற்குச் செல்பவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுத்தால் அங்கே போக அவர்கள் மறுப் பார்களா. எங்கள் பகுதியில் மணியாச்சி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே போவதற்கு யாரும் தயங்குவார்கள்..நல்லவீடு ஒரு கழிப்பறை, நல்ல தண்ணீர்ஆகிய எல்லா வசதிகளையும்அங்கே செய்து கொடுத்தால் எல்லாக் காவல் துறையினரும் அங்கே செல்வதற்குத் தாராளமாகத் தயாராக இருப்பார்கள். அந்த அளவிற்குச் செய்யுங்கள். ரோடு வசதி இல்லை; அங்கேயிருக்கின்ற ஆய்வாளருக்கு ஜீப் கிடையாது. ஆக்வே அவர்கள் எங்கேயாவது போக வேண்டு மென்றால் ஒரு நாள் இரண்டு நாள் கழித்துத்தான் காவல் துறை ஆய்வாளர் போக முடிகிறது. ஆகவே எல்லா ஆய்வா ளருக்கும் நல்ல ஜீப் கொடுக்கவும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய காவல் துறையினர். பெண்களின் நலனைக்காக்க வும், சமூகத்திற்குத் தீமை வந்தால், நீக்கவும். ஜாதிக் கொடுமை களை ஒழிக்கவும் கவனம் செலுத்தி வருகிறார்கள்.சில இடங் களிலேஇனக் கலவரங்கள் வருகின்றன. அதிலே கூட ஓரளவுக்கு



நன்மை செய்கிறார்கள். ஒன்றை கூற விரும்புகிறேன். இன்னும் ஜாதிப் பாகுபாடு ஒழிந்திருக்கிறதா ? தாழ்த்தப்பட்டவர்களை அடிமைத்தனமாக நடத்துகிற போக்கு ஒழிந்திருக்கிறதா ? இன்னும் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றவர்கள் வீடுகளுக்குப் போய் மேளம் கொட்ட வேண்டுமென்ற தன்மை மாறி இருக்கிறதா ? தாழ்த்தப்பட்டவர்கள், பாக்கி பேர்கள் இறந்தால் குழி வெட்ட வேண்டுமென்ற அந்தத் தன்மை மாறி இருக்கிறதா ? போகாவிட் டால் இம்சைப்படுத்துகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் படித்த இளைஞர்கள் மத்தியிலே ஒரு உணர்வு ஏற்பட்டு, நம் இனம் அந்த அடிமைத்தனமாக இருக்க வேண்டுமா என்ற உணர் வோடு வந்தால், அதற்காக அவர்கள் மீது ஆத்திரம் வந்து, கலவரங்கள் ஆக்கப்படுகின்றன கலவரம் வருவதற்கு இடம் கொடுக்கலாமா ? இந்தக்காலத்திலும் நீ பறை அடி, மேளம் அடி, என் வீட்டிலேபறை அடி, என் வீட்டிலே வந்து ஆடு, உன் தொழில் அதுதான் என்று சொன்னால், இந்த 1986 ஆம் ஆண்டிலே, நியாயமா ? ஜாதியை அகற்றுவதற்கு மதம் குறுக்கே நிற்கிறது என்று சொன்னதற்காக, அந்த மதத்தையே அழி என்று, சொன்ன பெரியார் பிறந்த இந்த நாட்டிலே இன்னும் இந்தக் கொடுமை நீடிக்கலாமா ? மேளம் கொட்டாவிட்டால், அவர்களை இம்சைப்படுத்துவோம் என்று இருக்கலாமா ? அப்படி இம்சை செய்வதைத் தடுப் பதற்கு காவல் துறையினர் ஒத்துழைக்க வேண்டாமா ? என்பதை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் தந்தை பெரியார் பிறந்த நாட்டிலே, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாட்டிலே, காந்தி பிறந்த இந்தியாவிலே, வள்ளுவன் பிறந்த இந்த நாட்டிலே. பகுத்தறிவு தன்மை உள்ள இந்த நாட்டிலே, எல்லோரும் நல்ல முடிவுக்கு வந்து கலவரம் வராமல் அதைப் போக்குவதற்கு, தாழ்த்தப் பட்டவர்கள் உணர்வுகளையும் நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை நான் முன் வைக்கிறேன். தமிழ் நாட்டிலே

வளர்ந்து வருகிற தேவைகளும் தீர்க்கப்படவேண்டிய பல்வேறு பிரச்சினைகளும் ஏராளமாக இருக்கின்றன. அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கப் பூர்வமான பல்வேறு சிந்தனைகளுக்குப் பின்னால், சில வழிவகைகளைக் காண வேண்டியது தவிர்க்கமுடியாத அவசியமாகிறது. ஏதோ சிலர் செய்வது போல் கலச விளக்கு—சங்கு வேள்வி நடத்தி, தமிழ்நாடு பிரச்சினையை நடை முறையிலே தீர்த்துவிட முடியாது என்பதை அனேகமாக மாநில அரசும் ஒப்புக் கொள்ளும் என்று நான் கருதுகிறேன்.

தமிழ் நாட்டில், இன்றைக்கு முக்கியமான பிரச்னைகளாக இருக்கிற பிரச்சினைகளில் ஒன்று, தமிழ் நாட்டின் நீதித் தேவை ஓரளவாவது பூர்த்தியாக்கப்படுகிறதா ? அது பூர்த்தியாக்கப்பட வில்லையென்றால், அது பற்றி ஏற்பட்டிருக்கிற சிக்கல் என்ன என்பதை இந்தப் பேரவையில் இருக்கிற ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். எனவே, இந்த மாநில அரசு நிதியமைச்சரை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது. கடந்த காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபொழுது கூட. மத்திய நிதிக் கமிஷன் முன்னால், அரசு சமர்ப்பித்த கோரிக்கைகளைப் பற்றியும் அந்தக் கோரிக்கைகளிலே எந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார்கள். எந்த எந்தக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்ளவில்லை, என்பது பற்றிய விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டு வந்தது.

(பிற்பகல் 12—30)

ஆனால் அது தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாநில அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மாநிலத்தை வழி நடத்துகின்ற, அங்கம் என்கின்ற முறையிலே அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும், மத்திய திட்டக் குழுவினிடமும் சரி, மத்திய நிதிக் கமிஷனிடமும் சரி, தமிழ்நாட்டின் தேவைகளை இந்த மாநில அரசு எந்த வகையில் எடுத்து சொல்லியிருக்கிறது என்பது பற்றியும், அவற்றிலே அவர்கள் ஏற்றுக்கொண்ட விவரங்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற விவரங்கள் பற்றி முழுவதுமாக நாம் மாநில பேரவையில் விவாதிக்கவேண்டும் என்பதால் அவற்றிற்கான ரிப்போர்ட்களை பேரவையில் பிளேஸ் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக, முக்கியமான பிரச்சினை காவேரி பிரச்சினை. அந்தக்காவேரி பிரச்சனை நீண்டகாலமாக தீர்க்கப்படவில்லை என்பதை ஏதோ எதிர்கட்சி ஆளுகின்ற கட்சி என்பதற்காக அல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை குற்றம் சொல்லுகின்ற நோக்கிலும் அல்ல. இது மாநிலத்தின் பொதுவான பிரச்சினை என்ற முறையில் மாநிலத்தின் அனைத்து



கட்சிகளும் இந்த பிரச்சினையைப் பார்க்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையில் இன்றைக்கு இது ஏன தடைபட்டு இருக்கிறது என்று பரிசீலிக்க வேண்டும், அடுத்து, கிருஷ்ணா நதி நீர் பிரச்சினை. ராயல்சீமா பகுதியிலே தெலுங்கு-கங்கை வருகிறது. வருகின்ற வழியிலே உள்ள ராயல்சீமா வறண்டு இருக்கின்ற பிரதேசம். நமக்கெல்லாம் தெரியும், இதே சென்னை இராஜதானியில் ஒரு அங்கமாகத்தான் இந்த ராயல்சீமா ஒரு காலத்தில் இருந்தது. அந்த ராயல்சீமா பகுதி பஞ்சமானபகுதி. பற்றாக்குறையான தொகுதி. அந்த வறண்ட பகுதியிலே அவர்கள் தண்ணீர் பாய்ச்சுவதைக்கூட தடுக்கவோ அல்லது வேண்டாம் என்று சொல்லவதோ சரியல்ல. ஏனென்றால் ராயல்சீமா ஒன்றும் பாகிஸ்தானோ அல்லது வேறு ஒரு நாடோ அல்ல. இந்தியாவின் ஒரு பகுதிதான். அந்தப் பகுதியிலே சென்னைக்கு கிருஷ்ணா நீர் கொண்டு வருகின்ற வழியில் வறண்ட பிரதேசத்தின் ஒரு பகுதி தேவையை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். அதற்கு சில மாநிலங்கள் ஆட்சேபிக்கின்றன. இந்த ஆட்சேபணைகள் காரணமாக சென்னைக்கு கிடைக்க வேண்டிய குடி தண்ணீர் கிடைக்காமல் காலதாமதப் படுத்தப்படுகிறது. இது தமிழ்நாட்டின் தேவையை மட்டும் அல்ல. இந்தியாவின் தேசீய ஒருமைப்பாட்டிற்கும் வெடி வைப்பதற்குரிய வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. காவிரிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் தொடர்ந்து வருடந்தோறும் சில டி. எம். சி. தண்ணீர் கேட்டுக்கொண்டிருப்பது போல் அல்லாமல் இந்த மாநில அரசு சிக்கலுக்கு உட்பட்டிருக்கின்ற மாநிலங்களை அழைத்து பேசி நிரந்தர தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை உரியபடி மத்திய அரசு எடுக்க வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவேரி நீர் பிரச்சனை பொறுத்தவரையில், கர்நாடகத்தோடு பேசி, கர்நாடக மாநிலத்தின் தேவைகளையும், தமிழ்நாட்டின் தேவைகளையும் கணக்கில் கொண்டு நிரந்தர தீர்வுகாண்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

அடுத்து, இங்கே மிக முக்கியமான பிரச்சனை. உள்ளாட்சித் தேர்தல் முடிந்ததற்கு பின்னால், அநேகமாக உள்ளாட்சி அமைப்புகள் கடுமையான நிதிப் பற்றாக்குறையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியிலே கூட இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால் 12 இலட்சம் ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படுகிறது என்றால் அதிலே மாநில அரசு ஒன்றியத்திற்கு 200 வீடுகளைக் கட்டச் சொல்லி அந்த வீடுகளுக்கும் இந்த நிதியிலிருந்து ஒதுக்குவதாகச் சொல்லப்படுகிறது. ஒன்றியங்களில் ஒன்றிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தில் இந்த மாநில அரசு விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டிருக்கின்ற வீடு கட்டுகின்ற திட்டத்திற்கு ஒதுக்கச் சொல்வது நடைமுறையில் அந்த ஒன்றியங்களை பணப்பற்றாக்குறை என்ற பள்ளத்திலே தள்ளி எதிர்க் கட்சியினர் வெற்றி பெற்றிருப்பதால் பழிவாங்கவேண்டும் என்பதற்காக இந்த

மாநில அரசு செயல்படுகிறது என்று நினைத்தால் அது தவறாகுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். மாநில அரசு 30 இலட்சம் ரூபாயில் வீடுகளை கட்டுவது என்று அறிவித்துவிட்டு அந்த வீடுகளை கட்டுவதற்கு தனிப்பட்ட வருவாய் வாயில்களை உருவாக்கி நிதிகளைச் சேகரிக்காமல், மக்களுக்கு குடிநீர் வழங்கவும், ரோடு போடவும் இன்ன பல தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற 12 இலட்சம் ரூபாயில் 6 இலட்சம் ரூபாய் இதற்கு ஒதுக்கச் சொல்வது நியாயம் தானா ? இந்த நடைமுறை அந்த ஒன்றியங்களின் தேவைகளை கடுமையாக பாதிக்கும் அல்லவா என்பதை இந்த மாநிலத்திற்கு எடுத்துச் சொல்லி அவற்றை கைவிடவேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டு வலியுறுத்த விரும்புகிறேன்.

அதே போல ஸ்பெஷல் ஆபீசர் காலம். மாநில அரசுக்கு திருப்ப திரும்ப சொல்லிக்கொள்கிறோம். முதல்வர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் கூட ஒரு பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். லஞ்ச ஊழல் எங்கே ஏற்பட்டாலும் அனுமதிக்கமாட்டேன். அதை தூக்கி எறிவேன் என்று சொல்லியிருக்கிறார். அதை அந்தரங்க சுத்தியோடு வரவேற்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். ஆனால் சொல்வது சொல்லில் மட்டுமல்ல. ஒரு விஷயத்தை நாம் சொல்கிறோம் என்றால் நடைமுறைக்கு பொறுத்தமான விஷயத்தைத்தான் சொல்ல வேண்டும். காரியார்த்தமற்ற விஷயங்களைச் சொல்வது மக்களை ஏமாற்றுவதாகும். ஏமாற்றுவதற்காக அவர் சொல்வார் என்று நான் கருதவில்லை. சொன்ன விஷயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த மாநில அரசு தயாரா?, முதல்வர் எம்.ஜி.ஆர். பகிரங்கமாக பொதுக்கூட்டத்தில் சொல்கிறார்கள், ஊழலை ஒழிப்பேன், லஞ்சம் எங்கிருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன் என்று. பின்னர் ஏன் இந்த மாநில அரசு கீழ்மட்டத்திலிருந்து நடவடிக்கை எடுக்க உரிய பொருத்தமான, காரியார்த்தமான நடவடிக்கைகளை முன்மொழிய அஞ்சுகிறது. இது வெற்று கனவுதானா ? வெற்று அறிவுரை மட்டும் தானா ? சொல்லுகின்ற விஷயங்களைச்செயல்படுத்துவதற்கு நீங்கள் ஏன் செயல் வடிவத்தைச் சொல்லவில்லை? ஊழலை ஒழிக்க நடைமுறைத் திட்டம் என்ன ?

நாங்கள் சொல்கிறோம். இந்தக் காவல் துறையில் ஊழல் என்று சொல்வது கூட சரியல்யில்லை' ஊழல் குட்டையில் ஊறிக்கிடக்கிற ஒரு துறை காவல் துறை என்பதுதான் சரி. மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். சின்ன வயதிலிருந்து எனக்குத் தெரியும் காவல் துறையைப் பற்றி என்று. அப்படித் தெரிந்தவர்கள் இன்றைக்கு தீர்வு அளிக்கிற அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். எனவே தீர்வளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் வலியுறுத்துகிறேன். அதிலே என்ன கஷ்டம் ? என்ன அச்சம் ?



அதிகாரிகளின் Date of joining அதிலே இருந்து சர்வீசில் உள்ள காலம் வரையில் உள்ள நிலைமைகளைக் கணக்கெடுத்து அன்றைக்கு அவர்களுக்கு இருந்த சொத்து என்ன, இடைப்பட்ட இந்தக் காலத்தில் புதிதாக ஏற்பட்ட அவர்களுடைய சொத்து என்ன, அவற்றை எப்படிப் பெற்றார்கள் என்பது பற்றி ஒரு ஸ்பெஷல் விசாரணைக் கமிஷன் போட்டு, காவல் துறை அதிகாரிகளை விசாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் என்ன கஷ்டம் என்று நான் கேட்கிறேன். இந்த நடைமுறையை நீங்கள் எல்லா விஷயங்களிலும் அமுலாக்கலாம். அதேபோல் தனி அதிகாரிகள் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் நடந்திருப்பவை கொஞ்சநஞ்சமல்ல. எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும், சரி, நகரமன்றங்களிலும் சரி பல நடந்திருக்கின்றன. ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து அவற்றைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊழலை ஒழிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் சொல்கிற கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் இன்னின்ன வழியில் செய்யப் போகிறோம் என்றாவது ஒரு வழியைச் சொல்லுங்கள். ஊழலை ஒழிக்க இன்னின்ன வகையில் செயல்படப் போகிறோம் என்று சொல்லுங்கள். அப்படிச் சொல்லாமல், முதல்வர் மட்டும் சொல்வாரேயானால் இது முன்னுக்குப் பின் முரணானதும், சொல்லுக்கும், செயலுக்கும் தொடர்பற்றதாகவும் இருக்கும் என்று நான் குறிப்பிட்டு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, மிக முக்கியமான விஷயம் வறட்சி–பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் கூட ஆரம்பத்திலே குறிப்பிட்டார்கள். அதற்கு நியாயமான முகாந்திரங்கள் முழுக்க இருக்கின்றன. ஆத்திரப்படுவதற்குரிய காரியங்கள் நம் தமிழ் நாட்டில் நடக்கின்றன. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட பதில் சொல்லக்கூடும். நாங்கள் வசதி படைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்று நாங்கள் மிக மிகச் சொல்கிறோம், வசதி படைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள், ஜப்தி செய்யுங்கள் ஆட்சேபணை இல்லை என்று. ஆனால் நீங்கள் சொல்கிற நிலையில் உங்கள் ஆட்சியில் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்களைச் சொல்ல முடியும். குறிப்பாக ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மானாவாரி பூமியில், ஒரு ஏக்கர் 60 செண்ட் உள்ள, குறு விவசாயி வீட்டில் ஜப்தி செய்யப்பட்டு இருக்கிறது. உதாரணம் சொல்கிறேன். திருச்சிக்கு அருகே பெரம்பலூர் வட்டம பெரியம்மாபாளையம் கிராமத்தில் நல்லதம்பி மகன் முத்துச்சாமி என்ற கலைச் செல்வன் வீட்டில் கடந்த 1986–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18–அன்று மாலை 3 மணிக்கு கூட்டுறவு அதிகாரிகள் ஜப்திசெய்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை

நான் மிக வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன். அவர் நிலப் பிரபு என்ற அந்தஸ்தில் ஜப்தி செய்யப்பட்டாரா? அவர் வாங்கிய கடன் ரூ 1,111. வட்டியோடு சேர்ந்து ரூ 1980 தான். அவருடைய வீட்டில் என்ன என்ன ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றது? தட்டுமுட்டுச் சாமான்கள், தவலை, அண்டா, இரண்டு மூட்டை நெல் ஆகியவை ஜப்தி செய்யப்பட்டன. மிளகாயைக் கூட அதிகாரிகள் விட்டு வைக்க வில்லை. அதையும் ஜப்தி செய்திருக்கிறார்கள். இந்த ஜப்தி நடவடிக்கை சரி என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா, முடிந்தவர்களிடம் நீங்கள் ஜப்தி செய்யுங்கள். ஆனால் முடியாத குறு விவசாயி களிடத்திலும் நீங்கள் ஜப்தி செய்கிறீர்களே! மானாமதுரை வட்டாரத்தில் அன்னவாசல் நடுக்காட்டான் என்பவர் வீட்டில் 1986-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ம் நாள் கூட்டுறவு அதிகாரிகள் ஜப்தி செய்திருக்கிறார்கள். அவர் வீட்டில் இல்லாதபோது பூட்டை உடைத்து கதவை உள்ளே தள்ளி பெண்களை மிரட்டி சுவர் கடிகாரம், ட்ரான்சிஸ்டர், டேப் ரெக்கார்டர், பித்தளை பானை, எவர்சில்வர் சமான்கள் ஆகியவற்றை ஜப்தி செய்திருக்கிறார்கள். இப்படி ஜப்தி செய்யவேண்டுமென்று நீங்கள்உத்தர விட்டீர்களா? இந்த மாநில அரசு உத்தரவிட்டதா? மாநிலம் முழுவதும் வறட்சி இருக்கிறது என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். வறட்சி குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு எல்லாம் நடக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? வறண்ட நிலத்தில் இருக்கின்ற, பொய்த்துப்போன நிலத்தில் இருக்கின்ற விவசாயியிடம் போய் ஜப்தி செய்கிறீர்கள். இது அடுக்குமா? ஏழைகள் அழுத கண்ணீர் எப்படிப்பட்டது என்பதை என்னைக்காட்டிலும் மிக அதிகமாக நாவலர் அவர்கள் உணர்வார்கள். இப்படிச் செய்வது சரியல்ல. வறண்டு கிடக்கிற நிலத்தில் வறட்சி தாண்டவம் புரிகிறது. இந்த நேரத்தில் ஜப்தி நடவடிக்கை இல்லை, செய்யப்பட மாட்டாது என்று இந்தப் பேரவையில் நீங்கள் அறிவிக்கவேண்டும். நீங்கள் எஸ்கேப் ஆகிறீர்கள். தப்பித்து, நழுவி ஓடுகிறீர்கள். உடனே என்ன சொல்கிறீர்கள். லேன்ட்லார்ட என்று சொல்கிறீர்கள்' நிலப்பிரபுக்களிடம் ஜப்தி செய்யுங்கள். ஆனால் கட்ட முடியாத சிறு விவசாயிகளிடத்தில் ஜப்தி செய்யாதீர்கள். அதற்கான அறிவிப்பு வெளியிடப்படவேண்டும்.

அடுத்து, மாநில அரசின் கல்விக்கொள்கை பற்றி கூட இங்கே கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே என்ன நடக்கிறது? செல்ஃப் பைனான்சிங் இன்ஸ்டிடியூசன்ஸ் என்று சொல்லப்படுகின்ற சுய நிதி கல்வி நிறுவனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



(பிற்பகல் 12-40)

அவை ஒன்றும் சுயநிதிக் கல்வி நிலையங்கள் அல்ல. சுயநலக் கல்வி நிலையங்களாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒன்றான அண்ணாமலை யுனிவர்சிட்டியின் மெடிக்கல் காலேஜில், மாநில அரசாங்கம் தேர்வு செய்து அனுப்பிய மாணவன் ஒருவன் இன்றைக்கு வரையிலும் அங்கே சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றால் என்ன அர்த்தம்? நமது மாநில அரசின் சார்பாக பதிலுரைக்க இருக்கின்ற டாக்டர் நாவலர் அவர்கள் இதற்கு பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய ஆட்சிதான் அந்த மாணவனை அந்த மெடிக்கல் காலேஜிலே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று செலக்ஷன் கமிட்டி மூலமாக தேர்வு செய்து அனுப்பியும் கூட, கேப்பிடேசன் பீஸ் கொடுக்காததால் எடுத்துக் கொள்ளமாட்டோம், கொடுத்தால்தான் எடுத்துக் கொள்வோம் என்று அரசாங்கத்திற்கு எதிராகவே சொன்னால், நான் கேட்கிறேன், அரசாங்கத்திற்கும் அந்தக் கல்வி நிறுவனத்திற்கும் சீக்ரட் அண்டர்ஸ்டேண்டிங் ஏதாவது இருக்கிறதா, நாங்கள் அடிப்பது போல அடிக்கிறோம், நீங்கள் அழுவது போல் அழுங்கள் என்றுதான் செய்கிறீர்களா? ஆகவே உடனடியாக செலக்ஷன் கமிட்டி சிபாரிசு செய்த மாணவர்கள் அனைவரும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று விசேச ஆணையை அரசு பிறப்பிக்குமா? பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டு கடைசியாக ஒரு விஷயம் குறிப்பிட விருப்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இறுதியாக நம்முடைய பத்திரிகையாளர்களைப் பற்றி பரவலாகச் சொன்னார்கள். உழைக்கின்ற பத்திரிகையாளர் மக்களால் தொடங்கப்பட்டிருக்கிற ஒரு பத்திரிகையில் 52 பேர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அந்த 52 பேர்களை சட்ட விரோதமாக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அதற்கு நியாயம் கோரி அவர்கள் இந்த மாநில. அரசின் தொழிலாளர் நலத்துறைக்கு மனு கொடுத்திருக்கிறார்கள்

பணக்காரர்களும், முதலாளிகளும் மனு கொடுத்தால் உடனடியாக அதற்கான பில் இன்ட்ரடியூஸ் பண்ணப்படுகிறது. அரசுக்கு கோரிக்கை வந்தது, ஆகவே இந்த மசோதா வருகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி வசதி படைத்தவர்கள் வந்து மணி அடித்தால், உடனே அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கிறது. பாதிக்கப்பட்ட சாதாரண மக்கள் நாங்கள் இப்படி பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று மனு கொடுத்தால் எந்தவித நடவடிக்கையும் இல்லை. அந்த 52 பேர்களும் கொடுத்த மனுவைப் பற்றி இந்த அரசாங்கம் கண்டு கொள்ளவே இல்லை. ஆனால் என்ன செய்கிறது. அந்த மக்கள்குரல் பத்திரிகை இந்த அரசாங்கத்திற்கு சாதகமான நிலையில் செயல்படுகிறது என்பதற்காக விளம்பர குப்பைகளை இன்னும் அள்ளிக் அள்ளி கொட்டுகிறார்கள்

கொட்டுங்கள். அது பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் இப்படி விளம்பரம் கொடுக்கின்ற தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தியாவது அந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு கிடைக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா என்று சுட்டிக்காட்டி, அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, மூடப்படும் நிலையில் இருக்கும் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்படாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், அரசாங்கத்திற்கும் ஏதாவது அண்டர்ஸ்டேண்டிங் இருக்கிறதா என்பது போல தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது அவைக்குறிப்பில் இருக்க வேண்டுமா ?

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தேர்வுக் கமிட்டியின் மூலம் தேர்வு செய்யப்பட்ட மாணவனையே எடுத்துக் கொள்ளவில்லை. அண்ணாமலை யுனிவர்சிட்டியின் மெடிக்கல் காலேஜில் அரசாங்கம் தேர்வு செய்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்ன மாணவனையே இன்றுவரையில் எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் எடுத்துக்கொள்ளவில்லை? அந்த நிறுவனத்திற்கும் கல்வி இலாகாவிற்கும், அதாவது அரசாங்கத்திற்கும் ஏதாவது சீக்ரட் அண்டர்ஸ்டேண்டிங் இருக்கிறதா என்று கேட்டேன். இல்லை என்றால் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இப்போதுதான் அந்த விஷயத்தையே இந்த அவையில் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போதுதான் எங்களுடைய கவனத்திற்கே அது வருகிறது. அதற்குள் அதற்கு ஏன் நடவடிக்கை இல்லை என்று கேட்பது சரியல்ல சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகளோ மற்றவர்களோ இதுகுறித்து புகார்கள் வந்திருந்து விசாரணை நடத்தியிருந்தால்தான், உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும். அப்படி இல்லாமல் எடுத்த எடுப்பிலேயே கேட்ட உடனேயே அது என்னவாயிற்று என்று முழுமையாக எடுத்து விளக்கிச் சொல்லுகின்ற அளவிற்கு விளக்க குறிப்புகள் என்னிடத்தில் இருக்க நியாயம் இல்லை. அதற்கு பதில் தருகின்ற நிலையிலும் இன்றைக்கு நானும் இல்லை. எங்களுக்கு எந்த இடத்திலும் அண்டர்ஸ்டேண்டிங் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் இந்த அரசாங்கத்திற்கும் என்ன அண்டர்ஸ்டேண்டிங் இருக்கிறது? என்ன அண்டர்ஸ்டேண்டிங் இருந்திருந்தாலும் அது வெளிப்படையாகத் தான் இருக்கும். அந்த அண்டர்ஸ்டேண்டிங் எல்லாம் இந்த அவையின் மூலமாகத்தான் கொண்டும் வரப்படும். ஆகவே இரகசியமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

136489
சென்னை-600 008



அந்த மாணவனுக்கு இடம் கிடைக்கவில்லை என்றால், அரசாங்கத்திற்கு மனு கொடுக்கலாம். நீதிமன்றத்திற்குப் போகலாம். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. இப்படி எவ்வளவோ வழிகள் இருக்கின்றபோது, எங்களுக்கு முன்பே தெரியப்படுத்தாமல், பதில் சொல்வதற்காக குறிப்புகளைச்சேகரிப்பதற்கு எங்களுக்கு அவகாசம் கூட தராமல், திடீர் என்று எழுப்பி பிரச்சனையைச் சொல்லி, அதற்கு விடையளிக்கப்பெற வேண்டும் என்றால் அது சரியானது அல்ல. ஜனநாயகத்திற்கும் உகந்தது அல்ல. உங்களுக்கும் நல்லது அல்ல, எங்களுக்கும் நல்லது அல்ல, இந்த அவைக்குப் நல்லது அல்ல, நாட்டுக்குப் நல்லது அல்ல.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்த விதமான இரகசிய உடன்பாடும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கு நன்றி. மனக்காயப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல, அரசு தேர்வு செய்திருந்தும் கூட, அதனால் இடம் கிடைக்கும் என்று நம்பியிருந்த அவர்கள் இருந்த வேலையையும் இழந்து மனக்காயப்படுகிறார்களே, அவர்களுக்கு மனக்காயம் ஆற்ற நீதி கிடைக்க அரசாங்கமே நடவடிக்கை எடுக்கலாமே, கோர்ட்டிற்கு போனால் நீதி தாமதப்படுமே, நீதி தாமதப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கக் கூடாது. எந்தெந்த மாணவர்களுக்கு இல்லையென்று என் கைவசம் பட்டியல் வைத்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமென்றாலும் தருகிறேன். அவர்களுக்கு உடனடியாக இடம் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அரசின் சார்பாக இந்த மாணவர்களுடைய பட்டியலை அனுப்பி, இவர்களைச் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறோம். அந்தப் பட்டியலிலிருந்து அவர்கள் சேர்க்கத் தவறினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று அவர்கள் சேர்க்காமல் இருந்தால் அது நடவடிக்கைக்குரிய ஒன்றுதான். அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். உறுப்பினர் அவர்கள் அந்தப் பட்டியலைத் தரலாம்.

திரு. எம். இராசரத்தினம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு அனைத்துத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி நல்லமுறையில் செயலாற்றுவது பாராட்டத்தக்கது. சில திட்டங்களுக்கு மேலும் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, கல்வித் துறையைப் பொறுத்தவரையில் பல இடங்களில் கல்லூரிகள் அமைவதற்கும், பிளஸ் 2 மாணவர்களுக்கு ஹையர் செகண்டரி ஸ்கூல்ஸ் ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புகள் இருந்தாலும் அவை தவிர்க்கப்படுகின்றன. உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால், தென்னாற்காடு மாவட்

டத்தில், விழுப்புரம் தாலுக்காவில் பெருப்பாக்கம் கிராமம். ஆலாத்தூர், விராட்டிகுப்பம் போன்ற கிராமங்களில் பிளஸ் 2-விற் காக பங்குத்தொகை பணத்தை கட்டி நான்கு ஆண்டுகளாகியும் மாணவர்களுக்கு பிளஸ 2 படிக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பள்ளிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பெண்கள் கல்லூரி. விழுப்புரம் மாவட்டத்தின் தலைநகரமாக வரக்கூடிய நிலை இருக்கிறது. நிறைய பெண்கள் அங்கே படிக்கிறார்கள். அப்படி படிக்கக் கூடிய நகரங்கள், பெரு நகரங்கள், பர்ஸ்ட் கிரேட், செகண்ட் கிரேட் முனிசிபாலிட்டீஸ் இருக்கின்ற நகரங்களில் பல்வேறு இடங்களில் கல்வித்துறையில் அதிக நிதி ஒதுக்கீட்டை செய்து பெண்கள கல்லூரிகள் ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மருத்துவ வசதிகளைப் பற்றி குறிப்பிட விரும்பு கிறேன். பல இடங்களில் மருத்துவ மனைகளை சரியாக பரா மரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. தென்னார்க்காடு மாவட் டத்தில் விழுப்புரம் மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. ஆறு ஏக்கர் நிலம் அரசு மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதற்கு கட்டடம் கட்ட முடியவில்லை. குறைந்தபட்சம் அங்கே யிருக்கிற மெடிக்கல் ஆபீசருக்கு, பெண் டாக்டர்களுக்கு குவார்ட்டர்ஸ் வைத்திருந் தால் அவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கும். அப்படி குவார்ட்டர்ஸ் கட்டுவதற்கு நிதி வசதி இல்லாமல் மருத்துவத் துறை இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. அடுத்து சென்னை-திருச்சி நேஷனல் ஹைவேஸ் ரோட்டில் இருக்கிற அந்த ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இருக்கிறார்கள். நோயாளி கள் வைத்தியம் பார்த்து கொள்வதற்கு ஏற்றவகையில் கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. மேலும் அங்கே மேசை, நாற்காலி வசதி கூட இல்லாமல் டாக்டர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே பர்னிச்சர் கிராண்ட் என்று வைத்து ஆஸ்பத்திரி களுக்கு இந்த வசதிகளைச் செய்ய வேண்டும். விழுப்புரம் மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலை யில் இருப்பதால் அந்த மருத்துவமனையில் ஆப்பரேஷன் தியேட் டரை அமைக்க வேண்டும். விழுப்புரம் மாவட்ட தலை நகரமாக வருவதால் இந்த வசதியை கட்டாயம் செய்து தர வேண்டும். இவற்றுக்கெல்லாம் அதிகமான நிதி ஒதுக்கீட்டை செய்து மருத் துவமனை நல்ல முறையில் செயல்படுவதற்கு உதவிட வேண்டு மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். பல மாவட்டங் களை இரண்டாக பிரிக்கிற இந்த நேரத்தில், ஏனோ விழுப்புரம் மாவட்டத்தை பிரிப்பதைக் குறித்து அறிவிக்கப்படாமல் இருக்கிறது. அடுத்த நிதியாண்டிலாவது விழுப்புரத்தை தலை நகரமாகக் கொண்டு மாவட்டம் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து விழுப்புரம் தாலுக்காவில் வளவனூர் ஆஸ்பத்திரியில் ' காம்பவுண்ட் வால் ' போட பி.டபிள்யூ.டி.-யில் சாங்ஷன் ஆகி நான்கு ஆண்டுகள் ஆகிறது. அதற்கு ' லேடி டாக்டர்கள் ' சாங்ஷன் செய்யப்பட்டும் அவர்கள் பணியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். இதை நிவர்த்தி செய்து உடன் பெண் டாக்டர் களை நியமிக்க வேண்டும்.

(பிற்பகல் 12.50)

காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு சாங்ஷன் செய்யப்பட்டு இருக்கிறது. நிதிப் பற்றாக்குறை இருக்கிறது, ஒவ்வொரு ஆண்டும் சில ஆஸ்பத்திரிகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். எனவே பெரிய அளவிலே இருக்கக் கூடிய, டவுன் பஞ்சாயத்தாக இருக்கக் கூடிய அந்த வளவனூர் பேரூராட்சிக்கு காம்பவுன்ட் சுவர் கட்டுவதாக சொல்லி 4 ஆண்டுக் காலமாக நிலுவையில் இருக்கிறது. எனவே அதை உடனடியாகக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று குடிநீர்ப் பிரச்சனை. இந்தப் பிரச்சனையைப் பற்றி குறிப்பிடும்போது, தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள், தாய்க் குலத்தின்மீது வைத்திருக்கக் கூடிய பரிவின் காரணமாக பல இடங்களில் குடிநீர் வசதிகளைச் செய்திருக்கிறார்கள். இப்படி குடிநீர் வசதிகளைச் செய்திருந் தாலும், இன்னும் சில இடங்களில் (World)— ஓல்ட் ஸ்கீம் திட்டத்திலே இருக்கக் கூடிய அந்தத் திட்டங்கள் அமுல் படுத்தப்படாத நிலைமையில் இருக்கின்றன. அதற்கு உதாரண மாக நான் சொல்ல வேண்டும் என்றால், என் தொகுதியைப் பற்றி நான் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுக் கொண்டு இருப்பதாக நினைக்க வேண்டாம். என் தொகுதியில் வளவனூர் பேரூராட்சி போன்று பல தொகுதிகள் இருக்கின்றன. ஏறக்குறைய 4, 5 ஆண்டுக் காலமாக ' ஓல்டு ஸ்கீம் திட்டத்திலே ' இருக்கக் கூடிய வளவனூர் பேரூராட்சி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எல்லாம் செயல்படாமல் இருக்கின்றன. சாங்சன் செய்யப்பட்டு இருக்கிறது. அதுவும் சில இடங்களில் ஆண்டுக்கு இவ்வளவு என்று எடுக்க வேண்டிய நிலைமையும் இருக்கிறது. எனவே இதையும் உடனடியாக நீங்கள் குடிநீருக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்தக் குடிநீர் பிரச்சனையைப் போக்குவதற்கு, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாலை வசதிகளுக்காக, குறிப்பாக கிராமப் பகுதி களில் உள்ள சாலைகளுக்கு அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் உள்ள ரோடுகளில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. ரோடுகளை ஆக்கிரமித்து இருப்பதன் காரணமாக பொதுமக்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இதைப் பொதுமக்களே செய்து

கொள்ளலாம் என்ற நிலை இருந்தாலும், அங்கேயிருக்கக் கூடிய ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி, அங்கே உள்ள ரோடுகளை அகலப் படுத்தினால்தான் விவசாயப் பெருங்குடி மக்கள் அங்கேயிருக்கக் கூடிய உரங்களையும், தானியங்களையும் எடுத்துக் கொண்டு நகரத்திற்குச் செல்ல முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் உள்ள இடங்களுக்கு சாலை வசதிக்காக அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய பால் வழங்கும் சங்கங்கள். இந்தப் பால் வழங்கும் சங்கங்கள் மிகச் சீரும் சிறப்புமாக நம்முடைய அரசாங்கத்தால் செயல்பட்டு வந்தாலும், அதிலே இருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட அரிசன மக்களாக இருக்கக் கூடிய பின்தங்கிய மக்கள் கறவை மாடுகளை வாங்க லோனுக்காக அப்ளை செய்யும்போது, அந்தக் கடன் வசதிக்கான மானியத் தொகை கிடைப்பதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை என்பதை நான் மிக வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். இரண்டாவது ' லோன்—செகண்ட் லோன் வேண்டும் என்று கூறுபவர்களுக்கு, இந்தக் கறவை மாடுகள் வாங்க நிதி ஒதுக்கப்படுகிறதே ஒழிய, முதன்மையாக லோன் வாங்குவதற்கு இன்னும் பல கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியத் தொகை கிடைப்பதில்லை—அதுவும் குறிப்பாக இந்தக் கறவை மாடுகள் வாங்குவதற்கு—என்பதை நான் தெரிவித்துக் கொள் கொள்கிறேன். இதன் காரணமாக மாடுகள் வாங்கப்படவில்லை என்ற கருத்தை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நிலைமையில், கறவை மாடுகள் கொடுக்கக் கூடிய அந்த நிலையை உணர்ந்து தயவு செய்து கறவை மாடுகளுக்கு அதிகமாக மானிய நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களுக்காக அதிக நிதி தேவை என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிடு வார்கள் என்று கருதுகிறேன். அப்படி அதிக நிதி தேவை என்கிறபோது, என்னுடைய தாழ்மையான ஒரு சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக மத்திய அரசிலே பொறுப்பில் இருக்கிற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களை நான் பணிவன்போடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன். இன்றைய நிலையில், குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டதால், ஏற்படக் கூடிய வரி இழப்பும், மதுவிலக்கை கொண்டு வருவதால் ஏற்படக் கூடிய வரி இழப்பும் அதிகமாக இருக்கக் கூடிய நேரத் திலே, மத்திய அரசில் இருக்கக் கூடிய அமைச்சர்களையும், பாரதப் பிரதமர் அவர்களையும் சந்தித்து, ஆக்க பூர்வமான பணிகளைச் செய்து, தமிழகத்திற்கு அதிக நிதியை ஒதுக்கித் தருவதற்கு முயல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன். இங்கே இருக்கக் கூடியவர்கள். மது விலக்கைக் கொண்டு வாருங்கள், கொண்டு வாருங்கள் என்று சொல்லக் கூடிய நல்லவர்கள் எல்லாம் இதைச் செய்ய வேண்டும் என்று நான்



வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். மது விலக்கைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆவன செய்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இதனால் ஏற்படும் இழப்புக்கு உங்களுடைய நிலை என்ன என்பதையும் உணர்ந்து, அதற்கான மானியத் தொகையை மத்திய அரசிடம் இருந்து பெறுவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பஞ்சாயத்துக்களிலும், நகராட்சிகளிலும் நிதி வசதியைப் பெருக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. 10 ஆண்டுக்கு மேலாக வீட்டு வரியெல்லாம் நகராட்சிகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் ஏற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே வீட்டு வரியை ஏற்றுவதன் வாயிலாகவும், அதிக நிதியைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களிலும் நகராட்சிகளிலும் ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு மேலாக உயர்த்தப்படாமல் இருக்கிறது. அதையும் செய்யலாம். மேலும் லேண்ட் செஸ், அர்பன் லேண்ட் டாக்ஸ் என்ற நிலையை எல்லாம் நீங்கள் ஏற்படுத்தினால்தான், இன்றைய அளவில் நாம் போட்டிருக்கக் கூடிய திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டார்கள், பஞ்சாயத்துக்களில் கட்டப்படுகிற வீடுகளைப்பற்றிச் சொல்லும்போது, பஞ்சாயத்துக்களுக்குத்தான் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொல்லி, ஏறக்குறைய 6 லட்சத்திற்கு மேலாக நீங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று. அவர்கள் வேண்டுமென்றே குறை சொல்வதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் குறிப்பிட விரும்புவது, புரட்சித் தலைவருடைய அரசு நல்ல திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் என்பது உள்ளாட்சித் துறையைச்சேர்ந்தது நம்முடைய தமிழக அரசைச் சேர்ந்தது என்பது அவர்களுக்குத் தெரியாதது அல்ல. தெரிந்ததை வேண்டுமென்றே குற்றம் சொல்வதற்காகக் குறிப்பிட்டார்களா என்று தெரியவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் தெளிவாகக் கூற விரும்புகிறேன். இந்தத் திட்டங்களுக்கு தனியாக ஏதாவது நிதி வசதி செய்து அந்த நிதியின் வாயிலாக அங்கே வீடுகள் கட்டப்படும் என்று இங்கே இருக்கக் கூடிய மாண்புமிகு நிதியமைச்சரோ, அரசு குறிப்போ தெரிவிக்கவில்லை. ஆகவே இதையெல்லாம் நீங்கள் உணர்ந்து ஆக்கபூர்வமான பணிகளை, நல்லதைச் செய்யக் கூடிய இந்த அரசைப் பாராட்டுங்கள். 'Easiest thing in life is to find fault. என்றுகூறுவார்களே, அதுபோன்று, மிகச் சாதாரணமான குற்றங் களைக் கண்டு பிடிப்பதிலே நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டாம் ஊக்கம் ஆக்கத்திற்குப் பயன்படும் என்ற கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த அரசு செய்யக்கூடிய நல்ல காரியங் களுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று வேண்டி, விரும்பி கேட்டு, நான் குறிப்பிட்ட அனைத்துத் துறைகளுக்கும் நிதி

வசதிகளை அதிகமாக ஒதுக்கீடுசெய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு எ, எஸ், ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய 1986ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட எண். 4-ன்மீது ஜனதா கட்சியினுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத்துவக்குகின்றேன்.

இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு ஏறக்குறைய 3 ஆயிரத்து 420 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறியும்போது இந்த அரசு இன்னும் பல்வேறு திட்டங்களிலே கவனத்தைச் செலுத்தி மக்கள் நல்வாழ்வுக்காக, வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, வேளாண்மைத் துறை, நாட்டு மக்களிலே 85 சதவீதம் பேர் இன்று வேளாண்மைத் துறையை நம்பி இருக்கின்ற காரணத்தினாலே இதைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இந்த இரண்டு வருடகாலமாக வெள்ளாமை சரியான முறையிலே விவசாயிகளுடைய கைக்கு வராமல், மிகச் சிரமமான நிலையிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு நீங்கள் கடனை ஒத்தி வைக்க வேண்டும் என்றும், தீர்வுகளை ரத்து செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், குறிப்பாக காமராஜ் மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு மற்றும் பல மாவட்டங்கள் வறட்சி நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அவைகளையும் நீங்கள் வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விருப்புகிறேன்.

இன்னொன்று, விவசாயிகளுடைய விளைபொருள்களுக்கு, சரியான விலை கிடைக்காமல் இருக்கிறது. இதை இந்த அரசு சரி பார்த்து அவைகளுக்கு சரியான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், குறிப்பாக மிளகாய் வற்றல், சென்ற வருடம் 1,000 ரூபாயிலிருந்து 1500 ரூபாய் இருந்த நிலையில் இந்த வருடம் வெறும் 500 ரூபாயிலிருந்து 600 வரைதான் இருக்கிறது. இவர்களுக்கு ஒரு சரியான பாதுகாப்பை இந்த அரசு கொடுத்தாலும், விவசாயிகளுடைய மற்ற கடனை தீர்க்க முடியும் என்றும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்தபடியாக, விருதுநகரிலே, குடிநீர் பிரச்சனை இருக்கிறது தினசரி தேவை 45 லட்சம் லிட்டர். ஆனால் இப்போது கிடைப்பதோ 6 லட்சம் லிட்டர் தான். இதை சரி செய்வதற்கு தனியார் பகுதிகளிலிருந்து தண்ணீர் எடுப்பதற்காக, நகராட்சி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக சென்ற பிப்ரவரி மாதமே 6 லட்சத்து 71 ஆயிரம் ருபாய்க்கு லாரி மூலமாக சப்ளை செய்வதற்கு ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. அது இன்னும் முடிவு பெறவில்லை. அந்தப் பணம் இன்னும் சேங்ஷன் செய்யப்படவில்லை. அதன் பிறகு, சென்ற மாதம் புதிய அடிக் குழாய் போடுவதற்கு என்றும், அடிக் குழாய்களை தூர் எடுப்பதற்கு என்றும் அவைகளை ஆழப்படுத்துவதற்கு என்றும், மொத்தமாக 20 லட்சம் ரூபாய்க்கு ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

அதைப்போல், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த விருதுநகரில் மக்கள் சென்ற 15 வருடமாக கை பம்புகளை நம்பியே தங்களுடைய வாழ்க்கையை, காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நிரந்தரமான நீர்த் தேக்கத் திட்டம் இல்லை இப்போது மொத்தம் உள்ளது 500 கைக் குழாய்களதான் அதற்கான ஒரு திட்டத்தை கொண்டுவர நகராட்சியிலே ஒரு தீர்மானத்தை போட்டு 1-1/2 கோடிக்கு சேங்ஷன் கேட்டு இருக்கிறார்கள். அதை நிறைவேற்றி வைத்து இப்போது இருக்கிற தண்ணீர் பற்றாக் குறையை இந்த அரசு தீர்க்க வேண்டுமென்றும், எதிர் காலத்தில் இன்னொரு திட்டமாக தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவதற்கு ஒரு திட்டத்தைத் தீட்டவேண்டுமென்றும் இந்தநேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காமராஜர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கண்மாய்களும் வரண்டுபோய் இருக்கின்றன. மராமத்து பார்க்க வேண்டியிருக்கிறது. தூர் எடுக்க வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டு நவம்பர் மாதம் காமராஜர் மாவட்டத்தின் நீர்ப்பாசன மாநாடு மதுரையில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. அது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அது நடக்கவில்லை. அதையும் நடத்த வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் பராமரிக்க வேண்டிய கண்மாய்களெல்லாம் பொதுப் பணித் துறை எடுத்துக் கொண்டு அவைகளை பராமரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வு ஊதியமாக தமிழக அரசு தற்சமயம் 150 ரூபாய் கொடுத்து வருகிறது. அதை 300 ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் இந்த நாட்டிலே சுதந்திர மனிதர்களாக வாழ்வதற்கு தமது வாழ்க்கையை தியாகம் செய்தவர்கள், இன்று அவர்கள் ஏழைகளாகவும் வயதானவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்கு ரூபாய் 300ஆவது ஓய்வு ஊதியம் கொடுக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

அதைப்போல் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு தடவை உறுப்பினராக இருந்தாலே ஓய்வு ஊதியம் 500 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வருடத்திற்கு 50 ரூபாய் இன்கிரிமெண்டு என்று கூட்டுவது சரியாக இருக்காது என்பது என்னுடைய கருத்து. அதைப்போல் அரசு அலுவலர்களுக்கு ஓய்வு ஊதியம் மற்ற ஓய்வு ஊதியங்களை முறையாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1–10]

முதியோர் பென்ஷனை காலாகாலத்தில் கொடுக்க வேண்டும் என்றும் வரிசையில் இருக்கும் முதியோருக்கு பென்ஷன் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் அரிசன நலத்துறையின் மூலமாக ஆதி திராவிடர்களுக்கு உதவ தாட்கோ நிறுவனம் என்ற நிறுவனம் ஒன்று இருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள் அரசு இனாமாக கொடுக்கிற இடங்களில் தான் வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்றும், தனியார் நிலங்களில் வீடு கட்டிக் கொடுக்க முடியாது என்றும் சொல்லுகிறார்கள். இந்த விதியை தளர்த்தி ஏழை எளிய அரிசன மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் வீடு கட்டிக் கொள்வதற்கு அனுமதியையும், கடனையும் தரவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

அதேபோல் அரிசன நலத் துறையிலிருந்து ஆதி திராவிடர்களுக்கு வருடத்திற்கு ஒரு மாவட்டத்தை எடுத்து அதில் ஒரு யூனியனை எடுத்துக்கொண்டு அங்கே நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே இந்த முறை காமராஜர்மாவட்டம் விடப்பட்டு இருப்பதாகவும் அடுத்த வருடம் எடுக்க இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அடுத்த தடவை எடுக்கும்போது அங்கே 2 யூனியன்களை எடுத்து நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தனியார் பஸ்ஸில் பணி செய்யும் ஊழியர்களுடைய சங்கத்திலிருந்து, திருநெல்வேலியிலிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. அவர்களுக்கும் அரசு பேருந்துகளில் கொடுக்கப்படுகிற சம்பளம் போன்றவைகளை கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு ஒரு சட்டம் உச்ச நீதி மன்றத்தில் போடப்பட்டிருக்கிறது என்றும் இங்கேயுள்ள தமிழக அரசு அதை அமல் செய்யவேண்டும் என்றும் சொல்லி தனியார் பஸ் தொழில் அதிபர்களை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூடிய பஞ்சாலைகளை திறக்க வேண்டும் என்றும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். சிறைச்சாலைகளைப்பற்றி



சொல்லும்போது அங்குள்ள கைதிகளைப் பற்றி ஏற்கனவே பேசி விட்டேன். தற்சமயம் அங்கே பணிபுரியும் பணியாளர்களைப் பற்றி பேச வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஊதியம் மிக மிக குறைவாக இருக்கிறது. காவல் துறையில் இருப்பதைப் போலவே அவர்களுக்கும் ஊதியம் கொடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு நல்ல பல வசதிகளைச்செய்துதர வேண்டும்என்றும் கேட்டுக்கொள்கிறேன். 20 வருடங்களாக பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் சிறைச்சாலைக்கு ஐ. ஜி.—யை சிறைத் துறையிலிருந்தே எடுக்க வேண்டும் என்றும் இப்போது அது காவல் துறையிலிருந்து கொடுக்கிறார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அவர்களுக்கு பல வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கைதிகளை காவலர்கள் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்வதைப் போல் மருத்துவ மனைக்கும் அழைத்துச் செல்வதற்கும் காவலர்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வணிக வரி 10 ரூபாய் என்று இருந்த லைசன்ஸ் இப்போது 100 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் 10 மடங்கு உயர்த்தும் போது எங்களுக்கு அச்சமாக இருக்கிறது. இந்த அரசு 10 மடங்கு விலைவாசி உயர்ந்து இருக்கிறது என்று ஒத்துக்கொள்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். 10 ரூபாய் லைசன்ஸ் பீஸ் என்று இருந்ததை 100 ரூபாய் என்று ஆக்குவது மிக மிக அதிகம். இந்த தடவை அரசு வசூல் செய்துவிட்டது.. அடுத்த தடவை அதை பரிசிலனைச் செய்து கொஞ்சம் குறைக்கவேண்டும் என்று சேட்டுக் கொள்கிறேன்.

5 சதவீத பலமுனை வரியாக இருந்ததை 2 சதவீத ஒரு முனை வரியாக மாற்றியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேபோல் 8 சதவீதம் வரி என்று இருக்கும் போது வணிகர்களுக்கு வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பும்போது அதற்கு 4 சதவீத வரியை சேர்த்து வைத்து இருக்கிறார்கள். ஆகவே அது 12 சதவீதமாக ஆகிவிடுகிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஒரு முனை விற்பனை வரியை 'பர்சேஸ் பாயின்டில்' போட்டால் வெளி மாநிலத்திற்கு ஏற்றுவதற்கு வழி வகை செய்தால் வரியும் அரசுக்கு அதிகமாக கிடைக்கும், எங்களுக்கும்-நாங்கள் எல்லாம் கமிஷன் கடை வியாபாரம் செய்பவர்கள்-வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணிகர்கள் கொள்முதல் செய்யும்போது கிராம கொள்முதலாகப் போட்டு நேரடியாக சி. எஸ். டி. வெளி மாநிலங்களுக்கு அனுப்பும்போது எங்களுக்கு 4 சதவீதம் வரி கிடைக்கிறது. இந்த 8 சதவீத வரி கிடைக்காமல் போகிறது என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொண்டு நீங்கள் ஒரு முனை கொள்முதல் வரியாக போடவேண்டும் என்றும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கின்ற சரக்குகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 3 லட்சத்திலிருந்து 10 லட்சம் வரை வரிவிலக்கு கொடுத்து இருக்கிறீர்கள். அதிகப்படியான வரி வாய்ப்பை இழந்து இருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். அதேபோல் மற்றும் இருக்கிற இனங்களுக்கு அதிகப்படியான வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகரிலிருந்து சென்னைக்கு செல்லக்கூடியவர்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலமாக ஒரு பஸ் விடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த பஸ் விருதுநகரிலிருந்து கிளம்பவில்லை. திருநெல்வேலியில் பல டிக்கெட்டுகளை ஏற்றிக் கொண்டு விருதுநகருக்கு வந்து ஒரு 30 டிக்கெட்டுகளை மட்டும் ஏற்றிச் செல்கிறார்கள். விருதுநகரிலிருந்து அந்த பஸ் செல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது ஒரு பெரிய வணிக நகரமாக இருப்பதால் விருதுநகரிலிருந்து எல்லா ஊர்களுக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலமாக பஸ் விடுவதற்கான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அதேபோல் தொகுதி முழுவதும் சாலைகள் மிக மிக சீர் கேடு அடைந்து இருக்கின்றன. அதை பராமரிக்க வேண்டும் என்றும் காமராஜர் மாவட்டம்துவக்கப்பட்டு விருதுநகர் தலை நகரமாக இருக்கிறது. அங்கு ரயில்வே நிலையத்தின் அருகில் ரயில்வே மேம்பாலம் கட்டவேண்டும் என்றும், ரயில்வே மேம்பாலம் இல்லாததன் காரணமாக ஊரின் நடுவில் உள்ள ரயில்வேநிலையத்திற்கு செல்பவர்களுக்கு மிகமிக கஷ்டமாக இருக்கிறது. தலைமை மருத்துவ மனை, கல்லூரி, பாலிடெக்னிக், திருமண மண்டபம், மேல் நிலைப் பள்ளி, சேவை சங்கங்கள் அனைத்தும் ஊரின் கீழ்ப் பகுதியில் இருப்பதால் மிகவும் கஷ்டமாக இருப்பதால் அங்கே ஒரு மேம்பாலம் அவசியம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டத் தலைநகரான விருதுநகரில் இன்னும் காவல்துறையினுடைய தலைமையிடம் அமைக்கப்படவில்லை. அங்கே காவல்துறையினருக்கு சரியான வீட்டுவசதி செய்து தரப்படவில்லை. அங்குள்ள எஸ். பி. அவர்கள் வாடகை வீட்டில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் இந்த நேரத்திலே கவனம் செலுத்தி, காமராஜர் மாவட்டத்திற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டம் காரியப்பட்டி ஒன்றியத்தில் மல்லாங்கிணறு அல்லது கல்குறிச்சியில் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தரவேண்டும். விருதுநகர் தொகுதி செங்குன்றபுரத்தில் ஒரு காவல்துறை அவுட்போஸ்ட் நிறுவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விருதுநகர் தொகுதியிலே ஆமத்தூர் காவல் நிலையத்தில் போன் வசதி நீண்டகாலமாக இருந்தது எடுக்கப்பட்டிருக்கிறது. திரும்பவும் அந்தக் காவல் நிலையத்திற்கு போன் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து தீயணைப்பு. தீயணைப்பு பற்றி சொல்லும்போது அதிகமாக நல்லமுறையிலே செய்துள்ளார்கள். குடிசைகள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் தீயணைப்பு நிலையங்கள் இல்லை. எனவே குடிசைகள் உள்ள பகுதிகளில் அதிகமாக தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தித் தரவேண்டும். அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு காளிமுத்து அவர்கள் எங்களுடைய தொகுதிக்கு எந்த வசதிகளையும் செய்து தரவில்லை. அவரை மாவட்ட ஆட்சித் தலைவர் அழைக்கவில்லையா ? என்னைப் பொறுத்தவரையில், சில மாதங்களாக அவரை அழைத்துக் கொண்டு தான் இருக்கிறேன். அவரும் வருவதாகச் சொல்கிறார். . ஆனால் இன்னும் வரவில்லை.

காமராஜர் பிறந்த விருதுநகரில் ஒரு நிரந்தரமான குடிநீர்த் திட்டத்தைத் துவக்கி வைக்க அவர் வரவேண்டும். தலைமையிடப் பணியாளர்கள் நல்லமுறையிலே சேவை செய்கிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய வேலைப் பளு காரணமாகவோ என்னவோ, தெரியவில்லை, சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொல்லும்போது கூட, சரியான பதிலைக் கொடுப்பதற்கு அவர்களுக்கு நேரம்கிடைக்காத காரணத்தாலோ என்னவோ சரியான பதில் கொடுப்பதில்லை. உதாரணமாக, டி. ஆர். டி.,—ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள், ஊரக வளர்ச்சித் துறையைப் பற்றி புகார் சொல்வதற்கு நான் நேரிலே சென்றால், அதற்கான உத்தரவுகளைப் போட்டிருக்கிறோமே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறதே, அவர்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லி, எங்களை அனுப்புவதற்குப் பார்க்கின்றார். நாங்கள் எந்த காரணத்திற்காக சென்றிருக்கிறோம், எங்களுடைய குறைகள் என்ன, யார் தவறு செய்திருக்கிறார்கள் என்று கேட்டு, அவர் சரிசெய்திருக்கலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று அரசு விழா அழைப்புகள் பற்றி. 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் தேதி சென்னையில் நடந்த தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் வெள்ளிவிழா அழைப்பிதழ் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் தேதி அன்று தான் கிடைத்தது.

அதேபோன்று சென்ற வருடம் பிப்ரவரி 4-ந்தேதி நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து சென்னை வரும்போது, அவரை வரவேற்க வருவதற்கு அழைப்பிதழ் பிப்ரவரி 4-ந்தேதி தான் எனக்கு விருதுநகரில் கிடைத்தது. கார் பார்க், உட்காருவதற்கு இடம் என்றெல்லாம் படம் போட்டு காட்டப்படுகிறது. ஆனால் அது எப்போது வருகிறது ? இதில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது அரசு இலாக்காக்கள் இரண்டு தினங்களுக்கு முன்பாகவே அழைப்பு கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மானியக்கோரிக்கைகளில் நாங்கள் பேசும்போது அமைச்சர்கள் இடையிடையே குறுக்கிடுவதால் எங்களுக்குப் பேசுகின்ற அந்தக் கோர்வை தடுக்கப்பட்டுவிடுகிறது. ஆகையால் இதையெல்லாம் அவர் கடைசியாக கேட்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மின் வசதி என்னைப் பொறுத்தவரையில், சரியாகச் சில எழுத்துக்களை, சட்டமுன்வடிவில் பார்க்கமுடியவில்லை. எனவே மின் வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று காற்று கூட சரியாக வருவதில்லை. அதையும் சரிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டிலே இலங்கையிலிருந்து வந்த 1-1/4 கோடி தமிழர்களில் 32,000 பேர்களுக்கு முகாம்களில் இடமளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களை சரியான முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அவர்களில் பெரியவர்களுக்கு ரூ. 110-ம், குழந்தைகளுக்கு ரூ. 55-ம் கொடுக்கிறார்கள். அதையும் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று எழுதுபொருள். 1974-லிருந்து ஒரு அச்சகம் இங்கே செயல்படுவதாகவும், அது அச்சகம் நடத்த ஏற்றதான இடமல்ல என்றும் நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு அதை ஏன் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வாடகையாக ரூ. 18,848 கொடுக்கப்படுகிறது என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதை வேறு கட்டடத்திற்கு மாற்ற வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அங்கே விற்பனை வரித்துறை, காவல்துறை, மருத்துவத்துறை, தேர்வாணைக் குழு சம்பந்தப்பட்ட அச்சுப் பணிகளை செய்கிறது. அதையெல்லாம் மாற்றவேண்டும். (மணியடிக்கப் பெற்றது).

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல நான் விரும்புகிறேன். ஏறக்குறைய ரூ. 3,419 கோடிக்கும் அதிகமாக நிதியை இந்த ஆண்டு நாம் செலவழிக்க இருக்கிறோம். இந்த நிதியை தாழ்த்தப்பட்ட, மற்றும் மலைவாழ் மக்களுக்காக ஏறக்குறைய ரூ. 47,89,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1950 ஆம் ஆண்டு நிறைவேறிய அரசியல் சட்டத்தின்படி தாழ்த்தப்பட்ட, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்டிருக்கின்ற இந்த சமுதாயத்தினருடைய முன்னேற்றத்திற்காக 10 ஆண்டு திட்டம் என்று சொல்லி போட்டோம். அனைத்துத் துறைகளிலேயும்



அவர்கள் முன்னேற்றம் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களை மாநில அரசும், மத்திய அரசும் செயல்படுத்தி வந்தாலும்கூட, எதிர்பார்த்த அரசியல் சட்ட நோக்கம் நிறைவேறாத காரணத்தால் தான் இன்று மீண்டும், மீண்டும் 10, 10 ஆண்டுகள் என்று சொல்லி, நாம் அந்தத் திட்டங்களை நீடித்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1-10)

அந்த அளவுக்கு அரசியல் சட்ட நோக்கம் எய்தமுடியாத அளவுக்கு உள்ள நிலையில், இன்றைக்கு நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏறக்குறைய 3,400 கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற இந்த நிதி ஒதுக்கீட்டில் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்காக இருக்கிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு, மொத்த நிதி ஒதுக்கீட்டில் 71-ல் ஒரு பங்காக, ரூபாய் 47 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதி ஒதுக்கீடு மிகவும் போதாது, என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

அறிவிக்கப்பட்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களிலே மிகவும் முக்கியமானது, 5 இலட்சம் வீடுகள் கட்டப் போகிறோம் என்ற அறிவிப்பு ஆகும். அது மிக, மிக வரவேற்கக் கூடிய ஒன்று. இன்று, நம்முடை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலே 4 இலட்சத்திற்கும் அதிகமான வீட்டு மனைகள் வழங்கப்பட்டும், அங்கு வீடு கட்ட முடியாது கஷ்டப்படுகிற ஏழை மக்களின் அவல நிலையைப் போக்க, 5 இலட்சம் வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கட்டப்படுகிறது என்று அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் வீடு கட்ட ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியைத் தவிர போதிய புதிய ஆதாரம் எதையும் அவர்கள் காண்பிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். என்றாலும், அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் ஏற்கனவே இருக்கிற ' தாட்கோ ' மூலமாக, ஆர். எல். இ. ஜி. பி. மூலம், என். ஆர். இ. பி. போன்ற திட்டங்களின் அடிப்படையில், 'அவுசிங் போர்டு' என்ற அடிப்படையில் இன்னும் பல்வேறு நிதி ஸ்தாபனங்களை அணுகி நிதி பெற்று அந்த வீடுகளைக் கட்டப் போகிறோம் என்று அறிவிப்பு செய்து இருக்கிறார்கள். நான் அவர்களைப் பாராட்டுகிறேன். நிச்சயமாக இந்த 5 இலட்சம் வீடுகளை கட்ட முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து இந்த ஆண்டே வீடுகள் கட்டுகிற திட்டம் நிறைவேறுகிற முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஒரு வீட்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் என்று இருப்பது மிக மிகப் போதாத தொகை என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் அதை 10 ஆயிரம் ரூபாயாக ஆக்கலாம் என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே சொல்கிற போது குறிப்பிட்டார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள் வேன்—நடப்பு ஆண்டில் கட்டப்படுகிற ஒவ்வொரு வீட்டிற்கும் 10 ஆயிரம் ரூபாயாக ஒதுக்கீடு செய்து தரவேண்டும். வீட்டினுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதைக் காட்டிலும் கட்டப்படுகிற வீடு பல ஆண்டுகளுக்கு எவ்வித ரிப்பேரும் இல்லாமல் நிரந்தர வீடுகளாக இருப்பதற்கு தொகையை அதிகமாகச் செலவழித்தாலும் பரவாயில்லை. அந்த வகையில் 10 ஆயிரம் ரூபாயாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசுத் துறைகள் எல்லாம் பல்வேறு வசதிகளைச்செய்கிறபோது, அல்லது அரசுத்துறைகளில் நியமனங்கள் கொடுக்கப்படுகின்றபோது, ஜனத்தொகை அடிப் படையில்தான் 18 சதவிகித ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. ஆனால் 1981 ஆம் ஆண்டு இருக்கின்ற 'சென்சஸ்படி' தாழ்த்தப்பட்ட மற்றும் மலை வாழ்மக்கள் ஜனத்தொகை ஏறக்குறைய 19.50 சதவிகிதம் இருக்கிறது. ஆகவே 18 சதவிகிதத்தை 20 சதவிகிதமாக உயர்த்தி இன்றைக்கு இருக்கிற ஜன விகிதாசாரப்படி ஒதுக்கீட்டை அதிகமாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகச் செய்யப்படுகிற பல்வேறு திட்டங்கள் பற்றி அவ்வப்போது அரசுக்கு ஆலோசனை தெரி விப்பதற்கு 'ஸ்டேட் அரிஜன் வெல்பேர் கமிட்டி' என்ற அமைப்பு பல காலங்களாக இருந்து வந்தது. ஏறக்குறைய கடந்த 5 ஆண்டுகளாக அந்தக் கமிட்டி செயல்படவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு சட்ட மன்ற உறுப்பினர்கள் அடங்கிய, Legislature Committee on Scheduled Caste Welfare என்ற கமிட்டி பாராளுமன்றத்திலும் இருக்கிறது. வேறு சில மாநிலங்களிலேயும் இருக்கின்றது. அப்படிப்பட்ட கமிட்டியை அமைக்க மத்திய அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்து இருந்தும் கூட, இதுவரை அதுபற்றி சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை வருத்தத் தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, நான் பணி வோடு கேட்டுக்கொள்வது State Harijan Welfare Committee and State Legislature Committee on Scheduled Caste Welfare என்ற கமிட்டிகளை அமைப்பதற்கு அரசு முனைப்பான நடவடிக்கை களை எடுத்து, இந்த ஆண்டே அந்தக் கமிட்டிகள் செயல்பட முயற்சிக்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.



18 சத விகித நியமனங்கள் எல்லாத் துறைகளிலும் கொடுக் கப்படுகின்றனவா? அரசு அறிவித்த திட்டங்கள் மக்களுக்கு போய்ச் சேருகிறதா என்று கண்டறிவதற்காக மாண்புமிகு முதல மைச்சர் அவர்களுடைய தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு இருக்கிறது. அதற்குக் கீழே பல்வேறு அதிகாரிகள் இருக்கிறார் கள். இருந்தாலும், எனக்குக் கிடைத்து இருக்கிற தகவல்படி, தமிழக அரசின் பல்வேறு துறைகளிலும் எந்த ஒரு துறையிலும் 18 சதவிகிதம் முழுமையாக அமல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இதுவரை கண்டறிய முடியவில்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது என்ன வென்றால், இதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலவரை யறையை நிர்ணயித்து, அந்தக் காலவரையறைக்குள் இந்த 18 சத வீதம் என்பது, தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய பலவேறு இலாக் காக்களிலேயும் அமல் நடத்தப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி அமல்படுத்தப்படவில்லை என்றால், அதற் குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்களில் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என்று ஒரு புகார் இருக்கிறது. ஆகவே நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எல்லா மட்டங்களிலேயும் 18 சதவீத ஒதுக்கீடு கொடுக்கப்படுகின்றபோது போஸ்ட் கிராஜுவேட் கோர்சுக்கும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டு மென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக இன்றைக்கு Special Component Plan-லே பல்வேறு இலாக்காக்களின் மூலமாக 128 கோடி ரூபாயைச் செலவழிக்கப் போவதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைகளின் சார்பாக இந்தத் தொகையைச் செலவழிக்கப்போவ தாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தொகை முழுவதும் செலவழிக்கப்படுகிறதா, அதனுடைய பலன் அந்த மக்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்பதை பற்றிக் கண்டறி வதற்கு இதிலே எந்த வழி வகையும் செய்யப்படவில்லை என்ப தைச்சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த 128 கோடி ரூபாய் தொகையிலே ஏதாவது ஒரு பகுதியை ஒவ்வொரு துறை யிலேயிருந்து பெற்று, ஃபூல்செய்து அதை நிர்வகிக்கக்கூடிய ஒரு பொறுப்பை தாட்கோ அல்லது வேறு புதிய அமைப்பினிடம் கொடுத்து உருப்படியாகச் செய்ய வேண்டுமென்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். ஏற்கனவே Special Central Assistance and Special Component Plan மூலம் நம் முடைய இராமநாதபுரம் மாவட்டத்திலே அச்சங்குளம்

கூட்டுறவு நூற்பு மில் நிறுவப்பட்டு 300 பேர்கள் நிரந்தரமான வருவாயைப்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இப்படிப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளை அமைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக Special Component Pl n-ல் கிடைக்கின்ற நிதியையும், Special Central Assistance-ல் கிடைக்கின்ற நிதியையும், பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற வாரம் பேசுகின்றபொழுது நம்முடைய மரியாதைக் குரிய டெக்ஸ்டைல் அமைச்சரவர்கள் சொன்னார்கள், நூற்பு மில் அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தால் நாம் அமைப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று. ஆனால் பத்திரிகைச் செய்தியில் தொழில்துறை அமைச்சரவர்கள் 3 டெக் ஸ்டைல் மில்களை அமைப்பதற்காக, அனுமதிக்காக மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். Special Compon nt Plan, Spec al Central Assistanc இதன் அடிப்படையிலே பல்வேறு மில்களை பல மாவட்டங்களி லேயும் அமைக்க நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்யப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் சரியாகச் செயல்படுகிறதா என்பதைக்கண்ட றிவதற்காக அரிசன நலத் துறையிலே ஒரு Deputy Director அந்தஸ்திலே, பொருளாதார நிபுணர் ( Economist ) நியமிப் பதற்கு மத்திய அரசு அனுமதித்திருக்கிறது என்று அறிகிறேன். ஆனால் இதுவரைக்கும் அந்த நியமனம் செய்யப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஆனால் சமீபத்தில் அமைச்சரவர்கள் கொடுத் திருக்கின்ற தாழ்த்தப்பட்டோர் நல சம்பந்தப்பட்ட குறிப் புரையிலே, அதற்கு அனுமதித்து இருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் இவ்வளவு ஆண்டுகளாகியும், மத்திய அரசு அனுமதித்தும்கூட, மத்திய அரசு நிதி கொடுத்தும்கூட அந்தப் பதவியை ஏன் நிரப்பவில்லை என்பதுதான் வருத்தமாக இருக் கிறது. இந்த ஆண்டிலேயாவது நீங்கள் அந்தப் பதவியை நிரப்பினால் அதன்மூலமாக நாம் போடுகின்ற திட்டங்களெல்லாம் அந்த மக்களுக்குப் போய்ச்சேருகிறதா என்று பார்ப்பதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நிலையைப் பொறுத்தவரையில் என்னுடைய பகுதி மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டாண் டுக் காலமாக விவசாயமே அங்கே நடைபெறவில்லை. அப்படி யிருக்க, அந்த வறட்சி நிலையைக் கண்டறிவதற்காக நியமிக்கப் பட்ட ஒரு அதிகாரி, வறட்சி இல்லை என்று அரசுக்கு அறிக்கை அனுப்பிவிட்டதாகத் தகவல் தெரிகிறது. அந்த அடிப்படை யில் அங்கே வரிவஜா செய்யாதது மட்டுமல்லாமல், வறட்சி



நிவாரணப் பணிகளைச் செய்வதிலேயும் என்னுடைய பகுதி முழுமையாக விடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நான் மாவட்ட ஆட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்து பேசிய பொழுது, அவர்கள் ஏற்கனவே அந்த அறிக்கையை அரசுக்கு அனுப்பிவிட்டார்கள். இந்த நிலையில் வறட்சித் திட்டங் களை உங்களுக்குக் கொடுத்தால் ஏற்கனவே கொடுத்திருக்கின்ற அறிக்கை தவறு என்று வந்துவிடும் என்று சொன்னார்கள். ஆகவே, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், விவசாயமே ஆரம் பிக்காத கிராமங்கள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றபொழுது எப்படி அந்த அதிகாரி வறட்சி இல்லை அல்லது விளைந்து விட்டது என்று சொல்கிறார்கள் என்பது புரியவில்லை. இதுபற்றி மாவட்ட ஆட்சியரிடம் வேண்டிக்கொண்டதின் பேரில் அவர்கள் ஏற்பாடு செய்ததிற்கிணங்க, மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களும், தாசில்தார் அவர்களும் எனது தொகுதியில் நேரடி யாகக் கிராமங்களைப் பார்வையிட்டு பலயிடங்களில் கடந்த இரண்டாண்டுக் காலமாக விவசாயமே தொடங்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதியிலே Special Remission கொடுப்பதோடு, விவசாயிகளிடமிருந்து கடன்களையும் கட்டாயமாக வசூலிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகளையும் செய்வதற்கு ஆணையிட வேண்டுமென்றும் பணி வோடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

என்னுடைய பகுதியிலே மூத்தனேந்தலில் சோமசுந்தரம் சூப்பர் மில்ஸ் என்று ஒரு மில் இருக்கிறது. அது தனியாருடைய மில்லாக இருந்து, அந்த மில் முதலாளி, அதை நடத்த முடியாமல் 1975ஆம் ஆண்டிலே, மூடிவிட்டார். நம்முடைய அரசாங்கம், 1977-லே பதவிக்கு வந்த உடனே அந்த மில்லை அரசு மில்லாக ஏற்று, கடந்த 10 ஆண்டுகளாக அரசுத் துறையிலே நடத்தி வருகிறார்கள். அப்படி நடத்தி வந்தாலும்கூட 6 மாதத்திற்கு ஒரு தடவையாக அனுமதி வழங்கி, இன்றைக்கு அந்த அனுமதி முடிகின்ற நிலையிலே இருக்கிறது. ஆனால், அந்த மில்லை அரசு ஏற்ற பின்னாலே, ரூ. 10 இலட்சம் அரசு கடனாக கொடுத்திருக்கிறது. அரசு கைக்கு அந்த மில் வந்த பின்னால், அந்த மில் நல்ல முறையிலே, நடைபெற்று, ரூ. 10 இலட்சத்தை வட்டியோடு திருப்பிக் கட்டி, கோடவுனும் கட்டி, ஜெனரேட்டர் மற்றும் புதிய இயந்திரங்களும் வாங்கி, இன்றைக்கு நல்ல முறையிலே இயங்கி வருகிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மீண்டும் அந்த மில்லை அரசு எடுத்துக் கொள்வதா என்ற சூழ்நிலை வந்திருக்கிற காரணத்தால், அந்த மில்லை அரசுத் துறையிலே வைத்துக்கொள்ள வேண்டும், அங்கேயிருக்கிற தொழிலாளர் களை நீங்கள் காப்பாற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றைக்குத் திருபுவனத்தில் இருக்கிற அரசு மருத்துவ மனை பிரதம ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றப் பட்டிருப்பதாக அறிக்கை வந்திருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை அடிப்படையில், ஏறக்குறைய 196 அரசு மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே திருபுவனம் மருத்துவ மனை ஒன்று. ஆனால், அந்த மருத்துவ மனை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றப்படுவதாலே, பலவித, அசௌகரியங்கள் ஏற்படும் என்று அங்குள்ள மக்கள் அஞ்சுகிறார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால், போஸ்ட் மார்ட்டம் பண்ண ஆரம்பச் சுகாதார நிலையத்தில் வசதி கிடையாது என்று சொல்கிறார்கள். அதோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றுகிற டாக்டர்கள் கிராமங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்வதாலே, காலையிலும் மாலையிலும் அங்கே உட்கார்ந்து நோயாளிகளைப் பார்க்க முடியாது ; மாலை நேரத்திலே நோயாளிகளைப் பார்ப்பதில்லை என்று சொல்கிறார்கள். அதனால், அங்குள்ள மக்கள் மத்தியிலே பீதி இருக்கிறது. நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், ஏற்கெனவே இருக்கிற வசதிகள் குறையாமல் இருக்கும்வகையில் ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு ஆட்சேபனை இல்லை. அப்படி இல்லையென்றால் தயவு செய்து அரசின் முடிவை மறு பரிசீலனை செய்யவேண்டும். ஆனால், இருக்கிற வசதிகளைக் கொஞ்சங்கூடக் குறைக்காமல் பார்த்துக்கொள்வது அரசினுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

குடி தண்ணீர் பற்றாக்குறை மிகக் கடுமையாக இருக்கிறது. ட்வாட் போர்ட் மூலம் அமைக்கப்பட்ட பல்வேறு மேல் நிலைத் தொட்டிகள் பல இடங்களில் செயல்படாமல் உள்ளன. எங்களுடைய பகுதியிலே, கொடுமையான நிலைமை என்னவென்றால், வைகை நதியிலிருந்து—பல இடங்களில் ஆழ்கிணறுகள் போட்டு அணையிலிருந்து 40 மைல், 50 மைல் தள்ளியுள்ள கிராமங்களுக்கு நகரங்களுக்கு அங்கிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். ஆனால், கரையிலே இருக்கிற கிராமங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர், கிடைக்கவில்லை. ஏற்கெனவே, தூரத்திலுள்ள கிராமங்கள் அல்லது நகரங்களுக்கு தண்ணீர் அளிக்கின்ற போது, வழியில் இருக்கின்ற கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் தண்ணீர் கொடுக்கப் படுகிறது. அப்படியிருந்துங்கூட, அந்தக் கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படாமல் இருக்கிற நிலைமைகளை மாற்றி, கடுமையான முயற்சியை எடுத்து வழியில் உள்ள கிராமங்களுக்கு குடி தண்ணீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே, நிலையூர் கால்வாய் விஸ்தரிப்பு திட்டம் இருக்கிறது. காலஞ்சென்ற சட்டமன்ற உறுப்பினர் பிச்சை அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள். அதன் அடிப்படையிலே, அரசும் பல்வேறு திட்டங்களைப் போட்டு



மதிப்பீடுகளைச் செய்து, இந்த வருஷமே பார்ட் டு ஸ்கீமில் கொண்டு வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் வரவில்லை. அதற்கு நிதி ஒதுக்கீடு இல்லையென்றாலும் ஏதாவது ஒரு வகையிலே நிதி ஒதுக்கீடு செய்து, நிலையூர் கால்வாய் விஸ்தரிப்பு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் திட்டம் பொறுத்தவரை ஏறக்குறைய (மணியடிக்கப்பெற்றது) 3 குறைபாடுகள் கேரள அரசால் எழுப்பப் பட்டதற்கு இணங்க, அதன் ஆழம் 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 7 ஆண்டுகள் ஆகி விட்டன. அவர்கள் எழுப்பிய ஐயம் எல்லாம் போக்கப்பட்டு, செய்ய வேண்டிய ரிப்பேர்கள் எல்லாம் செய்யப்பட்டு, மீண்டும் அந்தத் தண்ணீர் அளவை உயர்த்த வேண்டுமென்று கேட்டபொழுது, கேரள அரசு இந்த 136 அடியிலேயே நிறுத்த வேண்டுமென்று கூறுகிறார்கள் என்று அறிக்கையிலே சொல்லப் படுகிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு கேரள முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு இதுவரையில் பதில் வரவில்லையென்று சொல்கிறார்கள். நம்முடைய கருத்துக்கு மத்திய நீர்வள கமிஷன் தலைவர் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். வருகின்ற ஆண்டாவது 136 அடியை 152 அடியாக தண்ணீரை உயர்த்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பகுதியிலே அடிக் குழாய்கள் அதிகமாக அமைக்க வேண்டும். ரிங்வெல் என்று இங்கு தலைமைச் செயலாளர் அவர்களும் அரசு அதிகாரிகளும் சொல்கிறார்கள். இது மணற்பாங்கான பகுதிகளுக்குத்தான் பொருத்தமானது. மற்ற இடங்களுக்கு பொருத்தமாக இருக்காது. ஆகவே அடிக்குழாய்களை அதிகமாக கொடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அவையிலே பேச நேரம் ஒதுக்கியதற்கு இந்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டுக்கான மொத்த வரவு-செலவு திட்டப்படி ரூ. 3419,11,87,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் முன்மொழியப்பட்ட சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் தங்களுடைய கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே வரவு-செலவு திட்ட அடிப்படையிலே நாள்தோறும் எடுத்து வைக்கப்பட்ட மானிய கோரிக்கைக்கு ஒட்டுமொத்தமாக இன்றைக்கு ஒருசேர நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்கின்ற முறையிலேதான் இறுதி நாளாக இந்நாள் அமைகின்றது. திருவிழா பாங்கிலே நாம் சொல்லவேண்டுமென்றால் இது விடையாற்றி சாற்றுப்படி என்றும் நாம் சொல்ல வேண்டும். விடையாற்றி விழா என்றும் எடுத்துச் சொல்வார்கள். ஆக அந்த விழாவாகத்தான் இன்றைய நாள் அமைந்திருக்கிறது.

ஆகவே, ஒவ்வொரு நாள் விவாதத்திலேயும், அந்தந்தத் துறை பற்றிய மானியக கோரிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லிய நிலையில் அந்தந்த துறைக்குரிய அமைச்சர் பெருமான் அந்தந்த துறையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், எடுக்கப்பட இருக்கின்ற நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்தந்த துறைகளில் இருக்கின்ற குறைகளையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குற்றங்களை உணர்த்தியிருக்கிறார்கள். ஆகவே குறைகள் நீக்கப்படவேண்டும் என்பதும் குற்றங்கள் களையப்பட வேண்டும் என்பதும் படிப்படியாக குற்றங்கள் எதிர் காலத்தில் நிகழாத அளவுக்கு பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் எடுத்துச் சொல்லிய அத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டியவை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சனைகளை எடுத்துச் சொன்னாலும், அந்தப் பிரச்சனைகளிலே பலவற்றிற்கு அந்தந்த மானியக் கோரிக்கைகள் வந்தபோது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவற்றிற்கு ஏற்ற விடைகளை ஓரளவிற்கு தந்திருக்கிறார்கள் என்றாலும் அதிலே விடுபட்ட தன்மைகள் இருப்பதினால் எதிர்காலத்திலே கவன ஈர்ப்பு தீர்மானங்கள் மூலமாகவும் கேள்விகளுக்கு பதிலுறை தருகின்ற வாய்ப்புகளின் வாயிலாகவும் அவற்றிற்கு சிறப்பான விளக்கங்கள் கிடைக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அவற்றிற்கும் விளக்கங்கள் தர நான் முயல்வேனானால் நேரம் இடம் தராது என்ற காரணத்தினால் குறிப்பிட்ட ஒரு சிலவற்றிற்கு மட்டும் இங்கே நான் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றபோது வரவு—செலவு திட்டத்திலே சாதாரணமாக ஒதுக்கப்படுகின்ற அத்தகைய நிதி அந்தந்த துறைச்கு செலவழிக்கப்படாமல் ஆண்டு இறுதியிலே திருப்பி செலுத்தப்படுகின்ற அளவுக்கு சேமிப்பு செய்யப்பட்டு அது திருப்பிச் செலுத்தப்படுகிறது. அந்த நிலை கூடாது என்று எடுத்துச் சொன்னார்கள். கூடுமான வரையில் ஒதுக்கிடு செய்யப்படுகின்ற அத்தகைய நிதி எந்த நோக்கத்தின் அடிப்படையில், எந்தத் துறைக்கு, எந்த வகைக்கு, எந்த வழிக்கு செலவழிக்கவேண்டும் என்று நாம் திட்டமிடுகின்றோமோ அந்த நிலைகளுக்கு செலவழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலே தான் நாம் ஒதுக்கிடு செய்கிறோம். ஆனால் எதிர்பாராத சில சூழ்நிலைகள் இருப்பதன் காரணமாகவும், அவற்றை நிறைவேற்றுவதற்கு முடியாத அளவுக்கு சிலபல இடங்களில் கட்டிடங்கள் கட்டுவது அல்லது இடத்தை தேர்ந்தெடுப்பது என்ற இடங்களில், இடம் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுவதினாலும், அப்படியே இடத்தை தேர்ந்தெடுக்கின்றபோது அந்த இடத்தை கொடுக்காத அளவுக்கு வழக்கு மன்றங்களுக்குச் சென்று தடையாணை பெற்றுவிடுவதன்



மூலமாகவும் வேறு பல நிலங்களில் ஒப்பந்தக்காரர்கள், குறிப்பிட்ட நேரத்தில் ஒப்பந்தங்களை முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாகவும் வேறு பல காரணங்கள், காரணமாகவும் தள்ளிப்போடப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம், மறுபடி திருப்பி அளிக்கவேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. கூடுமான வரையில் திருப்பியளிக்கப்படாத அளவுக்கு அந்தத்திட்டத்தினுடைய அடிப்படையில் நிறைவேற்றி வைக்கப்பட்டால் தான், அரசுக்கும் நல்லது, பொது மக்களுக்கும் நல்லது என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1·30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டத்தை ஓராண்டு அல்லது இரண்டாண்டுககாலம் தள்ளிப்போட்டால் அதன் காரணமாக மேற்கொண்டு 25 சதவீதம் அல்லது 30 சதவீதம் கூடுதலாக செலவழிக்கவேண்டிய நெருக்கடி இந்த அரசுக்குத்தான் ஏற்படுகிறது. அந்தந்த ஆண்டிலேயே செலவழிக்கிற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால் அரசினுடைய பொது நிதிநிலை பங்கப்படாமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. சில சமயங்களில் சேமிப்பு ஏற்படுகிறது. ஆனால் சிலபல துறைகளில் நாம் ஒதுக்கீடு செய்தது போதாது என்ற காரணத்தால் கூடுதலாக ஒதுக்கீடு செய்யவேண்டிய இன்றியமையாத நிலைமை ஏற்பட்டு சிலபல திட்டங்களை விரிவாக்கம் செய்வதன் காரணத்தால் கூடுதலாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய இன்றியமையாத நிலைமை ஏற்படுவதன் காரணத்தால் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு அதற்குப் பிறகு இங்கே துணை மானியக் கோரிக்கைகளை அவையின் முன்பு கொண்டுவந்து முதல் துணை மானியக் கோரிக்கை, இரண்டாவது துணை மானியக் கோரிக்கை, மூன்றாவது துணை மானியக் கோரிக்கை என்று கூடுதலாக்கி பணத்தைப் பெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கடைசியில் ஒட்டு மொத்தமாக நாம் பார்த்தால் முந்தைய ஆண்டை விட அடுத்த ஆண்டை நாம் காண்கிறபோது சிலவற்றில் சேமிப்புகள் வந்தாலும், சேமிப்புகளை மீறி நாம் செலவுகள் செய்திருக்கிறோம் என்றுதான் கணக்கு வருகிறது. ஒதுக்கபபட்டிருக்கிற மொத்தத் தொகைக்கு கீழே போயிற்று என்ற வரலாறு இல்லை. சேமிப்பு அவசியம் என்று மத்திய அரசைப் பொறுத்து எடுத்துக் கொண்டாலும் சரி, மாநில அரசைப் பொறுத்து எடுத்துக் கொண்டாலும் சரி, ஜனநாயக நாட்டினுடைய ஆட்சி முறையில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி நான் பொது விவாதத்திற்கு பதிலுரை அளிக்கும்போது விரிவாக எடுத்துச் சொன்னேன். அதற்கான காரண விளக்கங்களை எல்லாம் நான் சுட்டிக்காட்டினேன். ஃபைனான்ஷியல் எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகையில் இருந்து ஒருநீண்ட கட்டுரையை எடுத்துத் தெரிவித்து, பிறமாநிலங்களை

எல்லாம் ஒப்பிட்டுக் காட்டி, அங்கே இருக்கிற சூழ்நிலைகளை எல்லாம் எடுத்துக்காட்டி ஒவ்வொரு துறையிலும் 30 சதவீதம், 40 சதவீதம், 50 சதவீதம் என்று சேமிப்பு செய்கிறார்கள் என்றும் கடைசியில் செலவு செய்ய முடியாமல்—அதாவது ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் செலவு செய்ய ஆரம்பித்து மார்ச் 31ஆம் தேதிக்குள் செலவு செய்ய முடியாமல்—போய் அவற்றைத் திருப்பித் தந்துவிடுகிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறேன். அதற்கான காரணங்களையும் விளக்கங்களையும் சொல்லி அந்த கட்டுரையில் மிகத் தெளிவாக ஒப்பிட்டுச் சொல்லியிருந்தார்கள். இவைகளை எல்லாம் படிக்கிறபோது இந்த ஒதுக்கீட்டைத் திருப்பித் தருகிற வகையில் பாராட்டத்தக்க வகையில்தான் அதாவது குறைவாகத்தான் திருப்பித் தருகின்ற வகையில் நம்முடைய மாநிலம் அமைந்திருக்கிறது என்றாலும்—அதாவது பொதுவாக 10 சதவீதம்தான் திருப்பிச் செலுத்துகிற அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் சேமிப்பு ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்றாலும் அதிலே நான் திருப்தி அடைகிறேன் என்று சொல்லவில்லை. அதை இன்னும் எந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் குறைக்க வேண்டிய முயற்சியில் அரசினுடைய பல்வேறு துறைகள் ஈடுபடும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சி நிலைமை பற்றி இந்த அவையில் உள்ள பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டினார்கள். அதுபற்றி எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கைகளைப் பற்றி நான் ஏற்கெனவே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். குடிநீர் வசதியைப் பொறுத்தவரையிலும் சிற்றூர்களிலும், பேரூர்களிலும், நகரங்களிலும், தடைப்படாத அளவுக்குத் குடிதண்ணீர் கிடைக்கவேண்டும் என்ற முறையில் வழங்குவதற்கு பணம் ஒதுக்கீடு செய்து கூடுமான வரையில் அவற்றை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறோம். குடிதண்ணீர் வசதியே இல்லாத கிராமங்கள் இல்லை என்ற சூழ்நிலை ஏற்படத்தக்க அளவுக்கு ஆண்டுக்காண்டு திட்டமிட்டு, திட்டமிட்டு படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் 80 கோடி என்றும் 90 கோடி என்றும் 100 கோடி என்றும் ஒதுக்கி இந்த ஆண்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் குடிநீர் வசதி வாய்ப்புகள் செய்வதற்காக 127 கோடியே 14 இலட்சம் ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் ஏற்கெனவே குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிற இடங்களில்கூட குடிதண்ணீர் கிடைக்காத அளவுக்கு கிணறுகளில் தண்ணீர் மட்டம் கீழே போய்விட்டதன் காரணத்தால் அவற்றை எல்லாம் மேலே கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். கிணறுகளை ஆழப்படுத்தவேண்டி இருக்கிறது. ஆழ்துளைக் கிணறுகளையும் இன்னும் கொஞ்சம் ஆழப்படுத்தவேண்டி இருக்கிறது. சிலபல இடங்களில் கொஞ்சம் கூடுதலாக ஆழ்துளைக் கிணறுகள் போடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சில இடங்களில் தண்ணீர் வசதி இல்லை என்ற நிலைமை ஏற்படுகிறது. அதாவது குழாய்கள் இருந்தாலும், மற்ற வசதிகள் இருந்தாலும்



அண்மையில் எங்கே தண்ணீர் கிடைக்கிறதோ அங்கே இருந்து லாரிகளின் மூலமாகவும், வேறுபல வசதிகளிலும் கொண்டு வந்து நான்கு நாட்களுக்கு, 3 நாட்களுக்கு ஒரு தடவையாவது தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்ய, இந்த நெருக்கடியான நிலைமையில் உரிய ஏற்பாடுகள் செய்ய அண்மையில் தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி அதிலே முடிவெடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு 13 கோடி ரூபாயில் உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. 127 கோடியே 14 லட்சத்தைத் தவிர இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செலவழிப்பதற்கு மட்டும் 13 கோடி ரூபாயை செலவழித்துக் கொள்ளலாம் என்றும் அந்தந்த மாவட்டத்தினுடைய தன்மைகளுக்கு ஏற்ப செலவழித்துக் கொள்ளலாம் என்றும் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. மேற்கொண்டும் வறட்சி நிலைமைகள் பரவலாக இருக்கின்ற சூழ்நிலையை கருதித்தான் நேற்றும், இன்றும் நான் காலையிலே எடுத்துச் சொன்னதற்கு இணங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டை கூட்டியிருக்கிறார்கள். அதிலே வறட்சி பற்றி யோசிக்கப்படும்.

அதுமட்டும் அல்லாமல் ஆங்காங்கு இருக்கிற நிலவரி வஜா மற்றவைகளைப் பற்றி எல்லாம் சிந்தித்து செயலாற்றவும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் நிவாரணப் பணிகளை எப்படி எல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்றும் பல வகைகளிலே ஆலோசனைகளை கேட்க இருக்கிறார்கள். அவைகளைப் பெற்று அந்த முடிவுகளின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டு, முறைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். இதிலே விரைவு காட்டப்பட வேண்டும் என்றும், காலத்தாழ்வு ஏற்படுத்தக்கூடாது என்றும், அப்படி காலத்தாழ்வு ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டால், மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகி பெரும் துன்பத்திற்கு ஆளாக வேண்டிய நெருக்கடி ஏற்படும் என்றும் சொன்னார்கள். அவற்றை எல்லாம் இந்த அரசு மனத்திலே வைத்து அதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள், அந்த திட்டங்களை எடுத்துக் கொள்வதற்கும், தக்கபடி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் உறுதுணையாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் இராமநாதபுரம் கலவரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்களும் குறிப்பிட்டார்கள். அது வருந்தத் தக்க, வேண்டத்தகாத கலவரம் என்பதை அன்றைக்கே மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள் கூட விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொன்னார்கள். நானும் அன்றைக்குப் பதில் சொல்லுகிறபோது, தமிழகத்தைப்

பொறுத்த வரையில் பொறவுடைமை என்பது நீண்ட நெடுங்காலமாக காப்பாற்றப்பட்டு வருகின்ற ஒன்று. மத மாச்சரியங்கள் காரணமாகவோ, சமய மாச்சரியங்கள் காரணமாகவோ கலவரங்கள் ஏற்படுவது போன்றவை நீண்ட நெடுங்காலமாக இல்லாமல், காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்ற ஒன்று. ஆனால் குறிப்பிட்ட சிலபல இடங்களிலே அந்த மாச்சரியங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டும் என்பதையும் அதைப்பற்றிய முறையீடுகளையும் எல்லாம் அந்தப் பகுதி மக்கள் தெளிவாக தந்திருக்கிறார்கள்.

அவற்றின்மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். மேல் நிலையிலே உள்ள காவல் துறை அதிகாரிகளும் மண்டல அளவிலே உள்ள காவல் துறை அதிகாரிகளும், மாவட்ட அளவிலே உள்ள காவல் துறை அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதிலே தக்க கவனம் எடுத்து மீண்டும் கலவரம் மூளாத அளவுக்கும், பாதிக்கப்பட்டவர்களில் யார் யார் அந்தக் கலவரத்திற்கும், சேதம் ஏற்படுத்துவதற்கும் காரணமாக இருந்தார்களோ அவர்களையெல்லாம் கண்டு பிடிக்கவும் கண்டு பிடித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவும் சொல்லியிருக்கிறார்கள். அங்கு வாழுகின்ற மக்கள் இடத்திலும், மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்களிடத்திலும், மாண்புமிகு முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த மேலப்பாளையம் உறுப்பினரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அதற்கான புள்ளி விவரங்களையும் மற்றவைகளையும் தாருங்கள், குறிப்பிட்டு எடுத்துச் சொல்வீர்களேயானால், அதை வைத்துக் கொண்டு சிலபல நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன். அவர்களும் சிலவற்றை தந்திருக்கிறார்கள். மேலும் சிலபல தகவல்களை தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றின் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆவண காப்பகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆவண காப்பகம் என்பது மிகவும் போற்றி காப்பாற்றப்பட வேண்டிய ஒன்று. அதிலே சிலபல குறைபாடுகள் இருந்தால் அது கவனமாக கவனிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். நம்முடைய தமிழகத்தில் இருக்கிற ஆவணக் காப்பகம் மிகமிக தலை சிறந்த ஒன்றாகவும், மிகமிக போற்றப்படுகிற ஒன்றாகவும், நீண்ட நெடுங்காலமாக கிழக்கிந்தியக் கம்பெனி வருவதற்கு முன்னாலிருந்தே, பலவேறு சுவடிகளும் பல ஆவணங்களும் காப்பாற்றப்பட்டு வருகின்றன பல்வேறு,



ஆராய்ச்சி மாணவர்களுக்கு மிகச் சிறப்பாக பயன்படுகிற அளவுக்கு அமைந்திருக்கிற ஒன்று. அந்த ஆவணக் காப்பகம் மிகச் சிறப்பாக காப்பாற்றப்பட வேண்டும் என்பதும், மாவட்டத்திற்கு மாவட்டம் அமைந்திருக்கின்ற ஆவணக் காப்பகங்களும் சிறப்பாக அமைய வேண்டும் என்பதும் தான் எண்ணங்கள். சில பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவை முறையாக கவனிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தங்கத் தாமரை கொடுத்ததைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். உலகத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்படுகின்ற அந்த விழாவில் 2 கிலோ பெருமானம் உள்ள தங்கத் தாமரை ஒன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே பரிசாக வழங்கினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை அரசுக்கு அளித்து, அரும்பொருள் காட்சி அகத்திலே காட்சிக்காக வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதை அரும்பொருள் காட்சியகத்திலே ஒரு பாதுகாப்பான இடத்தில் யாரும் திருட முடியாத இடத்தில் வைக்க வேண்டும் என்று இருக்கிறோம். இரண்டு கிலோ என்று சொல்லிவிட்டால் ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய் பெருமானம் உள்ளது. இப்பொது எப்படி வரதராஜப் பெருமாள் கோவில் நகைகள் மீது மிகவும் கண்ணும் கருத்தும் அதிகமாக வைத்து நேற்றைக்கு முன்னாள், அதற்கும் முதல்நாள், பெரிய விழா அங்கு நடைபெற்றிருக்கிறது. அந்த விழாவிலே சாற்றுப்படி எல்லாம் செய்திருக்கிறார்கள். அங்கிருக்கிற நகைகளையெல்லாம் இன்னின்ன நகைகள், இவ்வளவு நகைகள் என்று எடுத்து சாற்றி காட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-40)

அப்படி காட்டியவர்கள் அதைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல், வெளி மதிலைத் தாண்டி குதிக்க முடியாத நிலையிருந்தும், இரண்டு பேர்கள் உள்ளேயே ஒளிந்திருக்கிறார்கள் என்றும் இரவு முழுவதும் அங்கேயிருந்து மற்றவர்கள் எல்லாம் வெளியே போனதற்குப் பிறகு சிறு மதிலைத் தாண்டி குதித்து அதைத் திருடியிருக்கிறார்கள் என்றெல்லாம் கணக்கு வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட அளவிற்கு இல்லாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அகவே அதைத் தந்துவிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசு பொறுப்பை ஏற்றதற்கு முன்னாலே, அவர்கள் கழகத்தில் ஈடுபட்டு கொண்டிருந்த போது அதே மதுரை மாநகரத்தில் மதுரை முத்து அவர்கள் தங்க வாளை கொடுத்த போது கூட, அந்தத் தங்க வாளை பொது மக்களுடைய நன்மைக்காக பல தடவை ஏலம் விட்டு வந்த பணத்தை தந்து, கடைசியில் அதையும் தந்து விட்டார்கள். ஆகவே அவர்களிடத்தில் தருகிற எந்தப் பெரும் பொருளையும்

வைத்துக் கொள்கிற நோக்கமுடையவர்கள் அல்ல. அவர்கள் அதை பயன்படுத்துபவரும் அல்ல. அதனால் வைத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணுபவரும் அல்ல. கொடுத்து விடுகிற நோக்கத்தைத்தான் பலதடவை கடைபிடித்து வருகிறார்கள். இந்தத்தடவையும் கொடுத்து விட்டார்கள் என்பதை குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு பிரச்சனை மாண்புமிகு, உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் சுவாமிமலை யானை பற்றி எழுப்பிய பிரச்சனை. அது ஒரு பெரிய யானை போல பிரச்சாரமாகிற தன்மைகள் வந்திருக்கின்றன. செய்தி கேளவிப்பட்ட உடன் தகவல் கேட்பதில் தவறில்லை. இது உண்மையா, தவறா என்று எடுத்துச்சொல்லும்படி கேட்பதின் தவறில்லை. ஆனால் விளக்கத்திற்குப் பிறகு அதைக் குற்றச்சாட்டாக சொவது அவ்வளவு சரியல்ல. ஆகவே திரும்பத்திரும்ப அவருக்கு விளக்கங்கள் தரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏற்கெனவே யானை காணாமல் போய்விட்டது என்று சொன்னார்கள். நான் முதலில் சொன்னேன். அங்கே அதுபற்றி புகார்கள் எதுவும் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்பட்டால்தான் அதுபற்றி விசாரித்து, அது காணாமல் போயிற்றா என்பதை கண்டு பிடிக்க முடியும் என்று நான் எடுத்துச் சொன்னேன். அந்தக் கோவிலுக்கு 1977ஆம் ஆண்டிற்கு பிறகு யானையே இல்லை யென்றும், 1977ஆம் ஆண்டில் அங்கேயிருந்த யானை ஏலம் விடப்பட்டது என்றும், ஆகவே யானை இல்லாத போது காணாமல் போக வழியில்லையென்றும் சொன்னேன். இருக்கிற நிலைமைகளை விளக்குகிற போது அதை ஏற்றுச்கொள்ள வேண்டும். அதுதான் நியாயமும் கூட. மேலும் மேலும் குற்றச்சாட்டுகளைச் சொல்வது உறுப்பினர்களுக்கு அழகும் அல்ல. பல்வேறு நேரங்களில் உறுப்பினர்களும், அமைச்சர்களும் தவறாகவோ, அறிந்தோ அறியாமலோ, கொடுத்ததை வைத்து தவறாகச் சொல்லி விட்டோம் என்றால், அப்படி சொன்னதற்கு வருந்துகிறோம் என்று நாங்கள் கூட சொல்கிறோம். அப்படி சொன்னதற்கு வருந்துகிறோம், அதை இப்படி திருத்திக்சொள்ள வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் தகவல் கேட்பது தவறல்ல. ஆனால் திருப்பித்திருப்பி குற்றச்சாட்டாக \ஆக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இங்கே ஏலம் விடப்பட்டது என்றால், அதிலே எதோ மர்மம் இருப்பதாக நினைத்துக் கொண்டு, ஏப்படி ஏலம் விட்டீர்கள், யாருக்கு ஏலம் விட்டீர்கள், எந்தச் சூழ்நிலையில் விட்டீர்கள் என்றும், அதில் ஏதோ இருப்பதாகவும் சொன்னார்கள்.

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலுக்கு 1952ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பொறையார் திரு, வீரப்ப பிள்ளை என்பவர் பெண் யானை ஒன்றினை உபயமாக கொடுத்துள்ளார்.



மேற்படி யானை சில சமயங்களில் கட்டுக்கடங்காததின் காரணமாக அதை ஆணையர் உத்தரவு 17–4–1970 மூலம் பொது ஏலம் மூலம் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அப்போது ஏலம் விடுவதற்கு நோட்டீஸ் விடப்பட்டும்கூட, 23–5–1970ஆம் தேதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டும், ஏலம் நடைபெறாததால் யானையை விற்பனை செய்யவில்லை.

பின்னர் கட்டுக்கடங்காத யானை குறித்து மாவுத்தர்கள் சமாளித்து கொண்டே வந்தார்கள். அந்த யானை குறித்து கால்நடை மருத்துவர் சான்று பெற்று மீண்டும் பொது ஏலம் மூலம் விற்பனை செய்ய ஆணையர் அனுமதிக்காக மனுசெய்து, மறுபடியும் 16–7–1977 உத்தரவு மூலம் பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது.

யானையை பொது ஏலத்தில் விற்பனை செய்ய 30–7–1977 நாளன்று விளம்பரம் செய்யப்பட்டு பொது ஏல விற்பனை நடைபெற்றுளளது. நாகர்கோவில் கிருஷ்ணன் கோவிலைச் சேர்ந்த வன ஒப்பந்தக்காரர் திரு வி. ஏ. கோதண்ட ராமராஜா என்பவர் பொது ஏலத்தில் அதிகத்தொகை கேட்டு யானையை 21,000 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். அந்த அளவிற்கு விற்பனை செய்யப்பட்டது. பொது ஏல விற்பனை ஆணையர் உத்தரவு 4–8–1977-ல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி யானை அதற்கு முன்னால் திருக்கோவில் மின் பணியாளர் ஒருவரை கீழே தள்ளி மிதித்து தொடை எலும்பு முறிந்து விட்டதாகவும், இதுபோன்று தொந்தரவு கொடுத்ததால் அனுமதி பெற்று அது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதே போல சுவாமிமலை பஜாரில் முஸ்லீம் ஒருவரை அந்த யானை மிதித்து விட்டதால், பாதிக்கப்பட்டவர் வைத்திய செலவிற்காக 25 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு கோரி கும்பகோணம் சப்-கோர்ட்டில் வழக்கு ஒன்று தொடுத்தார். வழக்கு நிரூபணம் ஆகவில்லை என்று சொல்லி, **1981-ஆம்** ஆண்டு சூலை திங்கள் 31-ம் நாளிலேதான் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. யானை விற்பனை செய்யப்பட்ட தொகையை வைத்து வேறு ஒரு யானையை வாங்கவேண்டும் என்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலே, அது வங்கியிலே முதலீடு செய்யப்பட்டு, தற்போது அதனுடைய முதல், வட்டி எல்லாம் சேர்த்து 42 ஆயிரம் ரூபாயாக பத்திரமாக இருக்கிறது என்பதை மட்டும் இப்போதுதான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மாநகராட்சிகள் தேர்தல்கள் நடைபெற வேண்டுமென்ற கருத்தை பலரும் வலியுறுத்தினார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்களும் வலியுறுத்தினார்கள். உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எல்லா வகையிலேயும், எல்லாக் கட்டங்களிலேயும் நடந்து முடிந்ததற்குப் பிறகு மாநகராட்சி மன்றத் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதுதான் அரசினுடைய

நோக்கம். இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கான முன்னேற்பாடுகள் எல்லாம் விரைவிலே நடந்து முடிந்ததற்குப் பிறகு, தேர்தல்கள் நடக்கும். மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும் 1978-லே ஒரு முறை தேர்தல் நடந்து, மறுபடியும் இப்போது நடக்கக் கூடிய காலம் கடந்து நடைபெறாமல் இருக்கிறது. 3 மாநகராட்சிகளுடைய தேர்தல்கள் நடைபெறத்தான் வேண்டும். மாநகராட்சி மன்றத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் விரைவாக நடத்தியதற்குப் பிறகு, இந்த 3 மாநகராட்சிகடைய தேர்பல்களை நடத்தினால் தான் நல்லது—அதிலே யார் வருகிறார்கள் என்பதைப் பற்றிக்கூட அல்ல, பொதுமக்களோடு தொடர்பு கொண்டவர்கள் ஆங்காங்கு இருக்கிறவர்கள் கவுன்சிலாகளாக வருகின்ற சூழ்நிலையும் மற்ற நிலைமைகளும் ஏற்பட்டால் நான் முன்பே எடுத்துச் சொல்லியது மாதிரி . அதிகாரிகளோடு சேர்ந்து பணியாற்றுகிற அத்தயை சூழ்நிலைகளில், பொது மக்களுக்கு வசதி வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கு உறுதுணையாக அமையும் என்ற நோக்கத்திலேதான். சொல்சிறேன் ஆனால் இது தள்ளிப் போடப்படவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. விரைவிலே நடத்த வேண்டும் என்ற எண்ணம்தான் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றை மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள். பினாமி நிலபட்டா தருகின்ற அத்தகைய நிலைமைகளைச் சொல்லி, திருச்சிக்குப் பக்கத்திலே இருக்கிற தன்மையைச் சொல்லி, அரசுக்குச் சொந்தமான அத்தகைய நிலத்தை னியார் பினாமியாக எடுத்துக் கொண்டு பட்டா போட்டு அதை விற்பனை செய்து கொண்டு வருகிறார்கள் என்றும். அதைக் கையகப்படுத்தி, தங்களுக்கு உரிமையாக்கிக்கொண்டு, பல லட்சக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். அதைப் பற்றிய முறையீடுகள் கூட அங்கே இருப்பவர்களிடமிருந்து எனக்கு தரப்பட்டு இருக்கிறது. உள்ளபடியே அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்த ஆயிரம் ஏக்கர் நிலத்தை, பினாமியாக உள்ளவர்கள் பட்டா போட்டு விற்கிறார்கள் என்றால், அது உள்ளபடியே கொடுமையிலும் கொடுமைதான். ஆகவே அவர்கள் சம்பாதிப்பதற்கு அரசாங்கத்தினுடைய நிலத்தைப் பட்டா போட்டு விற்கிற அத்தகைய நிலைமை தவறு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆகவே தனிப்பட்டவர்களிடத்திலேயிருந்து கையகப்படுத்துவது, தனிப்பட்டவர்களிடத்திலேயிருந்து வாங்குவது பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. அரசுக்கு சொந்தமான நிலத்தை தங்களுக்கு சொந்தமானதாக ஆக்கிக்கொண்டு, சில பேர்களிடத்திலே விற்பதும், சில பேர்களிடத்திலே வாங்குவதும் சில பேர்களிடத்திலே அதை வாங்கி, ஏராளமான விலைக்கு விற்பதும் என்பது, நடைமுறைக்கும், சட்டத்திற்கும், நீதிக்கும் ஒத்து வருவது அல்ல. அதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதைப் பற்றி விசாரித்து [illegible] அரசு முயலும் என்பதை தஇந் தாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிடுகிறபோது. இலங்கைத் தமிழர்களைப்பற்றி, ஈழ விடுதலையைப் பற்றி ஈழ விடுதலைப் புலிகளிடத்திலே உள்ள சச்சரவுகளைப் பற்றி—சச்சரவுகள் அங்கேயும் இருக்கின்றன, இங்கேயும் இருக்கின்றன—சில பல கலவரங்கள், சிலபல வன்முறைச் செயல்கள் ஏற்பட்டது பற்றி, மிக்க வேதனையோடும் வருத்தத்தோடும் இங்கே இருக்கிற பலர் உணர்ந்து சொல்லியிருக்கிறார்கள். அங்கே உள்ள விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாக இருந்து, ஈழத்திலே வாழ்கின்ற தமிழர்கள் அத்தனை பேர்களும் ஒருமைப்பாட்டு உணர்வோடு இருந்து, ஆக, ஈழத்திலே வாழ்கின்ற குறைந்த சிறுபான்மையினராக இருக்கின்றவர்கள் அவ்வளவு வாழ்வு உரிமைகளைப் பெற்று, அவர்கள் அங்கே வியாபாரம் செய்கிற உரிமை, தொழில் நடத்துகிற உரிமை, மொழி உரிமை, வேலை பார்க்கிற உரிமை, ஆகிய எல்லா உரிமைகளையும், ஒரு நாட்டிலே பெற வேண்டிய உரிமைகள் எல்லாவற்றையும் பெற்று, நிம்மதியாக வாழவேண்டும் என்ற நோக்கத்தைத்தான் எல்லோரும் அடிப்படையாக வைத்து இருக்கிறோம். ஏற்கனவே பிரச்சனைகள் வந்து விவாதிக்கப்பட்டபோதும் சரி, அனைத்துக் கட்சிகளுடைய மாநாட்டைக் கூட்டி, எல்லோருடைய கருத்துக்களை ஆராய்ந்த நிலையிலேயும்சரி, மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் எடுத்துத்தெரிவித்த கருத்திலேதான் இருக்கிறோம். இந்தப் பிரச்சனை அரசியல் அடிப்படையிலே தீர்க்கப்படவேண்டும் என்பதும், பேச்சு வார்த்தை மூலமாகத்தான் தீர்க்கப்பட வேண்டும் என்பதும், ஆகவே இப்படிப்பட்ட திட்டத்தைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்றும் நாம் டிக்டேட் பண்ணிச் சொல்வதற்கு ஏற்ற அத்தகைய நிலைமைகள் இல்லை என்றும், அங்கே இருப்பவர்கள் தங்களுக்குள்ளாகவே ஒரு உடன்பாட்டுக்கு வந்து, அந்த உரிமைகளை எல்லாம் பெறத்தக்க அளவிற்கு நிலைமை ஏற்படவேண்டும் என்பதுதான் எல்லோருடைய நோக்கம் என்பதை சொல்லியிருக்கிறோம். ஆகவே அந்த நாட்டை நாம் பார்த்து, இரண்டாகப் பிரிப்பதும் அல்லது ஈழத்தைத் தனியாக ஆக்குவதும், அதை வற்புறுத்துகிற கொள்கையை மத்திய அரசு கொள்ளவில்லை, மாநில அரசும் கொள்ளவில்லை, பல்வேறு அரசியல் கட்சிகளும் அதைக் கொள்ளவில்லை, வற்புறுத்தவும் இல்லை. ஆனால் அங்கு அவர்களுக்கு நிலையான வாழ்வு ஏற்படவேண்டும் என்பதை எல்லோரும் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இந்த நிலையில் அங்கே இருக்கிற தமிழர்கள அத்தனை பேர்களும் ஒட்டுமொத்தமாக ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதிலே கவனம் செலுத்துகிறோம். ஆனால் ஒற்றுமைக்கு எதிராக, எதிராளிகளுக்கு சிங்கள வெறியர்களுக்கு, ஆக அவர்களை அடக்கி ஒடுக்கவேண்டும் என்று இருக்கிற இலங்கையினுடைய அதிபர் ஜெயவர்த்தனா அவர்களுக்கு அதிக ஊக்கம் தருகின்ற அளவிற்கு, விடுதலைப் புலிகள் ஒருவருக்கு ஒருவர் தாக்கிக் கொண்டு, 250 பேர்களுக்கு மேலே இறந்துவிட்டார்கள் என்றும், அதனுடைய தலைவர்களை எல்லாம் கொன்றுவிட்டார்கள் என்று எல்லாம் வருகிற செய்திகள் உள்ளபடியே நமக்கு எல்லாம் வருந்தத்தக்க ஒன்று.

(பிற்பகல் 1–50)

அது இங்கேயும் ஓரளவுக்கு சலசலப்பு வந்து, இங்கேயும் சூழ்நிலையை கெடுத்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிற அளவுக்கு செய்திகள் வந்ததைப்பற்றித்தான் இங்கே சிலபேர் கருத்துக்களை வழங்கினார்கள்.

1986 ஆம் ஆண்டு மே திங்கள் 6-ம் தேதி அன்று இரவு விருகம்பாக்கம் காவல் நிலைய குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் திரு ஜோசப்பா மேலும் இரு காவலர்கள்,இன்பார்மர் லீலாராமன் இவர்கள் அரசாங்க வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஸ்டாண்டர்ட் 20, டி.எம்.பி. 5559 என்ற வாகனத்தில் ரோந்து சுற்றி வந்தனர். அமாவாசை காலம் நெருங்குவதன் காரணமாக இடைவிடாத காவல்துறை ரோந்து சுற்றிவரவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. இரவு சுமார் 3.00 மணிக்கு மேற்படி காவல் துறையினர் விருகம்பாக்கத்தில் உள்ள காமராஜர் சாலை வழியாக செல்லும்போது இரு நபர்கள் ஒரு சைக்கிளில் அகால நேரத்தில் வருவதைக் கண்டு மேற்படி காவல் துறையினர் அவர்களைங் நிறுத்த சொல்லவே மேற்படி இருநபர்களும். ஓட்டி வந்த சைக்கிளை போட்டுவிட்டு வி. பி. தசரதன் தெருவை நோக்கி ஓடினார்கள். மேற்படி வாகனத்தில் வந்த இரு காவலர்களும் மேற்படி ஓடிய நபர்களை ஒருபுறமாக துரத்தி, ஓட, உதவி ஆய்வாளர் மேற்படி ஸ்டேட் பாங்க் காலனி மூன்றாவது தெரு வழியாக வந்து அபுசாலிரோட்டில் ஏறி வடபுறம் நோக்கி போகும்போது பின்புறத்தில் இருந்து படபடவென வெடி சத்தம் கேட்கவும், மேற்படி வாகனத்தில் வலது இடது புறக் கண்ணாடிகள் உடையவும் செய்தது. வாகனத்தின் பின்பக்கம் தசரதன் சாலை அபுசாலி தெருவை சேரும் இடத்தில் சுமார் 15 நபர்கள் நின்றுகொண்டு இருப்பதை உதவி ஆய்வாளர் பார்க்கின்றார். மேற்படி வாகனத்தின் டிரைவர் திரு. பழனி வண்டியை வேகமாக ஓட்டி தெருவின் திருப்பத்தில் திருப்பியதால் மேற்படி வாகனம்அங்குஇருந்த சேற்றில் அமுங்கி நின்று விட்டது. வாகனம் அங்குஇருந்த சேற்றில் அமுங்கி ஓட முடியாத நிலையை அடைந்து விட்டதால் வாகனத்தை அவ்விடத்தில் விட்டுவிட்டு உதவி ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்தார். மேற்படி இரு நபர்களை துரத்திக்கொண்டு சென்ற காவலர்கள் இருவரும் மேற்படி ஓடிய நபர்கள் மறைந்துவிட்டதால் விருகம்பாக்கம் காவல் நிலையத்திற்கு மேற்படி இரு நபர்களும் விட்டுச் சென்ற சைக்கிளுடன் வந்தனர். சுமார் 3.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு இச் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்க அலுவலகத்தில் இருந்து திரு. ராஜன் என்பவர் தான் தொலைபேசி எண். 423658 டெலோ ஆபீஸில் இருந்து பேசுவதாகவும், தங்களுடைய ஆட்கள் இருவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்களை பிரபாகரன் குழுவைச் சேர்ந்தவர்கள் வேனில் வந்து துரத்தியதாகவும் தாங்கள் துப்பாக்கியால் மேற்படி வேனை சுட்டு விட்டதாகவும், உடனே அதிகாரிகளுடன் வரவும் என்று கூறவே, தொலைபேசியில் பேசிய காவலர்



மேற்படி வேன் போலீஸ் வேன் என்றும், அதில் வந்தவர்கள் விருகம்பாக்கம் காவல் துறையினர் என்று கூறவே மேற்படி தொலைபேசியில் பேசிய ராஜன் மேற்படி போலீஸ்காரரிடம் தெரியாமல் அது நடந்துவிட்டது என்றும் அதற்கு மன்னிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். மேலும் சில காவலர்களுடன் சென்று அந்த வாகனம் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இச்சம்பவம் காரணமாக குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் கொடுத்த புகாரின் மீது விருகம்பாக்கம் குற்ற எண். 348/86 பிரிவு 307 இ.பி.கோ. மற்றும் 25(1) (எ) இந்தியன் ஆம்ஸ் ஆக்டின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விருகம்பாக்கம் ஆய்வாளர் விசாரணை செய்து வருகிறார்.

விருகம்பாக்கம் காவல் நிலையத்தைச் சேர்ந்த பாஸ்கரன் காலனி, வெங்கடேஷ் நகர், சின்னமயா நகர், காந்தி நகர், ஜானகி நகர் ஆகிய இடங்களில் டெலோ குரூப்பைச் சேர்ந்தவர்கள்தான் உள்ளனரே தவிர, வேறு எந்த பிரிவைச் சேர்ந்தவர்களும் இங்கு கிடையாது. மேலும் செய்தித் தாளில் வந்தது போன்று துப்பாக்கிகளுடன் லிபரேஷன் டைகர்ஸ் ஆப் டமிள் ஈழம் (எல்.டி.டி.ஈ.) காரர்கள் காரிலும், லாரியிலும் வந்து சுமார் 10 நிமிட நேரம் துப்பாக்கி சண்டை செய்து டெலோ அலுவலகத்தை தாக்கியதாக கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இதன் காரணமாக மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் எவ்விதமான தடையங்களோ, அக்கம் பக்கத்தில் இருந்த வீட்டுக்காரர்களை விசாரித்ததில் இருந்து எந்தவிதமான சாட்சியமும் கிடைக்கவில்லை.

இதன் காரணமாக இடைவிடாத காவல் பாதுகாப்பும் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு அச்சுறுத்துகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அன்றைக்கு ஏற்பட்டது பிரபாகரன் குழுவினருக்கும் இந்த 'டெலோ' குழுவினருக்கும் சண்டை நடந்ததாக கூறுவது தவறு என்றும், ஆக, பிரபாகரன் குழுவினர் யாரும் அங்கு வரவில்லை என்றும், எதுவும் செய்யவில்லையென்றும், இந்த போலீசார் சென்ற வேனை தவறாக நினைத்துக் கொண்டு அவர்கள் சுட்டார்கள் என்றும் இப்போது செய்தி வந்திருக்கிறது. இருந்தாலும்கூட, இலங்கையிலே ஏற்பட்டிருக்கிற அந்த மாச்சரியம் இங்கேயும் ஏற்படக்கூடும். இங்கேயும் அந்தக் குழுவினர் எல்லாம் தனித்தனியாக இருக்கிறார்கள், அந்த மாச்சரியத்தினுடைய அடிப்படையிலே இங்கேயும் வன்முறைச் செயல்கள் நிகழாத அளவுக்கு தீவிரமான காவல் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதோடு மட்டும் அல்லாமல் அவர்கள் வாழ்கிற பகுதிகள் எது எதுவோ அங்கே ரோந்து தன்மைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஆகவே உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்கவும் காவலர்கள் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு உண்மை நிலையை மட்டும் இப்போது நான் உணர்த்த விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சனை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆகவே இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் காவிரி நீர் பிரச்சனை சுமூகமாக தீர்க்கப்பட்டு அதன் மூலம் தமிழகம் நியாயமான அடிப்படையில் பெற வேண்டிய நீர் தஞ்சை மாவட்டம் காவேரி நீர் மூலமாக பெற வேண்டும் என்பது தான் நோக்கம்.

1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் தான் நமக்கு கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதில் எல்லா அரசியல் கட்சியினரும் ஒரு மித்த கருத்தில் நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கூட, கூடுதலாக தண்ணீர் வரும்போது அந்த தண்ணீரை எந்த வகையில் பிரித்துக்கொள்ளலாம் என்பதை பற்றித் தான் 50 ஆண்டுகள் கழித்து பேசிக் கொள்ளலாம் என்று இருக்கிறதே தவிர இந்த ஒப்பந்தம் முழுவதும் மறுபடியும் திருப்பி பேசி எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று பேசுவதற்கு அல்ல, 1924 ஆம் ஆண்டு அறிக்கை. அதை எடுத்துச் சொல்லும்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அது மகாராஜா காலத்தில் போடப்பட்ட ஒன்று, அதற்கு இந்த மக்கள் ஆட்சி காலத்தில் மதிப்பு தரவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி விட்டு அவர்கள் வெள்ளைக்காரன் காலம், மகாராஜா காலம் என்று சொல்லி தன்னிச்சையாக சில பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுவது போல் அப்படிப்பட்ட கருத்துக்கு நாம் ஒரு நாளும் இடம் கொடுக்க முடியாது. இடம் கொடுத்தால் நம்முடைய தஞ்சை மாவட்டம் தமிழகத்தினுடைய பகுதிகள் பெரும் அளவு பாதிக்கப்படும். ஆகவே தமிழகத்தில் இருக்கிற நாம் அத்தனை பேரும் நாம் எப்படி ஒரு சேர இருக்கிறோமோ அதேபோல் கர்நாடகாவில் இருக்கிற அவ்வளவு கட்சியும் ஒரு சேர இருந்து அந்த கருத்துக்கு ஆதரவு இருக்கிற அளவுக்கு சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால் பேச்சு வார்த்தை மூலம் இது தீர்க்கப்படவேண்டும். நீங்களே பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று அவர்கள் சொல்லுவது மாதிரி மத்திய அரசு தலையிட்டு உடனடியாக தீர்ப்பதற்கு முயற்சிகளை எடுத்து கொண்டால் இது விரைவுபடுத்தப்படும். அவர்கள் திரும்பத் திரும்ப நீங்களே பேசுங்கள், நீங்களே பேசுங்கள் என்று சொல்லுகிறார்கள். வாதியும், பிரதிவாதியும் எந்த வழக்கில் எப்போது தீர்வு காண முடிந்தது. ஒரு பக்கத்தில் அவர்கள் வாதி, பிரதிவாதி என்று இருக்கும் போது பிரச்சனை மீண்டும் மீண்டும் பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று ஒத்தி வைத்துக் கொண்டே போகிறது. அடுத்த கட்டம் மத்திய அரசு வந்து உட்கார்ந்து பிரச்சனையை தீர்த்தால் ஒழிய வேறு என்ன சட்டப் பிரச்சனை என்று தான் கவனிக்கவும் வேண்டும். வேறு வகையில் செல்லவேண்டும். மான்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்த கருத்தின் அடிப்படையில் தான் இந்த முயற்சிகள் மேலும் எடுக்கப்படுகின்றன என்பதை எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன்.



மேலும் ஒன்று, ஆண்டுக்கு ஆண்டு நாம் ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள் மற்றவர்கள் நலன்கள் கருதி நாம் சில பல பண்டங்களுக்கு வரிகளை எல்லாம் நீக்கியிருக்கிறோம், சிலபல பண்டங்களுக்கு வரியை குறைக்கிறோம், ஓரளவுக்கு அவர்களுக்கு நலம் ஏற்படவேண்டும் என்பதற்கும், விலை குறைய வேண்டும் என்பதற்கும். குறைந்த விலையில் வாங்க வேண்டும், அன்றாடம் புழங்கவேண்டிய, ஏழைகளுக்கு பயன்படவேண்டிய சாமான்கள் என்று சொல்லி அந்த அளவுக்கு சில பல இழப்புகள் ஏற்பட்டாலும் இந்த ஆண்டு 20 கோடி ரூபாய்க்கு இழப்பு வந்தாலும் அவற்றை நாம் தாங்கிக் கொள்ளலாம் என்று இருந்தாலும் கூட், அதை சிலபேர் கடைப்பிடிக்கவில்லை என்ற செய்தியை அண்மையில் நான் தினமணி இதழில் கண்டேன். அப்படிப்பட்ட நிலைக்கு இடம் கொடுக்கக்கூடாது. நான் பொது விவாதத்திற்கு பதில் சொல்லும்போது சொன்னேன், அதனை பயன்படுத்தி ஓரளவுக்கு இந்த விலைவாசி குறைவு ஏழை எளிய பொது மக்களுக்கு நன்மை செய்யா விட்டால் உள்ளபடியே அரசு பணத்தை இழந்து இந்த வரி போடுவதன் மூலம் வருகிற பணமும் இதை நடத்துகின்றவர்களுக்கு போகின்ற சூழ்நிலையும் ஏற்படுமானால் ஏமாந்தவர்கள் அரசைச் சார்ந்தவர்களாகவும் அதில் அதிகமான 'லாபம் சம்பாதிப்பவர்கள் வியாபாரிகளாக அமைந்து விடக்கூடாது. ஆகவே அதில் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கவனம் எடுத்து வணிக வரித் துறையின் மூலமாக இப்படி நாம் வரியை குறைக்கலாம் என்று கேட்டால் ஏற்கனவே மக்கள் வாங்குகிற விலைகள் குறையவேண்டும். ஆனால் அவர்கள் சொல்லியிருக்கிறபடி இங்கே எடுத்துப் பார்த்தால் வாளி மற்றவை எல்லாம் போய் வாங்குகிற போது ஏற்கனவே விற்ற விலையை விட 4 ரூபாய் 5 ரூபாய் அதிகமாக விலைக்கு சிறிய கடையில் விற்கிறார்கள். ஏற்கனவே வரி கொடுத்தபோது வாங்கின விலையை விட கூடுதலாக ஆக்கியிருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் வரி கொடுப்பது வேறு, நாங்கள் விலையை ஏற்றுவது வேறு என்று சொல்லியிருக்கிறார்கள் என்று எல்லாம் அதில் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கவும் வேண்டும். ஆகவே இந்த வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி கவனம் செலுத்துவதாக சொல்லியிருக்கிறார்கள். அந்தத் துறையைக் கொண்டு ஒரு பாலோ அப் வைத்து இதை எல்லாம் நாம் போட்ட வரியினுடைய பலன்கள் பொதுமக்களை போய்ச் சேருகின்றதா என்று கண்டு கொண்டு, சேரவில்லை என்றால் அதற்கான தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 2-00,

இல்லாவிட்டால் நம்முடைய கொள்கையை மாற்றி அடுத்த ஆண்டிலாவது, மறுபடியும் வரியைக் கொண்டு வருவதற்காகவாவது முயற்சி செய்ய வேண்டும். அந்த அளவிற்காவது அவர்களை எச்சரிக்க வேண்டும். இன்றைக்கு இந்த வணிக, வர்த்தக

சங்கங்கள் எல்லாம் ஒரு 'கோட் ஆப் காண்டக்ட்' என்று வைத்துக் கொண்டு, அவர்களை கட்டுப்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவார்களேயானால், அவர்களுக்கும் நல்லது. பொதுமக்களுக்கும் நல்லது. மற்றவர்களுக்கும் நல்லது என்பதை எடுத்துச் சொல்லி வேறு பல முக்கியமான கருத்துக்கள் பலவற்றையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இங்கே வரி வசூல் செய்வது பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துக்கள் வந்திருக்கின்றன. அதனுடைய அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தக் கூட்டுறவுக் கடன்களை தள்ளி வைப்பது பற்றி எடுத்து சொல்லியிருக்கிறார்கள். இன்றும் நேற்றும் நடந்த, பேசிய பேச்சுக்களிலிருந்து தக்க முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

ஜப்தி செய்வது, மற்றவைகள் சட்டத்தில் இருக்கிற ஒன்று. செய்யாதே என்று சொலவதற்குத் தான் நாம் உத்தரவு போட வேண்டுமே தவிர, வரி வசூலிக்க ஒரு வசதி கிடைக்காவிட்டால், என்ன செய்ய வேண்டும் என்பதற்கு எல்லாம் சட்டத்திலே ப்ரொவிஷன்ஸ் இருக்கின்றன. இதைச் செய்ய வேண்டாம் என்று சொல்வதற்குத்தான் நாம் உத்தரவிட வேண்டும். அந்த வகையில் ஏழை எளியவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் மிகவும் கொடுமைப்படுத்த வேண்டுமென்பது அரசினுடைய நோக்கமல்ல. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சில பல தன்மைகளையெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். ஆக அது நோக்கமல்ல. வசூல் வாய்ப்பை பெறுகின்ற காலம் வரையிலும், இப்படிப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்த வரையிலும், ஏழை எளியவர்கள், பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அந்தக் கடன்களை தள்ளி வைப்பதற்கான முயற்சிகளையும் எந்தெந்த வகையிலே செய்யலாம் என்பதையும் கூட்டுறவுத் துறையினர் இதைப்பற்றி சிந்திப்பார்கள் என்பதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நில வரி வஜா செய்வதைப் பற்றி ஏற்கனவே அறிக்கை வந்ததைப் பற்றி சொன்னேன். சில பல மாவட்டங்களில் இருந்து வந்து கொண்டிருக்கின்றன. இன்று, நேற்று எடுத்த முடிவுகளின் அடிப்படையில், விரைவில் அதற்கு தீர்வு காணப்படும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த விவாதங்களிலே இந்த மானியக் கோரிக்கைகளின் விவாதங்களிலே எல்லாம் கடைசி வரையில் இருந்து கலந்து கொண்டு, கருத்துக்களை பொறுப்பு உணர்ச்சியோடு கடமையுணர்ச்சியோடு சில பல முகங்களை நான் திரும்ப திரும்ப பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஏறத்தாழ இங்கே வீற்றிருக்கிறவர்களைத் தான் திரும்பத் திரும்ப நாம் பார்க்கிறோம். எனவே இவர்களோடு இந்த சட்டமன்றத்தை முடித்து விட்டாலும் கூட நல்லது என்று தான் கருதுகிறேன்.



ஆகவே இவர்கள் மட்டுமே போதும் இந்தக் சட்ட மன்றத்திற்கு என்ற முடிவு எடுத்துக் கொண்டாலும் நல்லது. ஆனால அக்கறையோடு வர வேண்டும், பொதுமக்களின் பிரதிநிதிகளாக வருகின்றவர்கள் கடைசி வரையில் இருந்து இந்தப் பணிகளை நிலை நாட்டுவது தான் எல்லோருக்கும் பொருத்தமாக இருக்கும். நன்றாக அமையும், அந்த வகையில்தான் மக்களுக்கும் திருப்திகரமாக அமையும். ஏனென்றால் 365 நாட்களிலே 60 நாட்கள் தான் அல்லது 70, 80 நாட்களுக்கு மேலே கூடுவது இல்லை. இந்த 60, 70 நாட்கள் கூட 5 மணி நேரம், ஒரே ஒரே தடவையாக உட்கார வேண்டாம். போய்விட்டு, போய் விட்டு வந்து இங்கே உட்காரலாம். முடியும்போதாவது இருந்து முடிக்கிற அளவிற்கு இருப்போமேயானால், என்னென்ன கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள் என்று கேட்கிற சூழ்நிலை ஏற்பட்டால் ஒரு தெளிவு ஏற்படும். உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற தன்மைகளின் அடிப்படையிலே தான் அமைச்சர்களும் எச்சரிக்கையாகவே இருக்க முடியும். அமைச்சர்களும் எச்சரிக்கையாக இருந்து, நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத் தான் துறை அதிகாரிகளும், மற்றவர்களும் எச்சரிக்யையாக இருந்து, நடவடிக்கை எடுப்பார்கள். நமக்கு என்ன, நமக்கு என்ன என்றால், மேல் மட்டத்திலிருந்து கடைசிவரையில், நமக்கென்ன நமக்கென்ன என்று தான் இருப்பார்கள். நமக்கென்ன நமக்கென்ன என்று அதிகாரிகள் இருப்பார்களேயானால், நாடும் தனக்கென்ன, தனக்கென்ன என்று தான் இருக்கும். ஆக அந்த நிலைகளுக்கு எல்லாம் ஆளாகாமல் இருக்கவேண்டும் என்றால, அதற்குப் பேருதவி புரிய வேண்டியவர்கள் பேரவை உறுப்பினர் பெருமக்கள், ஆக பெரும்பாலான உறுப்பினர்கள் அக்கறையோடு ஆர்வத்தோடு கடைசி வரையில் இருந்து இந்த விவாதங்களில் எல்லாம் கலந்து கொள்ள வேண்டுமென்று ஆர்வத்தோடு, கருத்துக்களையெல்லாம் வழங்கி இருப்பவர்கள் அத்தனை பேருக்கும் நான் அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் சொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்கள் எல்லாம் வந்து உட்காருகிறார்களோ, இல்லையோ, ஆனால் நிருபர்கள் எல்லாம் ஒழுங்காக வந்து ஒரு இடம் கூட காலி ஏற்படாத அளவிற்கு, தினமும் அந்த இடத்தை நிரப்புகிறார்கள் என்பதிலே எனக்கு மெத்த மகிழ்ச்சி. அவ்வளவு பேரும் அந்த இடத்தில் காலி ஏற்படாத அளவிற்கு உட்காருகிறார்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களும் வர வேண்டும், அமைச்சர்களும் வர வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் கடைசி வரையில் இங்கே இருக்கவும் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒருநாள் தவறாமல் எல்லா நாட்களிலும் நான்தான் 9-00 மணிக்குவந்து ஆரம்பித்து இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இலக்கணம் சொல்கிறேன். அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் வர வேண்டும் என்பதைத்தான் நானும் வலியுறுத்து கிறேன். ஆனால் அமைச்சர் பெருமக்கள் அவ்வளவு பேரும் அத்தனை நேரமும் இருக்க வேண்டுமென்றாலும், அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், பலவேறு பிரச்சனைகளை இடையிடையே கவனிக்க வேண்டியிருக்கிறது. இடையிடையே கவனிக்க வேண்டிய தன்மையிலே இருக்க வேண்டியவர்கள் சென்று விட்டால், நான் முதலில் சொல்லியது மாதிரி, மறுபடியும் திரும்ப இந்த அவைக்கு வந்து இருந்து, இந்த அவைக்கு மதிப்பு ஏற்படுகிற அளவிற்கு, அவைக்கு ஒரு மரியாதை கொடுக்கப்படுகிற அளவிற்கு, இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

அதேபோன்று நிருபர்கள் பெருமக்கள் இந்த அவையிலே எவ்வளவுதான் பேசினாலும் கூட, எவ்வளவு தான் கருத்துக்களை அரசு சார்பிலே எடுத்து வைத்தாலும், நாட்டு மக்கள் முழு வதற்கும் கொண்டு போய்ச் சேர்க்கின்ற அத்தகைய பெரும் பொறுப்பை, பத்திரிகைகள், செய்தித் தாள்கள் ஏற்றுக் கொண்டி ருக்கின்றன. ஆகவே, அந்தச் செய்தித் தாள்களிலே அந்தச் செய்திகளை எல்லாம் ஒழுங்குற வெளியிட்டு, முழுவுற வெளி யிட்டு, குறைபாடுகள் இல்லாமல், வெளியிட்ட அத்தனை செய்தி யாளர்களுக்கும், செய்தித் தாள்களுக்கும் என்னுடைய முழு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அரைகுறையாக வெளி யிட்டவர்களுக்கு என்னுடைய அரை நன்றியைத் தெரிவித்துச் கொள்கிறேன். சிலபேர் வந்து, எவ்வளவு நல்லது நடைபெற் றாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், ஏதாவது ரசப்பா விதம் நடைபெறாதா? இன்றைக்கு ஏதாவது நடக்கிறதா என்று அதற்காகவே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்படாவிட்டாலும், அவர்களும் வந்து உட்கார்ந்திருக்கிறார்களே, கடைசிவரையிலும் என்பதற்காக அவர்களுக்கு ஒரு கால் நன்றியைத் தெரிவித்து விட்டு, எல்லோ ருக்கும் பெருமகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்து இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவை நிறைவேற்றித் தரும்படி அவையை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வாய்தா, வரி, கூட்டுறவுச் சங்கங்களுடைய பாதிப்பு பற்றி எல்லாம் அறிக்கை தயாரித்துக் கொண்டிருப்பதாகச் சொல் கிறார்கள். ஆனால் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே அரசாங்கமே 14 தாலூகாக்கள் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்



பட்ட பின்னாலே கூட, உற்பத்தி இல்லாத 14 தாலூகாக்களில் கூட்டுறவுச் சங்கத்தினுடைய கடனை வற்புறுத்தி வருகிறார்கள். தொந்தரவு கொடுக்கிறார்கள், ஜப்தி எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம், தொடர்ந்து ஒத்தி வைத்த காரணத்தினால், வசூலை 7, 8 முறை ஒத்தி வைத்து விட்ட காரணத்தினால், கடன்கள் 'அக்குமலேட்' ஆகி இன்றைக்கு அதிகமான வட்டிச் சுமையை தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்வது, கடன் சுமையைத் தள்ளுபடி செய்யாவிட்டாலும் கூட, அந்தக் கடனை கன்சாலிடேட் பண்ணி இத்தனை ஆண்டு களுக்குள் கொடுக்க வேண்டும் என்று, வட்டிகளாகப் போட்டிருக்கிற வட்டிகளை எல்லாம் தள்ளுபடி செய்து, அதையும் பெரிய விவசாயி என்று பார்க்காமல் எல்லா விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்தமான கடன்களைக் கூட்டி, இத்தனை ஆண்டுகளுக்குள் கட்ட வேண்டும் என்று நிர்ண யித்து, வட்டிகளைத் தள்ளுபடி செய்ய உதவுவீர்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி ஏற்கனவே சில பல முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்பு மிகு உறுப்பினர் கூறிய கருத்தின் அடிப்படையில் இது முறைப்படி ஆராயப்பட்டு எந்த வகையில் வசூல் செய்கின்ற தன்மையை தவணை முறையிலோ, வேறு பல வகைகளில் செய்ய இயலும் என்பதையும் ஆராய்ந்தறிந்து இந்தத் துறை நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளித்த போது, ஜப்தி நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், கனி வோடும், பரிவுணர்ச்சியோடும் பரிசீலிப்பது போன்ற ஒரு தொனி தெரிந்தது. நான் அவர்களிடம் விளக்கம் பெற விரும்புவதே, குறு நில விவசாயிகள் மற்றும் சிறு நில விவசாயிகளிடமிருந்து ஜப்தி செய்யப்பட்ட உடைமைகள் திருப்பி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை எல்லாம் முறைப்படி ஆராயப்பட்டு, முறைப்படியான நடவடிக்கைகளை மேற்கொள் ளலாம்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, ஏற்கனவே இந்த குடிநீர் வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைக் காட்டிலும், வறட்சிக்காக 13 கோடி ரூபாய்

உடனடியாக செலவழிப்பதற்காக இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் செலவழிக்கப்படுகிறபோது அந்தப் பகுதிகளுக்கேற்ப அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப அந்த வேலைகளைச் செய்யவேண்டும். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், 'ரிங் வெல்ஸ்' என்று சொல்கிற கிணறுகளைத்தான் அதிகமாகப் போடவேண்டும். அதற்குத்தான் ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று அரசுத் தரப்பிலே சொல்வதாகச் சொல்கிறார்கள். ஆனால் ரிங்வெல்ஸ்-என்பது மணல் பாங்கான பகுதிகளிலே தான் முடியும். ஆகவே, ஹேண்ட்-பம்ப் பல இடங்களில் மிக அதிகம் தேவைப் படுகிறது. அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்வதற்கு ஆங்காங்கே மாவட்ட கலெக்டர்களே, அங்குள்ள சூழ்நிலைகளுக் கேற்ப நிதியைப் பயன்படுத்தவும், திட்டங்களை மேற்கொள்ளவும் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று எல்லாம், தொழில் நுட்பத்தைப் பொறுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாக இருக்கின்றன. அந்தக் கருத்துக்களுடைய அடிப்படையில், எது சரியோ, எது முறையோ, அதை ஆராய்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் இந்தத் துறையினர் மேற்கொள்ளுவார்கள் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ச, கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கும் 'பேக்வேர்டு கிளாஸ் கமிஷனுடைய' அம்பா சங்கர் தலைமையிலான கமிஷன் அறிக்கை இந்த சபையில் வைக்கப்படுமா ? அதை வைப்பதில் ஏன் இந்தத் தாமதம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் ?-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசங்கர் அறிக்கையை இன்னும் அரசே ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலையில் இருக்கிறது. அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அரசு அதில் ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு, இன்ன முடிவு எடுத்தது என்ற பிறகு, அவைக்கு வைக்கலாம். அது வரையில் அரை குறையாக வைத்தால் சரியாக இராது. அதிலே குறிப்பிட்டுள்ள மிக முக்கியமான ஒன்றை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கனவே இருந்த முறையை நடைமுறைப்படுத்துவது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். அதற்குப்பிறகு அதையெல்லாம் ஆராய்ந்து, வேறு சில பரிந்துரைகள் மற்றவைகள் ஏற்று கொள்ளப்படக் கூடியவைகளாகஇருந்தால் அவற்றைத் தொகுத்து வந்ததற்குப் பிறகு வேண்டுமென்றால் இந்த அவைக்கு வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் வறட்சி பற்றியும், வரி வஜா பற்றியும் மாவட்ட ஆட்சியாளர், அதிகாரிகள் ஆகியோர் கலந்து பேசி முடிவு செய்வார்கள் என்று சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமங்கலம், உசிலம்பட்டி ஆகிய பகுதிகளில் நடத்தப்படுகின்ற கெடுபிடி வசூல் நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் மற்றவர்கள் மட்டுமல்லாமல்,ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருஅமைச்சரே பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு அமைச்சர் பொறுப்பேற்று இந்தப் பணிகள் சிறப்பாகவும், முறையாகவும் நடைபெற வேண்டும். ஜப்தியைப்பற்றிச் சொன்னார்கள். ஆராய்ந்து பார்த்து, முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று குறிப்பிட்டு இருக்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : அவைத் தலைவரவர்களே, ஒரு சின்ன கேள்விதான். மதுரை மருத்துவக் கல்லூரியில் போலீசாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் நடந்த மோதலை ஒட்டி சோலையார் கமிஷனால் விசாரணை நடத்தப்பட்ட, பரிந்துரையும்கூட, சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி. அப்படி அறிக்கை கிடைத்து விட்டதா ? கிடைத்தது என்றால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. வேண்டுமென்றால் குறுகிய கால கேள்வி போட்டால் கூட விவரங்கள் தரலாம்.

திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை தவறியதால் கடுமையான வறட்சி ஏற்பட்டு, சேலம் மாவட்டத்திலே குடிதண்ணீருக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அரசு குடிதண்ணீருக்காக முன்னுரிமை கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்தாலும்கூட, ரிக்ஸ் இல்லாத காரணத்தினால் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட முடியாமல் பணிகள் தடைப்பட்டிருக்கின்றன. எனவே, உடனடியாக அரசு முன்வந்து புதிய ரிக்ஸ்களை வாட்டர் போர்டுக்கு கொடுக்கின்ற முயற்சியை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். அவ்வாறு செய்து ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர் தர வேண்டும், எந்தெந்த இடங்களிலே எந்தெந்த வகைகளிலே செய்து தர வேண்டும் என்று முடிவெடுத்ததற்குப் பிறகு, அதில் இருக்கின்ற

ஏற்பாடுகளைச் செய்வதற்கு உள்ள இடர்ப்பாடுகள் மற்றவை களையெல்லாம் சமாளிக்க வேண்டும். அது போதவில்லை என்றால்—இந்த மாநிலத்தில் இல்லையென்றால் பிற மாநிலங் களிலேயிருந்தாவது வாடகைக்கு வரவழைக்க வேண்டும். கர்நாடகத்திலிருந்து வரவழைக்கலாம் என்றால் அங்கேயும் வறட்சி நிலைமை இருக்கிறது, எனவே, அங்கிருந்து வரவழைக்க முடியாது. ஆந்திராவில் வறட்சி இல்லை என்றால் அங்குள்ள ரிக்ஸ்களை வரவழைக்கலாம், அப்படிப்பட்ட முயற்சிகளிலே ஈடு படலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

''தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36 1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1986) நிறைவேற்றப் பெற வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 10—5—1986 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்திவைக்கப் [illegible]



## 6 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்,

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

87. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (துணைத் தலைவர்தேர்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளிட்ட 148 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35-1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

88. அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தாலுகாவைச் சார்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங் களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 1985 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ம் நாளிட்ட 883 ம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

89. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 1985ஆம் ஆண்டு சூலை திங்கள் 2 ம் நாளிட்ட 1592 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1939 ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4 /1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

90. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1982—83ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4-1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

91. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1984—85ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

எதுவுமில்லை.

## இணைப்பு

( 24-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 639 (645) க்கான விடையைக் காண்க.)

அ மற்றும் ஆ. விவரம் வருமாறு.

(1) இந்து ஆதி திராவிடர்களுக்கான திட்டம் :

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான சிறப்பு உள்ளடக் கத்திட்டம் தீட்டப்பட்டு 1980-81 ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதில் ஓர் அம்சமாக கூட்டு கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் ( Cluster Development) Programmes செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு சிறப்பு நிதி உதவி ( Special Central Assistance) அளித்து வருகிறது, இந்த சிறப்பு மத்திய உதவித்தொகை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம் பாட்டுக் கழகத்திற்கு அளிக்கப்படுகிறது. அக்கழகம் அத் தொகையை மேற்படி திட்டங்களை செயல்படுத்தும் துறைகளுக்கு அளிக்கிறது. மாவட்டத்திற்கு ஒரு ஒன்றியம் வீதம் 1982-83-ல் 15 ஒன்றியங்களும் 1984—85-ல் 15 ஒன்றியங்களும், 1985—86-ல் 15 ஒன்றியங்களும், தேர்ந்தெடுக்கப்பட்டு மேற்படி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

| | மாவட்டம். | 1982—83 |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு .. | .. மீஞ்சூர். |
| 2. | வட ஆற்காடு .. | .. நெமிலி |
| 3. | தர்மபுரி .. | .. அரூர் |
| 4. | சேலம் .. | .. சேந்தமங்கலம் |
| 5. | பெரியார் .. | .. வெள்ளக்கோயில் |
| 6. | கோவை .. | .. பெரியநாயக்கன்பாளையம் |
| 7. | நீலகிரி .. | .. குன்னூர். |
| 8. | தென்னாற்காடு | .. மங்கலூர் |
| 9. | திருச்சி | .. வேப்பூர். |
| 10. | தஞ்சாவூர் .. | .. கொள்ளிடம் |
| 11. | புதுக்கோட்டை | .. விராலிமலை |
| 12. | இராமநாதபுரம் | .. கமுதி |
| 13. | மதுரை .. | .. வேடசந்தூர் |
| 14. | திருநெல்வேலி | .. ஒட்டப்பிடாரம் |
| 15. | கன்னியாகுமரி | ... அகஸ்தீஸ்வரம் |



| | மாவட்டம் (1) | 1984—85 (2) | 1985—86 (3) |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | அச்சிறுபாக்கம் | ஸ்ரீ பெரும்புனர் |
| 2 | வட ஆற்காடு | செங்கம் | வந்தவாசி |
| 3 | தர்மபுரி | பாப்பிரெட்டி பட்டி | மொராப்பூர் |
| 4 | சேலம் | தலைவாசல் | சங்கரி |
| 5 | பெரியார் | அந்தியூர் | தாராபுரம் |
| 6 | கோவை | அன்னூர் | அவிநாசி |
| 7 | நீலகிரி | உதகை | கோத்தகிரி |
| 8 | தென்னாற்காடு | உளுந்தூர் பேட்டை | வானூர் |
| 9 | திருச்சி | ஜெயம்கொண்டம் | உப்பிலியாபுரம் |
| 10 | தஞ்சாவூர் | வலங்கையம்மான் | கோட்டூர் |
| 11 | புதுக்கோட்டை | கரம்பக்குடி | கந்தர்வக்கோட்டை |
| 12 | இராமநாதபுரம் | காளையார்கோயில் | இராமநாதபுரம் |
| 13 | மதுரை | நிலக்கோட்டை | ஆண்டிப்பட்டி |
| 14 | திருநெல்வேலி | நான்குநேரி | சங்கரன்கோயில் |
| 15 | கன்னியாகுமரி | தோவாளை | குருந்தன்கோடு |

2. மேற்கண்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும் சில முக்கிய திட்டங்களாவன :

1. கிராமிய நூற்பு நிலையம்.
2. நேபாளித்தறி.
3. பாய்முடைதல்.
4. கையினால் காகிதம் செய்தல்.
5. காலணிகள் செய்தல்.
6. கல்லுடைக்கும் அலகுகள் நிறுவுதல்.
7. பட்டு வளர்த்தல்.
8. ஊரக நெசவு.
9. பீடி தயாரித்தல்.
10. செங்கல் தயாரித்தல் முதலியன.

3. மேற்கண்ட திட்டங்கள், கதர் மற்றும் கிராமக் கைத் தொழில்துறை, கதர் மற்றும் துணி நெய்தல் துறை, கூட்டுறவுத் துறை, தொழில் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4. 1982—83-ம் ஆண்டில் இத்திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 8·12 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனா 9,719 ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். 1984ல்—85-ல்

136489
600 008



இத்திட்டங்களுக்காக ரூ. 5.59 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களினால் 7,025 ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைவர். 1985–86-ம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக இரண்டு ஒன்றியங்கள் அதாவது தஞ்சாவூர் மாவட்டத்தில் கோட்டூர் ஒன்றியத்திற்கும் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி ஒன்றியத்திற்கும் ரூ. 5·00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 125 ஆதி திராவிட குடும்பங்கள் இந்த இரண்டு ஒன்றியங்களிலும் பயனடைவார்கள். மீதமுள்ள 13 ஒன்றியங்களில் இத்திட்டங்களை செயல்படுத்த ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரிடமிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகிறது.

(2) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு தமிழ்நாட்டில் பழங்குடியினர் அதிகமாக வாழும் 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இப்பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் 1976–77-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகின்றன. மேற்கண்ட பகுதிகளில் வாழும் பழங்குடியினர்களை வறுமைக் கோட்டை தாண்டச் செய்வதுதான் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

2. 1980-81-ம் ஆண்டிலிருந்து அவர்களின் மேம்பாட்டிற்காக (1) விவசாயம் மற்றும் தோட்டக்கலை, (2) கதர் மற்றும் கிராமத் தொழில், (3) கால்நடை பராமரிப்பு, (4) பட்டு வளர்ப்பு ஆகிய குடும்ப பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும், (1) கல்வி, (2) சாலை வசதி, (3) சுகாதாரம், (4) சமூக நலம், (5) மருத்துவம், (6) குடிநீர் வசதி, (7) மின்வசதி, (8) சிறுபாசனம், (9) மண்வளப் பாதுகாப்பு ஆகிய பகுதி மேம்பாட்டுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவர்களின் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 20·23 கோடியாகும். மேற்கண்ட திட்டங்களின் மூலம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 11,235 பழங்குடியினர் வறுமைக் கோட்டைத் தாண்ட வழிவகைகள் செய்யப்பட்டன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 46,979 பழங்குடியினர் வறுமைக் கோட்டைத் தாண்ட ரூபாய் 69·99 கோடி செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளன. 1985–86-ம் ஆண்டில் ரூ. 6·52 கோடி செலவில் 9,309 பழங்குடியினர் வறுமைக் கோட்டைத்தாண்ட திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன, இத்திட்டத்தின் கீழ் 1986–87-ல் ரூ. 9·46 கோடி செலவிடப்படும்.

V2111,31 N86
N86.27.1